ரிஜிஸ்டர் நெ. 2041 தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6 மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி ௵ ஐப்பசி ௴ 23௳ (8—11—1931) | மலர் 28

பலமுள்ளவீரபுருடனுக,

குமரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன
மொத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, புத்திர
பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும், சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பையிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

குஷ்டநோய்க்கு அற்புத மருந்து.

உடம்பில் தோல் நிறம் மாறித் தோல் தடித்தல், மதமதப்பு, திமிர்தினவு, இரணம் முதலியன உண்டாகி அவயவங்கள் குறைந்து அழுகுதல் முதலிய குஷ்ட நோய்களுக்கு ஓர் சிறந்த சித்த மருந்து. இது தாம்பிரம், வங்கம் முதலிய களிம்புள்ள உலோகங்களின் செந்தூர பஸ்பங்களைப்போல் கெடுதி ஒன்றுஞ் செய்யாது. கடுமையான பத்தியமில்லை.

40-நாள் மருந்து ரூபாய் 12. 20-நாள் மருந்து ரூபாய் 7.

மதிப்புரை.

எனக்குக் கால் விரல்கள் ரணமாகியும் பாதத்தில் பெரியகுழிப்புண் உண்டாகி அழுகி நீர்வடிந்து கொண்டும் சுமார் இரண்டு வருஷமாகப் பலவகை இஞ்சக்ஷன்கள் செய்தும், வைத்தியங்கள் செய்தும் குணமாகாமல் மிகக் கஷ்டமடைந்தேன். சென்னை தங்கசாலைத் தெரு, தமிழ் வைத்திய சாலைத் தலைவரும் கார்ப்பொரேஷன் கவுன்சிலருமாகிய பண்டிட் ஆனந்தம் அவர்களின் அருமையான மருந்தால் என் ரணங்கள் ஆறிக் குழிப் புண்களும் ஆறிப், பழைய நிலைமையை அடைந்தேன். என்னுடைய நோய் தீராதென்று என் உயிரையே வெறுத்துக்கொண்டிருந்தேன். பயங்கரமான என்னுடைய நோய் நீங்கி நலமடைந்தேன். என்போன்ற டலரும் போலி மருந்துகளால மோசம் போகாமல் பண்டிதர் அவர்களிடம் நோய் நீங்கிச்சுகமடையக் கோருகிறேன்.

எஸ். ராதா கிருஷ்ணன்,
1/75, திருப்பள்ளித் தெரு, சென்னை.
18—7—31

பொது ஜனங்களுக்கு எனது விண்ணப்பம்.

எனக்கு ஏற்பட்டிருந்த தோல் தடிப்பு, நிறம் மாற்றம், தினவுரணம் முதலியவைகளோடு கூடிய குஷ்டநோய்குச் சென்னை பண்டிட் ஆனந்தரின் அற்புத மருந்தைச் சாப்பிட்டு கொடியநோய் அறவே நீங்கி வலிவும் அழகும் அடைந்திருப்பதை மிக மகிழ்ச்சியுடனே அறிவிக்கின்றேன்.

இனியேனும் என்போன்ற நோயாளிகள் போலி மருந்துகளை அருந்தி மோசம் போகாமல் பண்டிட் ஆனந்தரின் அரிய மருந்துகளை உண்டு அறவே நோய்கள் நீங்கி தேகநலத்தோடும் பலத்தோடும் வாழ வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
பி. டி. சுந்தரம்,
61, படைவேட்டம்மன் கோவில் வீதி,
புரசவாக்கம், சென்னை.
18—7—31

தந்தி விலாசம்:—"மருத்துவன்."
டெலிபோன் நெ. 2584.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்,
தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி. சென்னை.

"குடி அரசு" ஏஜண்டுகள்.

N. S. கந்தசாமி, திராவிடன் ஏஜண்ட், முசிறி.
*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ், ஆண்டர்சன் பேட்டை.
*காஸ்மாபாலிட்டன் கிளப் விருதுநகர்
*A. V. பாலசுப்ரமணியம் 23, எடய தெரு, திருவாரூர்.
பி. சாமுவேல் பிள்ளை, ஜெனரல் நியூஸ் ஏஜண்ட் தூத்துக்குடி.
*எல். மாசிலாமணி பிள்ளை நியூஸ் ஏஜண்ட், பாலக்கரை திருச்சி.
S. குற்றாலலிங்கம் பிள்ளை நியூஸ் ஏஜண்ட் மீனாக்ஷிபுரம் திருநெல்வேலி.
S. P. கிருஷ்ணசாமி, நாகப்பட்டணம்.
P. பழனியாண்டி செட்டியார், நாகூர்.
T. சேத்துராயடு சித்திரக்காரத் தெரு, மதுரை.
K. கணபதி, சாக்கோட்டை கும்பகோணம்.
மானேஜர், 'புதுவைமுரசு' புதுச்சேரி.
P. R. C. எல்லப்பன், மரக்கடை வியாபாரம், கொசதெரு, காஞ்சீபுரம்.
A. S. முருகேசம், பஜார் திண்டுக்கல்.
*T. சுப்ரமணியபிள்ளை, 3, செங்கல்வாராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
A. R. M. சுந்திர பாண்டியன் கடைவீதி, அருப்புக்கோட்டை.
G. V. ராமசாமி பெரிய கடைவீதி, கரூர்
*B. ரங்கசாமி, டைலர் பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.
ஹாஜி முகமது ஷேக் உசேன், 57. சுண்ணாம்புக்காரத்தெரு, காரைக்கால்.
*M. ரத்னம், இரோசினுயில் டிபோ, நெல்லிக்குப்பம்.
C. S. ஜோசப் 159 கேவல்ரி ரோடு, பெங்ளூர் Cant
S. ராமசாமி செங்குந்தர் தெரு, துறையூர்.
முத்துசாமி நாடார் ஹைஸ்கூல், பொறையார்.
P. S. ஜீவரத்னம் பிள்ளை, 2. மலாய்வீதி, ஸ்லேவ்ஐலண்டு, கொளும்பு.
A. S. பரமசிவம் நியூஸ் ஏஜண்ட், பம்பலபிட்டியா, கொளும்பு.
எ ட் வ ர் ட் பா ல் திருமலாபுரம்
செல்வராய கவுண்டர் திருப்பத்தூர்.
*S. அப்பாதுரை மண்டி, ராசிபுரம்.
M. N. M. பாவலர் நியூஸ் ஏஜண்ட், திருப்பாபுலியூர்.
A. M. பாலசாமி குமாரசாமி செட்டி வீதி செவ்வாய்ப்பேட்டை, சேலம்.
சிதம்பரம். எம். கலியாணசுந்திர முதலியார் கதர்ஸ்டோர் மேலவீதி
சாத்தான் குளம். பெரியசாமி நாடார் ஷாப் வியாபாரம்
மாயவரம். எம். கலியாணசுந்திர முதலியார் கதர்ஸ்டோர்,
கொளும்பு. S. M. மீராமொய்தீன் 80—யார்க் வீதி, போர்ட்
K. கணபதி பிள்ளை, செட்டித் தெரு, பருத்தித்துறை.
கோட்டார். S. பூதலிங்கம், காரியதரிசி சுயமரியாதை வாசிப்புசாலை
சாத்தூர். எம். ஏ. முத்துசாமி பிள்ளை, சுப்பிரமணியசாமி கோயில் வீதி.
ஸ்ரீரங்கம். எம். கோவிந்தசாமி, கீழ் அடையவழஞ்சன் வீதி.
திருச்செங்கோடு. எஸ். கே. வரதராஜன், ஆனந்த நிலையம்.
பழனி. எஸ். என். அப்பன், சன்மார்க்கன், ஆபீஸ்.

* இந்த புள்ளியுள்ள ஏஜண்டுகளிடம் குடி அரசு பதிப்பக புஸ்தகங்களும் கிடைக்கும்.

தாதி தேவை.

சுமார் 30 வயதிற்குட்பட்டவரும், சுகாதார முறையும், சிசுக்களை வளர்த்து அனுபோகமும் தெரிந்திருக்கவேண்டும். சாப்பாட்டுடன் சம்பளமும் தரப்படும், விவரத்திற்கு எழுதவும்.

YX
C/o குடி அரசு ஈரோடு.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனுதாபர் ஆப்டோன் படங்கள், அறிய கட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம் வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

காந்தீயமென்பது
தேசத்துரோகம்.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

சகோதரி M. சீதாலெட்சுமி என்னும் கிரிஜாதேவி அவர்கள் இயற்றிய

மோகனரஞ்சினி
அல்லது
சமூகத்தோற்றம்

என்னும் சீர்திருத்தநாவல்
எளிய தமிழ்! இனிய நடை!!
சிறந்தபொருள்!!!

☞ பால்யமணம், ஆண்பெண், ஒருவருக்கொருவர் பிரியமில்லாது பெற்றோர் கட்டாயத்தின் மேல் நடத்தப்படும் மணங்களின் கதி, விதவைகளின் பரிதாபநிலை, பெண்களுக்கேற்படும் பலவிதமான துன்பங்கள், மதச் சட்டங்களின் கொடுமை, புரோகிதர்களின் வஞ்சகம், மடாதிபதி மோசம், ஜாதிக் கர்வம் முதலிய பற்பல விஷயங்கள் ஒவ்வொருவரையும் உண்மை மனிதராக்கும் சக்திவாய்ந்த இந்நாவலை சிறுவர் முதல விருத்தர் வரையிலும் அவசியம் வாசிக்கவேண்டியது. சமூக முன்னேற்றங்கருதி 230 பக்கங்கள் கொண்ட அழகிய புத்தகத்தின் விலை ரூபாய் 1—0—0.

விலாசம்:—
சி. வ. பாலகிருஷ்ணன்,
88 அவதானம் பாப்பையர்தெரு
வேப்பேரி, சென்னை.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India. Ltd., Bombay No. 10.

பிஹேவியரிஸம் = (Behaviourism) நடத்தை என்ற நவீன மன ஆராய்ச்சி.

மனமென்பதொன்றுண்டா?

(தோழர் ம. சிங்காரவேலு B. A., B. L.)

பண்டை காலந் தொடங்கி, 1912வருடம்வரை, சரீரத்திற்குள் மனம் என்பதாக ஒன்று உண்டென்றும், அந்த மனத்தினுல்தான், நாம் எண்ணுகின்றோமென்றும், நமது எண்ணம் தேகத்தோடு சம்பந்தப்பட்டிருந்தாலும், அது, தேகத்திற்கு அன்னியமென்றும், நமது மனம், நமக்குள்ளே தெரியுமே அல்லாது, பிறர் கண்ணுக்காகிலும், பிறர் பரீட்சைக்காகிலும் உட்படாதென்றும், மானஸ நூல்கள் (Pshchology) சொல்லிக் கொண்டு வந்தன. மானஸ நூலுக்கும், அதாவது, மனதைப் பற்றி பேசும் நூலுக்கும், மற்ற பூத பௌதிக நூல்களுக்கும், இதுவே வித்தியாசமாக இருந்து வந்தது. பிரபஞ்சப் பொருள்கள் யாவும், வெளிமுகமாக பார்க்கலாம். வெளி முகமாக பரீட்சிக்கலாம். வெளி முக (புற) ஆராய்ச்சிக்கு, சகல வஸ்துக்களும் உட்படுகின்றன. ஆனால், நமது எண்ணம் மாத்திரம், சூட்சமப் பொருளென்றும், கண்ணுக்குப் புலப்படக் கூடியதல்லவென்றும் சொல்லப் பட்டு வந்தது. மனமென்றால் என்ன? எண்ணமென்றால் என்ன? இதற்கு ஆதி காரணமென்று கூறப்படும் ஆன்மா, கடவுள் என்றால் என்ன? என்ற இந்தக் கேள்விகளுக்கு, உள்புகுந்து பார்த்தால் தான் தெரியுமென்று மனநூலாசிரியரும், மதஸ்தரும், மததத்துவ நூலாசிரியரும் சொல்லிக் கொண்டு வந்தனர். மனம், சித்தம், எண்ணம், ஆன்மா, கடவுள் இந்த பதங்களால் குறிக்கப்படும் பொருள் இன்னவை என்று உறுதியாக, யாரும் விண்டிலர். எனினும், இந்தப் பதங்களைப் பற்றி எழுதிவுள்ளனவும், எழுதி வரப்பட்டனவுமான நூல்கள் கோடான கோடியே. இந்த சொற்களின் மேல் கட்டிய கதைகளென்ன? எழுந்த தர்க்கங்களென்ன? ஆனால், பகிர்முக (வெளி) விசாரணையில், இந்த பதங்கள் ஒன்றுக்கும் பொருள், அதாவது வஸ்து, இன்னதென்று ஏற்படுவதாகக் காணோம்,

பூதப் பிசாசுகள், இருளன், வீரன், குட்டிச்சாத்தான், முனீஸ்வரன், நரகம், மோட்சம், சிவன் விஷ்ணு, கடவுள் சாத்தான் போன்ற சொற்கள் எந்தப் பொருளையும் குறிக்காதது போல், மனம், எண்ணம், சித்தம், சைதன்யம், சிதாகாசம், ஞாபகம், இயற்கை எண்ணம், பரம்பரை எண்ண முதலிய கற்பனா வார்த்தைகளென்றே நடத்தை ஆராய்ச்சியால் விளங்குகிறது. இந்த ஆராய்ச்சியில் "சித்து சடம்" என்ற பதங்கள் வித்தியாசத்தை இழந்ததாகக் காணப்படுகிறது. மற்ற மெய்ஞ்ஞான நூல்களிலிருந்து "சித்து" என்ற வார்த்தை விலக்கப் பட்டது போல், நடத்தை நூலிலும் சித்து மனம், எண்ணம் முதலிய வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

நடத்தை நூலாவதென்ன? மனிதனுடைய நடத்தை அல்லது நடக்கையைக் குறித்து பேசும் நூலாகும். நடத்தையைத் தான் நாம் பார்க்கின்றோம். சுய அல்லது இயற்கையாகிய Instinct என்று சொல்வதும், பயம் கோபம் அன்பு என்று அழைப்பதும் Emotion எண்ணம் என்பதும் Thought எனவும் நடத்தையே. நமது அவயவங்களின் நடத்தைகளே இந்த நடத்தைகளுக்குக் காரணமாகும். நமது தேக அவயவங்கள், வெளியில் உண்டாகும் தூண்டுதலாலே அல்லது உள்ளே உண்டாகும் தூண்டுதலாலே Stimulus அசைவுறுகின்றன. Response இந்த அசைவுகள் தான் நடத்தையாகத் தோன்றுகின்றன.

பிறந்த குழந்தையை முலைப்பாலுண்ண தூண்டுதல் செய்தவுடன், அது, சலனிக்க அதாவது அசைய ஆரம்பிக்கிறது. இதைத்தான் பாலுண்ணுகிறதென்று சொல்லுவது. வயிற்றில் ஒன்று மில்லாவிட்டால் குடல் அசைந்து தொண்டையைத் தூண்டுகிறது. இந்தத் தூண்டுதலால் தொண்டை சலனிக்கிறது. அது தான் அழுகை என்று வழங்குகின்றோம். இதே மாதிரியாகவே ஈரல் இருதயம் முதலிய அவயவங்கள் சலனமுற்றால், பயமோ கோபமோ தோன்றுகின்றது. அழும் குழந்தையை உதட்டை மெதுவாகத் தடவினாலும், அல்லது ஆண் பெண் அவயவத்தைத் தொட்டாலும் அழுகை நின்று முகமலர்ச்சி பெறுகிறது. குழந்தையைத் தலைகீழாகத் தொங்க விட்டால் நடுக்கமுறும். அசைவுறாமல் தடுத்தால், கோபமுறும். ஆகையால் பச்சிளங்குழந்தைகள் காட்டும் அழுகையும், கோபமும், பயமும் அதன் அவயவங்களின் சேஷ்டையே. இந்த சேஷ்டைகளை, தகுந்த தூண்டுகோல்களால் அதிகப்படுத்தலாம். அல்லது மாற்றலாம். அல்லது நிறுத்தியும் விடலாம். இந்த ஆராய்ச்சியின் படி, இளங்குழந்தைகளை எந்தெந்த மாதிரி நடிக்க வேண்டுமானாலும், அம்மாதிரியே அதன் நடத்தையை மாற்றக் கூடும். குழந்தைகளைத் திருடச் செய்தாலும் செய்யலாம். அல்லது ஞானியாகச் செய்தாலும் செய்யலாம். எல்லாம் பழக்கமே. தொட்டில் பழக்கங்களாகிய பயம், வெட்கம், கோபம் முதலிய வேண்டா நடத்தைகளை மாற்றி, தைரியம், நாணமின்மை, கோபமின்மை முதலிய வேண்டும் நடத்தைகளைக் காட்டச் செய்யலாம். இதுகாறும், மனிதனுடைய நடத்தைகளுக்கு நேர் காரணங்களாயுள்ள அவயவங்களை கவனியாது, வெறுஞ் சொற்களை மாற்ற முயன்று வந்தோம். இந்த மூட பழக்கத்தினால், மனிதனுடைய நடவடிக்கை இன்றைக்கும் சமூக வாழ்வுக்கு நேர் விரோதமாகவே இருந்து வருகின்றது. இனி இந்த ஆராய்ச்சி பெருகப்பெருக, சமூக வாழ்வுக்கு எந்த நடத்தை வேண்டுமோ அந்த நடத்தைகளையே வரவழைக்க முடியும். இந்த ஆராய்ச்சியால் ஜனனத்திற்குத் தக்கபடி குணமென்பது பொய்யாய் விட்டது. எந்த குலத்தில் பிறந்தாலும், அந்த குழந்தைகளை சமூக வாழ்வுக்கு வேண்டிய நடத்தைகளைக் காட்டவும் செய்யலாமெனப் பெறப்பட்டது. தொட்டில் பழக்க வழக்கங்களை வேண்டியவாறு தூண்டுதல் செய்யும் பட்சத்தில், நடத்தைகளும் வேண்டியவாறு வரும். ஆஸ்திக உலகமாக்கினுலும் ஆக்கலாம் நாஸ்திக உலகமாக்கினுலும் ஆக்கலாம். கடவுளர் என்னும் சொற்களும் (வார்த்தைகள்) அவைகளால் உண்டாகும் பக்தி, பயம், பிரார்த்தனை, அபிஷேகம் வைராக்கியம் முதலிய நடத்தைகளும், தொட்டில் நற் பழக்க மூலமாகவே உலகில் இல்லாமலே செய்து விடலாம். இந்த நடத்தை ஆராய்ச்சியால், இதுகாறும் தெரியாதிருந்த தூண்டுகோல்களால் இனி உலகம் சீக்கிரத்தில் சீர்பெறுமென்பதற்கு ஐயமில்லை.

மனித நடத்தைகளுக்கு மூன்று வித பழக்கங்கள் உளவாகத் தெரிகிறது. சித்திரத்திற்கு கைப்பழக்கமும் எண்ணத்திற்கு நாவின் பழக்கமும் கோபம், தாபம், அன்பு, ஆசைக்கு நமது குடலும் காரணமென்று தெரிகிறது. கை கால்களால் நடக்கவும், ஓடவும் ஆடவும் அடிக்கவுமான நடத்தைகள் உண்டாகின்றன. இந்த நடத்தைகளை பழக்கத்தினால் செம்மையாக்கலாம் சித்திரமும் கைப்பழக்கமும் என்றார் பெரியோர் "எண்ணத்தையும் நாவின் திறமையால் உண்டாக்கலாம். நாவின், அதாவது நாக்கு, தொண்டை பேசும் சதை மூச்சிப்பை முதலிய பேசுதற்குவேண்டிய அவயவங்களின் சேட்டையை எண்ணமென்று வழங்குகின்றோம். எண்ணம், ஞாபகம், நினைவு முதலிய நடத்தைகள் யாவும், நமது பேச்சின் பரிணாமங்களே. நாம் உரத்துகூவும் போது பேசுவதாகவும், நமக்கு நாமே பேசும்போது, நாம் எண்ணமிடுவதாகவும் சொல்கின்றோம். இந்த சித்தாந்தத்தின்படி, ஊமை எண்ணுகின்றானா? அல்லது நினைக்கின்றானா? என்று கேட்கலாம். நாம் வார்த்தையால் பேசுவது போல், அவனும், சைகையால் பேசுகின்றான். அவனது சைகையே அவனுக்கு நினைவாகும். லாரா பிரிஜ்மான், என்ற ஊமைப் பெண் தான் தூங்கும்போது, கையாலும் விரல்களாலும், சைகை செய்து கொண்டிருந்தாள். இதுவே இவளுக்கு கனவாகும். நாம் எண்ணுகின்றோம் என்பதும், நமது நாவின் முதலிய அவயவங்களின் நடத்தையே. இந்த அவயவ நடத்தையை, ஏதோ விபரீதமாக எண்ணி, இதை சூட்சமப்பொருளென்றும், மனமென்றும், கடவுள் ஸ்வரூபமென்றும் வழங்கி வந்தது நமது தொட்டில் பழக்கமென்று அறியவும்.

கோபம், தாபம், அன்பு, ஆசை முதலிய நடத்தைகள், நமது குடல்களின் அசைவுகளே. "குடல் நடுங்கிற்று" என்று வழங்கும் அனுபவ வார்த்தைகளாலும், பயத்திற்கு குடலே காரணமென்று நன்று விளங்கும். பாம்பைக்கண்டு சிலர் பயப்படுகின்றார்கள். இருளைக்கண்டு சிலர் பயப்படுகின்றார்கள். இந்த நடத்தைகள் தொட்டில் பழக்கங்களே. ஆனால், இந்த பழக்கங்களை, குடல்களின் நடவடிக்கைகளைக்கொண்டு மாற்றிவிடலாம். பயங்கொள்ளிகளை பயப்படாமலும் செய்யலாம். இதை பரீட்சை செய்துமிருக்கின்றார்கள். நன்மைகளையே ஒருவன் செய்துவர வேண்டுமானால் அந்தக் காரியத்திற்குரிய குடல் பாகங்களைப் பயிற்றுவோமானால் அவன் நல்ல காரியங்களையே செய்து வரக்கூடும். ஒருவன் செய்து வரும் பெரும்பான்மையான காரியங்கள், அவன் இளமையிலிருந்து பழகியபடி செய்கின்றானே யொழிய கர்மத்தாலல்ல, கடவுளாலல்ல வென அறிக. ஆகவே ஒருவனுடைய துர்ச்செய்கைகளுக்கும் நற்செய்கைகளுக்கும் எந்த ஜன சமூகத்தில் பழகினானோ அந்த சமூகமே அதற்குக்காரணமாகும்.

இந்த ஆராய்ச்சியில் ஏற்படும் முடிவுகள் என்னவெனில், மனிதன் நடையை சமூகங்களுக்குத் தக்கவாறு அமைத்துக்கொள்ளலாம். வேண்டிய நடையை அதன் அவயவங்களைக் கொண்டு திருத்திக்கொள்ளலாம். இதனை அறியாது, மனத்தைக் கற்பித்தல் என்றும் பயபக்தியால் நடத்தை சீர்படுமென்றும், கடவுளருளால் நன்மை பயக்குமென்றும் சொல்லிவந்ததெல்லாம், வீண் சொற்களே. நமது உடலின் உறுப்புகளை விசாரித்தல், நமது தற்கால கடமைகளாகும். அந்த விசாரணையின் பலனைக்கொண்டு நமது மக்களை வளர்த்தலே "சத் புருஷ லட்சணமாகும்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

வகுப்புப் போராட்டங்கள்.

(Dr. R. P. பரஞ்சிபே எழுதிய "இந்தியாவின்) தேவை" என்னும் புத்தகத்தில் காணப்படும் சாரங்கள்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கலப்பு விவாகங்களென்பவைகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடைகளும், நிர்ப்பந்தங்களும் முன்னிருந்தமாதிரியேதான் இப்பொழுதும் பலமாகவும்வலிமையாகவுமிருந்துவருகின்றன. அவ்வாறிருந்த போதிலும்கூட, பெண்கள் இப்பொழுது அறிவுவளர்ச்சிக்கானகல்வித்துறையில் முன்னேறிக்கொண்டே வருவதினாலும், அவர்களுடைய விவாக வயதானது சிறிது உயர்த்தப்பட்டுக்கொண்டே வருவதினாலும், முற்கூறிய கலப்பு மணத் தடைகளும், நிர்ப்பந்தங்களும் சிறிது சிறிதாக மறைந்து கொண்டே வருகின்றன, நாளாவட்டத்தில் இவைகள் மறைந்து, இருந்தவிடம் தெரியாமல் போய்விடுமென்பதற்குறித்தான அடையாளங்கள் காணப்படுகின்றதெனக் கூறுவது மிகையாகாதெனக் கருதுகின்றோம். ஆனால், இச்சம்பவமானது, அதாவது கலப்பு மணமென்பது மெதுவாகத்தான் நடைபெறக்கூடும்.

தீண்டாதார் என்று சொல்லக்கூடிய சமூகத்தினர்கள் மிகத் தாழ்வான நிலைமையிலிருக்கவேண்டியவர்களெனக் கருதி, அவர்களை தாழ்த்தி வைத்து இருக்கும் கொடுமைதான் ஹிந்துமதத்தினால் மக்களுக்கு நேர்ந்த தீமைகளிலெல்லாம் தலைசிறந்து விளங்கக்கூடிய தீமையாக யிருக்கின்றது. சுமார் ஐந்து கோடி மக்கள் ஹிந்துமதத்தைச் சார்ந்தவர்களாகயிருந்தபோதிலும்கூட, அவர்கள் யாவரும் ஹிந்து மதத்தைச் சார்ந்த ஜாதியினர்தான் என்று சிறிதும் கருதப்படுவதே யில்லை. தீண்டாதாரெனக் கூறப்படும் மக்களை தப்பித்தவறி தீண்டிவிடுவதும், சில ஊர்களில் அவர்களைக் கண்களால் பார்ப்பதென்பதும், சில சமயங்களில் அவர்களுடைய நிழல் படுவதும் ஒரு தீட்டாகவே தான் பாவிக்கப்பட்டு அனுபவத்தில் இருந்துவருகின்றது.

மேலும், தலையோடு தண்ணீர் வார்த்துக்கொண்டு, அதாவது ஒரு முழுக்குப்போட்டோ, அல்லது உடுத்தியிருந்த ஆடைகளை அகற்றி விட்டு, துவைத்த வேறு ஆடைகளை உடுத்திக்கொண்டாலோதான் அத்தீட்டை நீக்கிக் கொண்டவர்களாகலாம் எனவும் கருதப்பட்டு வருகின்றது. தீண்டாதாரெனக் கூறப்படும் சமூகத்தைச் சார்ந்த மக்கள் யாவரும், ஆதிகாலத்தில் இந்தியாவில் வசித்துக்கொண்டு வந்த ஆரியரல்லாதாரின் சந்ததிகளே யாவார்கள். சமூக வாழ்க்கையின் அவசியத்திற்குத் தேவையாக யிருக்கும் சிற்சிலத் தொழில்களை புரிந்து வருவதே அவர்களுடைய கடமையெனக் கருதப்பட்டு, அத்தொழில்களே தான் அவர்களுக்குப் பொதுவாகவே அளிக்கப் பட்டுவந்தது.

எவ்வாறிருந்தபோதிலும் ஒரே ஜாதிக்குள் அநேக உட்பிரிவுகளை உண்டாக்கிக்கொண்டும், வளர்த்துக்கொண்டும், மேல்கீழ் நிலை ஏற்படுத்திக்கொண்டும் வருவதேதான் மக்களுடைய மனப்பான்மையாக இருந்துகொண்டுவருகின்றது. ஏனெனில் தீண்டாதாரெனக் கருதப்பட்டுவரும் சமூகத்தினரில் அநேக உட்பிரிவுகள் அவர்களுக்குள்ளாகவே யேற்பட்டு ஒருவரை மற்றொருவர் தீண்டப்படாதாரெனவேதான் கருதிவருகின்றார்கள்.

இவைகள் எப்படியிருந்தபோதிலும்கூட கல்வியறிவானது மக்களுக்குள் பரவிவருவதின் பயனாய், மக்கள் கல்வித்துறையில் முன்னேறிக்கொண்டே செல்லுவதால் தீண்டாமையென்பது கொஞ்சங்கொஞ்சமாக புறக்கணிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் வந்து, தீண்டாதாரெனக் கூறப்பட்டு வரும் மக்களே தங்களுடைய உரிமைக்காக போராட வேண்டுமெனக்கருதி கூப்பாடு போட்டுக்கொண்டுவருகின்றார்கள். புதியதாக நிறுவப்பட்ட சீர்திருத்த சட்டசபைகளும் தீண்டாதாரின் நிலைமையை உயர்த்த வேண்டுமெனக்கருதி, அதற்காக முயற்சித்துக்கொண்டும், பாடுபட்டுக்கொண்டும் வருகின்றனர்.

மக்கள் யாவரும் இவ்வாறு பல்வேறு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதனால்தான், தாங்கள் யாவரும் ஒரே தேசத்தினர் என்கிற உணர்ச்சி அவர்களிடம் வளர்ந்துவருவதற்கு இடமில்லாமலிருந்து வருவதுடன், தேசிய உணர்ச்சியையே அடியோடு நாசமாக்கிக் கொண்டும்வருகின்றது. ஒவ்வொருவரும் தங்களுடைய ஜாதியையேபிரதானமாகக் கருதிக்கொண்டிருப்பதனால்தான் அயலாரொருவரால் செய்யப்படும் ஒவ்வொரு காரியங்களுக்கும் வகுப்புக்காரணமே பிரதானமென்கிற மிக்க இழிவான ஓர் காரணம் கூறப்படுகின்றது. மேலும் சர்க்காரின் உத்தியோகங்கள்கூட, ஒருவர் அக்குறித்த வேலைக்குத்தகுந்த திறமைவாய்ந்தவராகவும், தகுதியுடையவராகவும் இருக்கின்றாரா என்பதை கவனியாது, ஜாதியையனுசரித்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையிலேயேதான் அவ்வுத்தியோகங்கள் வழங்கப்படவேண்டுமெனவும் உரைக்கின்றார்கள். இதுவுமல்லாமல், சட்டசபையை யனுசரித்த ஏதாவதொரு தீர்மானத்திலாவது அல்லது அதை நிறைவேற்றுவதென்பதிலாவது ஏதாவதொரு சமூகமோ, வகுப்போ அல்லது ஜாதியோ பாதிக்கப்பட நேரிடுமோ என்பதை கவனித்தாராய்ந்தே செய்ய வேண்டியதாகவு மிருக்கின்றது. வகுப்புப்போராட்டங்கள் நேரிடாதவாறும், எல்லா சமூகத்தினருக்கும், எல்லா வகுப்பாருக்கும் எல்லா ஜாதியாருக்கும் திருப்தியையளிக்கத் தக்கவாறுமான முறையிலுமேதான் இந்திய அரசியலின் நிர்வாகம் நடைபெற்றுக்கொண்டு வரவேண்டியிருக்கின்றது. அடிக்கடி நேரிடக்கூடிய வகுப்புப்போராட்டங்களின் பயனாய் அரசியல் நிர்வாகம் அதிகமாக பாதிக்கப்படுவதால், மக்களின் தேசிய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை யிடுவதற்குத்தயாராக யிருக்கக்கூடிய மக்கள் அதையே ஓர் காரணமாக குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, சர்க்காரார் தங்களுடைய செய்கையை அவ்வளவிலேயே நிறுத்திக் கொள்ளவாவது அல்லது அதனின்றும் பின்னடையும் படியாகவாவது செய்துவிடுகின்றார்கள்.

தற்காலமிருந்து வரக்கூடிய அரசாங்கமும், பல்வேறு வகுப்பினர்களுக்குள்ளும் நேரிடக்கூடிய வகுப்புப்போராட்டங்களையும், சச்சரவுகளையும் அறவே யொழித்துவிடுவதற்கான முறைகளில் ஈடுபட்டு, அவைகளையே தான் கையாண்டுகொண்டுவந்தார்களென முழுவதுமே உரைத்துவிடவும்முடியாது. அன்னியரின் ஆக்ஷி இந்தியாவில் சுலபமாக நடைபெறுவதற்கு இந்தியர்கள் யாவரும் பல்வேறு வகுப்பினராகவும், ஜாதியினராகவும் பிரிந்து நிற்பதுதான் காரணமாகுமென சிலர் உரைக்கலாம். இந்தியர்கள் யாவரும் தங்களுடைய மதத்தின் காரணமாகவும், ஜாதியின் காரணமாகவும் பிரிந்து தனித்தனியாக நின்றுகொண்டுவருவதை அறவேவிட்டொழித்து அந்தயெண்ணங்களையே நாசமாக்கி, தாங்கள் யாவரும் ஒரே மதத்தைத்தான் சார்ந்தவர்கள், ஒரே ஜாதியைத்தான் சார்ந்தவர்கள், ஒரே தேசத்தைத்தான் சார்ந்தவர்களென்கிற எண்ணங்களால் தூண்டப்பட்டு யாவரும் ஒற்றுமையடைந்து, ஐக்கியமடைந்து, முன் அணியில் வந்து எப்பொழுது நிற்க ஆரம்பிக்கிறார்களோ அப்பொழுதுதான் மேலே கூறிய கூற்றானது மட்டுக்கு மிஞ்சினதான கூற்றெனவும், அனுவசியமான கூற்றெனவும் கருதப்படும்.

வகுப்புபேதங்களுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் மத சம்பந்தமான உணர்ச்சியானது மக்களின் மனதிலிருந்து அறவே நீக்கிவிடப்பட முடியுமானால் இந்தியாவைக்குறித்த பிரச்சினைகள் யாவும் மிக்க சுலபமாகவே நிவர்த்திக்கப்படக்கூடும். இந்தியதேசியவீரர்களில் அநேகர் தங்களுடைய பழைமையான நாகரீகமானது மதத்தையே அடிப்படையாகக் கொண்டதெனவும், மதமே அதற்கு மூலகாரணமெனவும், மதமே அதற்கு அஸ்திவாரமெனவும் மிக்க இனிமையாகவும் பெருமையாகவும், கௌரதையாகவும் கூறிக்கொள்ளுவதில் மிக்கப் பிரியமுள்ளவர்களாகவே தான் காணப்படுகின்றார்கள்.

ஆனால், இந்தியாவின் பிரச்சினைகள் சுலபமாகத் தீர்க்கப்பட முடியாமலும் அதிகசிக்கலாகயிருந்துகொண்டு வருவதற்கும், இந்தியாவானது இதர தேசங்களைப் போல் முன்னேறாமலிருந்துகொண்டுவருவதற்கும் மக்களுக்குள்ளிருந்துவரும் இத்தகைய உணர்ச்சியேதான்—இதே உணர்ச்சிதான் காரணமாகுமே யல்லாமல், பிறிதொன்றும் காரணமாகவே ஆகாதென்பதை அவர்கள் உணர்ந்து, அறிந்துகொள்வார்களேயாகில், அப்பொழுது தற்காலம் மக்களால் நடைமுறையில் அனுஷ்டிக்கப் பட்டுக்கொண்டு வரும் மதத்தை நாம் என்னதான்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

விவாஹ ரத்து.

(K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,)

முன் தொடர்ச்சி.

ஐரோப்பிய தேசங்களில் வழங்கி வரும் விவாகரத்துச் சட்டங்களைப்பற்றி மேலே கூறும்போது, ஸ்பெயின் தேசத்தில் ரோமன்கத்தோலிய மதம் தலையோங்கி நிற்கும் காரணத்தால் அந்த விவாகரத்துச் சட்டம் கிடையாது என்று விளம்பினோம். ஆனால், சில நாட்களுக்கு முன் அத்தேசத்தில் இப்போது நடந்துவரும் ஒரு பெரிய அரசியல் புரட்சியின் காரணத்தால் மதத்தின் மகிமையும் மாண்பும் பரந்தோடியதன்றி இதுகாறும் வழங்கிவந்த மணவிடுபடாமை என்னும் உயரிய மதக்கொள்கை அடியோடு தாக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டது. ஏனைய தேசங்களைப் போன்றே ஸ்பெயின் தேசத்திலும் இப்போது மக்கள் தம் மணத்தை ரத்துசெய்து கொள்ளப் புதிதாகவோர் மணரத்துச்சட்டம் தற்கால அரசியல் அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளது, இச்செய்தியைக் கேட்க நாமும் நம போன்ற சீர்திருத்தவாதிகளும் அளவிலா ஆனந்தம் அடைவதன்னியில், இதுநாள் வரைக்கும் நம் இந்தியாவைப் போன்றே 'மதம்' என்னும் கொடுங்கோன் மன்னனால் 'சட்டம்' என்னும் கெட்டதோர் படைகொண்டு நெடுநாள் ஆளப்பட்டுவந்த ரோமன் கத்தோலிய தேசமாகிய ஸ்பெயினிலும்கூட, நாம் ஓயாது வேண்டும் என்று ஓலமிட்டலறும் சீர்திருத்தச்சட்டமாகிய விவாகரத்துச் சட்டம் உண்டாக்கப்பட்டு விட்டதென்றால், அதேபோன்ற நிலையிலிருந்த நம் நாட்டிலும் ஏன் அவ்வுயிரிய சட்டம் உண்டுபண்ணல் ஆகாதென ஏங்குகின்றோம்! இந்து மதத்தின் எண்ணரும் கோட்டைகளுள் ஒன்றாகிய பரோடா தேசத்திலும், ரோமன் கத்தோலிய மதத்திற்கு அனேக நூற்றாண்டுகளாய் அடிப்படையும் ஆதரவுமாய் இருந்துவந்த ஸ்பெயின் தேசத்திலும் விவாக விடுதலை இப்போது தோன்றிவிட்டதானால், ஏனைய பல விஷயங்களில் இந்து மதத்தைச் சற்றும் ஏலாது அதன் உண்மைக்கொள்கைகளுக்கே நேர்மாறாகவும் சொல்லக்கூடிய நம் பிரிட்டிஷ் இந்திய தேசமானது, 'மதம்' 'ஒழுக்கம்' என்ற பதங்களை மட்டும் கொண்டு, இதமற்ற வீண் மொழிபேசிப்பிதற்றி விவாகரத்து வேண்டாமென்று விளம்பல் நம் மனிதவாக்கத்திற்கே ஓர் சொல்லரும் வியப்பேயன்னியில் வெட்கத்தையும் உண்டாக்கக் கூடியதோர் விஷயமாகும்.!

இதுவரைக்கும் நாம் ஐரோப்பிய தேசங்களைப்பற்றியும் அவைகளில் வழங்கிவரும் விவாகரத்து முறைகளைப் பற்றியும் வெகு சுருக்கமாய்க் கண்டுவந்தோம். இனி ரஷியக்கண்டத்தைப்பற்றியும் சிறிது காண்போம். மிகவும் பெரிய பரப்பளவையும் ஜனத்தொகையையும் கொண்ட சைனா தேசத்தில் எவ்வளவு தூரம் விவாகரத்து முறை வழங்கப்பட்டு வருகின்றதென்னும்விஷயம் நமக்குச்சரிவரத் தெரியவில்லை. புத்தமதத்தைக் கையாளும் ஜப்பான் தேசத்தில் மணரத்து வழங்கிவருவதால் சீனாவிலும் அது இருக்கலாம். ஆனால், மேனாட்டு நாகரீகம் மிகுந்த ஜப்பானைப்போல், பிற்போக்கான சீனாவில் அவ்வளவு தூரம் அது வழங்க இடமிராது. அத்தேசத்திலிருக்கும் அரசியல் நிலை சீர்குலைந்த நிலைமையில் இருப்பதால் விவாஹரத்து முறையைப்பற்றியும், அதன் புள்ளி விபரங்களைப்பற்றியும் நாம் அறிவதற்குத் தக்க வசதிகள் கிடையாது.

ஆனால், ஜப்பான் தேசத்தில் விவாகரத்து முறை மிக அதிகமாகக் கையாளப்பட்டு வருகின்றது. அம்முறையின் சரித்திரத்தைப்பற்றி இங்குநாம் ஆராய வேண்டிய அவசியம் இல்லை. 1930 வருடத்தில் நடந்த விவாஹரத்தின் புள்ளிவிவரங்களைப் பற்றி ஜப்பான் தேசத்தின் அரசாங்கத்தைச் சேர்ந்த புள்ளி விவர நிலையம் (Statistics Bureau) ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதைப்படிப்போருக்கு ஜப்பான் தேச மணரத்தின் விஷயங்கள் நன்குவிளங்கும். அவ்வறிக்கையின்படி 1930-வது ஆண்டில் அளிக்கப்பட்ட விவாக விடுதலைகளின் எண்ணிக்கை 51,222 ஆகும். இது அவ்வாண்டில் நடந்த திருமணங்களின் எண்ணிக்கையில் 100க்கு 10 வீதம் ஆகின்றது. இதில் மற்றொரு விஷயம் நாம் கவனிக்கத் தக்கது என்னவென்றால் சட்டமூலமாகப் பெறப்பட்ட விவாகரத்துக்களின் எண்ணிக்கை 439 எஞ்சிய 50, 783 ரத்துக்களும் தம்பதிகளுக்குள்ளேயே ஒப்பந்தத்தின்படி செய்யப்பட்டுள்ளன.

மற்றும் 44, 239 ரத்துகளில் மனைவியர்களே முற்பட்டு மணரத்துச் செய்துகொண்டு குடும்பத்தின்றும் வேறுபட்டனர். 5564 ரத்துக்களில், கணவர்கள் முற்பட்டு தம் மனைவிடரை விட்டேகினர். எஞ்சிய 1419 தம்பதிகள் ரத்துசெய்தபின்னும் ஒரே குடும்பத்திலேயே இருந்தனர். இதிலிருந்து நாம் கவனிக்கவும் கருதவும் கிடக்கும் விஷயங்கள் மூன்று. அவையாவன, மிகவும் அதிகமான எண்ணிக்கையையுடைய மனைவியர்கள், தாமே ரத்துசெய்து கொள்ளுதலால், கணவர்கள் தம் மனைவியரை நடத்தும் முறை அவ்வளவு சிறந்ததும் நற்குணமுடையதும் அல்ல வென்பது ஒன்று. மற்றொன்று, கணவர்கள் தாமாகவே பெற்ற ரத்துக்கள் சிறிய தொகையன வாகலின், மனைவியர்கள் தம் கணவர்களுக்குப் பெரும்பாலும் உண்மையாகவும், நல்லவிதமாகவும் நடந்துகொள்ளுகின்றனர் என்பதும், அது காரணத்தால்தான் கணவர்கள் தாம் கொண்ட பெண்கள் (தாம் என்ன செய்யினும்) பொருமையுடையவர்களாயிருத்தலால் அவர்களினின்றும் பிரிய மனமில்லாதவர்களாய் இருக்கின்றார்கள் என்பது. மூன்றாவது, அந்த தேசத்தில் மற்ற விடங்களிற் போலவே ஒரு எண்ணிக்கையினர் தம் மணத்தை ரத்து செய்து கொண்டாலும் அதே குடும்பத்தில் மறுமணம் இன்றி இருந்து தம் வாழ்நாளைக்கழிக்கும் இயல்பினர் உண்டு என்பது.

திருமணம் நடந்து ஒரு ஆண்டிற்குள்ளாகப் பெறப்பட்ட ரத்துக்களின் தொகை 7478, இரண்டு வருடங்களுக்குள் பெறப்பட்டது 8010, மூன்று வருடங்களுக்குள் பெற்றவை 6026 இதேபோன்று வருடங்கள் அதிகரிக்க அதிகரிக்க, பெறப்பட்ட ரத்துக்களின் தொகை குறைந்து கொண்டே போகின்றது. விவாகரத்து பெற்ற தம்பதிகளின் வயதைப் பற்றியும் சில ஆச்சரியமான விஷயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. விவாகரத்து பெற்ற தம்பதிகளில் 25-லிருந்து 29 வயதுக்குட்பட்ட ஆண்பாலாரின் தொகை 14740 இவ்வாறு ஆண்களுள் வயது மேற்படப்பட ரத்துபெறும் ஆண்களின் தொகை குறைந்து கொண்டே வருகின்றது. இது போல், 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெறும் ரத்துகள் 3210, 60 வயதுக்கு மேற்பட்டவர் பெறும் ரத்துக்கள் 1313. மற்றும் ஆண்களுள் 20 வயதுக்குட்பட்டவர் கொள்ளும் ரத்துக்களின் தொகை மிக மிகக் குறைந்தது, அது 425. ஆனால் அதே வயதில் பெண்கள் கொண்ட ரத்துக்களின் தொகை 3863. 25 லிருந்து 29 வயது வரைக்கும் உள்ள தம்பதிகளுள் விவாகரத்து பெறும் ஆண்களின் தொகையும், பெண்களின் தொகையும் ஏறக்குறைய சமமாக விருக்கின்றது. ஆனால், 30 வயதிலிருந்து 60 வயது வரைக்கும் உள்ளவர்கள் பெறும் ரத்துக்களில் ஆண்களின் தொகையைக் காட்டிலும் பெண்களின் தொகை மிகமிகக் குறைந்துகொண்டே போகின்றது. மற்றும் இதில் நாம் அவசியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், 20 வயதிலிருந்து 24 வயது வரைக்கும் உள்ள பெண்கள் பெற்ற ரத்துக்கள்தான் மிகவும் அதிகமாகிய 15, 248 எண்ணிக்கையையுடையதாகும். இதே வயதுடைய ஆண்களின் தொகையாகிய 6571க்கு காட்டிலும் பெண்களின் தொகை இரண்டரைப்பங்கு அதிகம். இத்தகைய புள்ளிகள் வாசிப்பதற்கு இன்பம் அளிக்கக்கூடாத நிலைமையிலிருப்பினும் இதைப்பற்றி ஊன்றி யாராய்பவருக்கு விவாகரத்தின் உண்மையான தன்மை நன்கு தெள்ளிதின் விளங்குமாதலால், இவைகளைச்சற்று அதிகமாக நாம் இங்கு எழுதியதற்காக வருந்தாமல் இவைகளைப்பற்றிச் சிந்தித்துத் தெளியுமாறு நாம் நம் நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். இறுதியாக ஜப்பானைப் பொறுத்தமட்டில் நாம் கூறக்கிடப்பது என்னவென்றால் தற்காலம் அத்தேசத்தில் வரவர பெறப்படும் விவாகரத்துக்களின் தொகை குறையும் போக்கில் இருந்து வருகின்றது. ஏனெனில் 1879 வது ஆண்டுவரைக்கும் ஒவ்வொரு வருடமும் அளிக்கப்பட்ட ரத்துக்களின் தொகை ஒரு லக்ஷத்திற்கு மேற்பட்டதாயிருந்து வந்தது. இப்பொழுது அது மிகவும் குறைந்து வருகின்றது. 1929 வருடம் பதிவுசெய்த ரத்துக்களின் தொகை எல்லா வருடங்களின் தொகையினும் மிகவும் குறைந்தது. ஆனால் பதிவு செய்யப்படாத மணங்களும், ரத்துக்களும் இப்பொழுது அதிகப்பட்டு வருவதும் உண்மையாதலால் அவ்வாறு நடக்கும் ரத்துக்களின் தொகையைப் புள்ளி விவரத்துடன் அறிய இயலவில்லை.

மற்றய தேசங்களாகிய ஆப்கானிஸ்தான், பெலுசிஸ்தான் முதலியவைகளில் அங்கு வழங்கும் முகம்மதிய மதத்தின் (தலாக்) விவாக ரத்து உண்டு என்பது யாவரும் அறிந்ததே. பெர்ஷியா தேசமும் அவ்வாறே யாகும். மற்றும் அரேபியா தேசத்திலும் விவாகரத்து உண்டு. கடைசியாக, ரஷியா தேசத்தில் விவாகரத்து உண்டு என்னும் விஷயமே யன்றி, உலகத்திலிருக்கும் விவாகரத்து முறைகளில் எல்லாம் நெகிழ்ச்சியான வகையில் அது கையாளப்பட்டு வருகின்றது என்னும் விஷயமும் ஒவ்வொருவாருக்கும் தெரியும். 1917 வது அண்டில் நடந்ததோர் வியப்பின் புரட்சியிலிருந்து ரஷியா தேசத்தில் பழையன அனைத்தும் கழிந்து புதியன பலபல புகுந்து வழுவுறும் வகையிலும்கூட நடந்துவருகின்றன. உண்ணும் விஷயத்திலிருந்து 'மதம்' வரைக்கும் பழைய முறைகள் எல்லாம் அழிக்கப்பட்ட இந்நாட்டில், சீர்திருத்தமென்னும் மோகம் மனிதவியற்கைக்கு மாறாகவும் கூடப் பொருளாதார முறையிலும் சமூக முறையிலும் பற்பல நூதன முறைகளைப் புகுத்த தூண்டிக்கொண்டிருக்கும் இந்நாட்டில், 'மதம்' என்னும் வார்த்தையையே மனம், வாய் இவைகளினின்றும் மறைப்பித்து, கோவில்கள் என்னும் கோட்டைகளைத் தாவிப் பிடித்துத் தகர்த்தெரிந்து, குருக்கள் என்னும் கூட்டத்தாரின் குலங்கள் தம்மை வேரறுத்து, சமய நூல்களைத் தீயிட்டும் சாத்திரங்களை கடல் வாயிட்டும், நம்பிக்கைகளை நாசமாக்கி நாளும் தலைப்படாது நலிவுறுத்தி, கும்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

நாத்திகமா? ஆத்திகமா? மக்களது ஒற்றுமைக்கு எற்றதெது?

(சாமவேதனுர்.)

"நாத்திகம் பழுத்த சென்னை" என்று சில ஆண்டுகளுக்கு முன் திரு கலியாண சுந்தரர் காலஞ்சென்ற "தேசபக்தனி"ல் எழுதினர். வைதீகரது வெறியாட்டங்கள் சென்னையில் மும்முரமாயில்லாத காரணம் பற்றி அன்னர் அவ்வாறு வரைந்தனரோ, என்னவோ அறிகிலேன். ஆயினும் அவர் நாத்திகத்தை வெறுப்பவரெனவும் நாத்திகம் கொடியதென் எண்ணுபவரென்றும், மேற்குறித்த அடைமொழியிலிருந்து விளங்கிக்கொள்ளலாம். அண்மையில் நமது "குடிஅரசு"வில் "நாடு நலம் பெறவேண்டுமாயின் நாத்திகம் பரவ வேண்டும்" என்று ஒருவர் எழுத அதனைப்பெயர்த்தெழுதி "லோகோபகாரி" பகிடி பண்ணுகின்றது. எனவே அதன் அதிபர் திரு நெல்லையப்பரும் நாத்திகத்தை வெறுப்பவரென்பது வெளிப்படை. பொதுவாய், எல்லா ஆத்திகரும் நாத்திகத்தை வெறுத்து, நாத்திகரைப் பகைத்தெதிர்த்துப் போராடுவதன்றி நாத்திகர் மிகக்கொடியர் என்றும் கூசாமற் கூறிடுவர். இக்கட்டுரையில் நாத்திகம் கொடியதா? ஆத்திகம் கொடியதா? மக்கள் ஒற்றுமைக்கு நாத்திகம் எற்றதா? ஆத்திகம் எற்றதா? என்று ஆராய்ச்சி செய்குவோம்.

"கடவுள்" 'இருக்கிறார்' என்ற கொள்கைக்கு ஆத்திகம் என்றும், அந்தப் பிராணி, இல்லை என்ற கொள்கைக்கு நாத்திகம் என்றும் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றன வென்பதை வாசகர்களுக்கு விளக்கத்தேவையில்லை. 'கடவுள்' இருக்கின்றதோ, இல்லையோ வென்ற வாதத்திலும் நான் இறங்கப்போவதில்லை. ஆத்திகர் அஞ்சி நடுநடுங்குமாறு பேரறிஞரும், கலைவாணருமாகிய நாத்திகர் 'கடவுள்' என்ற பிராணியை ஆட்டி அசைத்துவிட்டனர். அப்பிராணியும் செயலற்றுச் சோம்பிக் குந்திவிட்டது! ஆயினும் ஆத்திகம் அழியவில்லை. ஆத்திக உணர்ச்சி உரன்பெற்றே வருகின்றது. இவ்வாறு வளர்ந்தோங்கி வரும் ஆத்திகம் மக்கள் ஒற்றுமையைக் குலைத்து வருகின்றது. 'கடவுள்' நல்லவராயின் 'கடவுள்' உணர்ச்சி நல்லதாயின் ஆத்திகம் சிறந்ததாயின் உலகில் வேற்றுமையிருப்பதேன்? மதச் சண்டைகளேன்? சமயப்பூசல்களேன்? 'கடவுள்' என்ற "செம்பொருள்" அல்லது "பரம்பொருள்" (ஆத்திகரது கூற்றுப்படி) மக்களுக்குள் ஒற்றுமையை வளர்க்குந்திறனற்றதா? ஆத்திகர் அன்புடையராயின்றி வம்பும், வழக்கும் தம்மை ஆட்சிகொள்ளும்படி விட்டுவிட்டதேன்? என்பனபோன்ற பல புத்திசாலித்தனமான கேள்விகளுக்கு ஆத்திகர் அளிக்கும் விடைகள் யாவை? சமாதானம் என்னே?

"நாத்திகம் நாசமாய்ப்போகுக" "நாத்திகர் நரகமேகுக" என்ற ஆவேசத்துடன் சாபக்கூச்சல் போடுவதால் ஆத்திகர் தப்பவியலாது. எற்ற விடையளித்தல் வேண்டும்; சமாதானஞ் செய்தல் வேண்டும். அங்ஙனம் விடையளிக்க ஆத்திகர் முற்படும் பொழுது அவருக்கெதிரே பல தடைகள் குறுக்கிடுகின்றன. எனெனில் ஆத்திகருக்குள்ளேயே ஒற்றுமையில்லை. ஆத்திகம் ஒன்றுபட்ட அல்லது ஒருமைப்பட்ட உணர்ச்சியன்று; அது பல்வேறு விதமாய்ப் பிரிந்து நிற்பது. எனவே ஒற்றுமை உணர்ச்சியை வேறறுத்து வேற்றுமையை வளர்ப்பது. "கடவுள் என்ற ஒரு பொருள் உண்டு" என்பதில் மட்டும் ஓரளவு ஒற்றுமை ஆத்திகர்திற் காணமுடியுமே யன்றி மற்றபடி ஆத்திகத்தில் ஒற்றுமையை மருந்துக்கும் காணமுடியாது. ஆத்திகரது ஆவேசத்திற்கும், வெள்ளறிவுக்கும் அடிப்படையும், மூலாதாரமான 'கடவுள்' என்பதிலேயே பெரும் வேற்றுமை. அப்பொருள் 'அது'வா 'அவனா' 'அவளா' 'அவரா' 'அவர்களா?' அப்பொருளை அழைக்கும் பொழுது 'ஸ்ரீ' என்பதா, 'திரு' என்பதா, 'ஸ்ரீமான்' என்பதா, 'ஸ்ரீலஸ்ரீ' என்பதா 'ஸ்ரீமத்' என்பதா 'திருமிகு' என்பதா 'திருடன்,' என்பதா 'திருவாளர்' என்பதா 'பிரம்மஸ்ரீ' என்பதா 'ஸ்ரீஜத்' என்பதா 'ஸ்ரீயுத' என்பதா 'மகா-ா-ா-ஸ்ரீ' என்பதா? அந்தப் பிராணி மணம் புரிந்ததா? புரிந்ததாயின் எத்தனை பெண்கள் ஒன்றா? இரண்டா? பலவா? பிள்ளைகளுண்டா? ஆண் பிள்ளைகள் எத்தனை? பெண்பிள்ளைகள் எத்தனை? 'கடவுள்' காளை வாகனனா? கழுதை வாகனனா? கருட வாகனனா? வசிப்பதெங்கே? மக்கள் உள்ளத்திலா? கைலாயத்திலா? வைகுண்டத்திலா? 'மோட்சத்'திலா? 'நரகத்திலா? 'கடவுள்' முற்றுந்துறந்த முனியா? இன்றேல் காமப்பித்தனா? புனிதனா? புல்லனா? போக்கிரியா? சன்மார்க்கனா? துன்மார்க்கனா? மெய்யனா? பொய்யனா? ஆரியனா? திராவிடனா? தமிழ் மொழியாளனா? சமஸ்கிருதத்தையுடையோனா? பட்சபாதமற்றவனா? அல்லது உடையவனா? பிழைபொருப்பவனா? அல்லாக்கால் சீறிச்சினந்து தண்டிப்பவனா? யாதொரு பற்றுக்கோடும் அற்று தானேயாய் தத்துவங்கடந்து நின்ற பரம்பொருளா? இன்றேல் கட்டுக்குள் அடங்கினவனா? ஆண்டவனா? ஆளப்படுபவனா? பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து அருள் புரிபவனா? காணிக்கை எற்று கிருபை சொரிபவனா? மக்களிற் சிலரை உயர்த்தியும், பலரைத் தாழ்த்தியும் வைப்பவனா? பார்வதி கவனா? பாவிகள் கவனா? எண்குணத்தானா? ஈரைந்த தன்மையாளனா? செங்கோலனா? கொடுங்கோலனா? புலால் உணவினனா? தாவர உணவினனா? மொட்டைத்தலையனா? குடுமித்தலையனா? மீசைக்காரனா? இல்லையா? (அப்பனே! அப்பனே!! அப்பனே!!!) இன்னோரன்ன பிற பல்வேறு கேள்விகளுக்கு இடந்தரும் ஆத்திகம் ஒற்றுமைக்கு எற்றதா? வேற்றுமைக்கு எற்றதா? சொல்லுவீர் நீவிர் ஆத்திகரே!

'நாத்திகம்'வீசும் சுயமரியாதை இயக்கத்தை எதிர்க்கத் தோன்றிய ஆத்திகச் சங்கம் எங்கே? சைவரும், வைணவரும், கிறிஸ்துவரும், இஸ்லாமியருமான ஆத்திகர் ஒரே மேடையில் நின்று ஆத்திகத்தைப் போற்றிப் புகழ்ந்து கூவிடவியலுமோ? குறித்த நாற் சமயத்தார்களது 'கடவுள்'களது பெயர்கள், தொழில்கள், குடும்ப வியவகாரங்கள் வேறுபடுகின்றனவே! அன்றியும் அச்சமயங்களின் மூலாதாரக்கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரணி முட்டிமோதிக் கொள்ளும் தன்மையுடையனவாயிற்றே! சைவசமயத்தின்படி 'கடவுள்' தமது அடியார்களுக்குத் தம் அருளையும், திருவடியையும் அளித்து அவர் மூலம் மக்களை உய்விக்கவும், ஈடேற்றவும் முயல்கின்றார். வைணவசமயத்தின்படி 'கடவுளே' உலகில் பல காலங்களில் பல்வேறு உருவங்கள் தாங்கி அவதரித்து மக்களை நல்வழிப்படுத்த முயல்கின்றார். கிறிஸ்துவம் வைணவக்கொள்கையைப்போல் அவதாரத்தைச் சிறப்பிக்கின்றதெனினும் 'கடவுள்' தமது ஒரே மகனை உலகில் மனிதனாய் அவதரிக்கச்செய்து சன்மார்க்கத்தைப் போதிப்பித்தது என்று கூறுவதன்றி 'கடவுளை' மூன்று கூறாக்கிப் பிறகு அம்மூன்றையும் ஒன்றாகப்பொருத்தி 3=1 என்றும் 1—3 என்றும் ஒரு விநோதக் கணிதமுறையைக் கற்பிக்கின்றது. இஸ்லாமோ எபிராயக் 'கடவுளான' எகோவாவைச் சீர்திருத்தி முகமதுநபியே கடைசி தீர்க்கதரிசியெனவும், அவரது போதனைகளும் சாதனைகளுந்தான் மக்களின் நல்வாழ்வுக்கு எற்றவையென்றும் கூறுகின்றது. மேலும் மற்ற மூன்று சமயங்களும் போற்றிக் கையாண்டு வரும் சிலை வணக்கத்தைக் கண்டிக்கின்றது.

இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்படுஞ்சமயங்களால்—ஆத்திக உணர்ச்சியால் உலகில் மக்களது முன்னேற்றமும், நல்வாழ்வும் தடைபடுகின்றனவா, இன்றேல் வளர்ச்சியடைந்து வருகின்றனவா வென்பதைச் சிந்திப்போர் எளிதில் விளங்கவியலும். சரித்திரத்தைப் புரட்டி பாருங்கள். என்ன காண்கின்றீர்கள்? மிகக்கோரமான சமயப்போர்கள்! அவற்றில் கொலைசெய்யப்பட்ட எண்ணிறந்த நல்ல மாசற்ற உயிர்கள்! மனிதனுக்கு மனிதன் எற்றதாழ்வு! 'கோவில் பூனை'களான குருக்களின் கொள்ளை, இழிந்தசெயல்கள், காமப்பித்து, உரிமை யின்மை, அடிமைத்தனம், பெண்களை அடக்கியாளுதல்! சுருக்கிக் கூறுகில் ஆத்திகரே வெறுக்கும் கொலை, களவு, கள், காமம், குருநிந்தை ஆகிய ஐம்பெருந்தீங்குகளும் ஆத்திகப்பித்தரால் செய்யப்பட்டுவருகின்றன. ஆத்திகமும், அதற்கடிப்படையான 'கடவுள்'களும், அவர்களது 'பக்தர்'களும் உலகை நல்வழிப்படுத்தச் சென்ற பல நூற்றாண்டுகளாய்ச் செய்த முயற்சிகள் என்னவாயின? கிட்டிய பலன் எம்மட்டு? உண்மையில் ஆத்திகர்களும் சமய வாதிகளும் மக்களின் நல்வாழ்விலும், முன்னேற்றத்திலும் ஆர்வங்கொண்டுள்ளோரென்று திட்டமாய்க் கூறிடலாகாது. தத்தம் விபரீத சமயக் கொள்கைகளைப் பரப்புவதிலும், விருதிசெய்வதிலுந்தான் அன்னர் தமது காலத்தைக் கழித்தனரன்றி உலகப் பொதுஜன சமூக நன்மைக்கு குறிப்பிடத் தக்கதாய் அவர்கள் சாதித்ததென்னையோ?

ஆத்திக சிகாமணிகள் மேற்காட்டியவற்றிற்குத்தக்க பதிலளித்துச் சமாதானஞ் செய்தல் வேண்டும். "மேனாட்டார் இராயிரம் ஆண்டுகளாய்க் கிறிஸ்துவத்தை"க் கட்டியழுதும் இன்றளவும் தமது மிலேச்சத்தனத்திலிருந்து சீர்திருந்தவில்லை' யென்று கூறும் 'இந்து' ஆத்திக வீரர்கள் ஐயாயிரம் ஆண்டு 'இந்து' தருமத்தைக் கடைபிடித்தும் தாம் இன்னும் மிலேச்சராயிருப்பதையுணரல் வேண்டும். பிறசமயிகளுக்கும் இக்குற்றச்சாட்டுப்பொருந்தும். சமயவாதிகள் சொல்லளவிலன்றிச் செயலளவில் உலகத்திற்குக் கடுகளவு நன்மையுஞ் செய்யவில்லை யென்றால் அது பிழையாகாது. நம் கண்ணிற்படும் உலகையும், அதில் அவதியுறும் மக்களையும் புறக்கணித்துவிட்டு கண்ணிற்படாத 'மறுஉலகத்'தையும், அங்கு சிம்மாதனத்தில் வீற்றிருந்து செங்கோலோச்சுவதாய்ச் சொல்லப்படும் 'கடவுளை'யும் சேவிக்க மக்களை ஆயத்தப்படுத்தும் ஆத்திக உணர்ச்சியால் மனித சமூகம் பயனடையுமென்றெதிர் பார்ப்பது பகற்கனவேயாகும். இனி, அடுத்த கட்டுரையில் ஆத்திகத்தின் செயலற்ற தன்மையையும், நாத்திகத்தின் மேன்மையையும், பிரபல சந்தேகிகளால் உலகம் அடைந்த நன்மையையும் பற்றி விரிவாய் எழுதுகிறேன்.

(தொடரும்.)

தேர்தல் வந்து விட்டது
பார்ப்பன கக்ஷிக்கும்
காங்கிரஸ் கக்ஷிக்கும்
ஏமாந்து விடாதீர்கள்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சீவகாருண்யச் சமயம் மகளிர் உரிமை மறுக்குமா?

(தோழர் அ இராகவன்)

காதல்:— இதன் பொருள் அன்பு என்றாலும் பொதுவாக ஒரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் நட்புக்கொண்டிருப்பதையே காதல் என்று வழங்கப்படுகிறது. மனித வாழ்க்கையில் பசியும் காதலுமே முக்கிய அம்சங்களாய் விளங்குகின்றன. இக்காதலை வெறுக்கும் மனிதர்களே இவ்வுலகில் ஒருவருமிரார். கடலால் சூழப்பெற்ற இவ்வுலகமே காதலால் சூழப்பட்டிருக்கிறது. காதல் என்பது ஒன்றில்லையாயின் இவ்வுலகமே நடைபெறாது. ஆனால் மக்கள் யாவரும் காதலின் உண்மைத் தன்மையை உணர்ந்து நடப்பார்களாயின் நாட்டில் குலமேது? உயர்வு தாழ்வேது? பால்யமணமேது? முதலாளி, தொழிலாளி வேற்றுமையேது? ‘பிராமணர் சூத்திரர்'' பாகுபாடேது? சண்டை சச்சரவுகளேது? கொலைகளேது? எங்கும் சாந்தம், எங்கும் அமைதி, எங்கும் இன்பம், எங்கும் சமத்துவம். எனவே நான் நாட்டில் வேற்றுமையுணர்ச்சி பெருகவும், சுயநலத்தோர் வயிற்றுப்பிழைப்பு நாடகம் நடைபெறவும் மதத்தின் பேரால், கடவுளின் பேரால் ''காதலின்'' வாயில் மண்ணைவாரிப்போட்டு அதை நம் தமிழ் நாட்டிலில்லாது விரட்டி விட்டார்கள்-இல்லை-கொன்று விட்டார்கள் என்றே கூறவேண்டியதிருக்கிறது. இக்காதலை மனிதர்கள் தங்கள் சமயத்தின் பேரால், கடவுள் பேரால் பழக்கவழக்கத்தின், பேரால் எத்துணை தூரம் ஒழித்து விட முயற்சி செய்யினும் மக்களின் உள்ளத்தில் இயற்கையில் தோன்றி இவ்வின்ப உணர்ச்சியை முற்றாய் ஒழித்து விட்டார்கள் என்று கூற முடியாது. அதை எவராலும் ஒழித்து விடவும் முடியாது. இதைப் பற்றி திரு. பென்லிங்சே எனும் அறிஞர் ''காதலென்பதுசரீரத்தோடு பிறந்ததோர் உண்மை உணர்ச்சி. நமக்குப்பசி எவ்விதம் உண்டாகிறதோ அதேபோன்றுதான் காதலும் உண்டாகிறது. பசியை எவ்விதம் சட்டசம்மதமானதென்றோ அன்றி சட்டவிரோதமானதென்றோ கூறமுடியாதோ அதே மாதிரியே காதலையும் கூற முடியாது. காதலை ஒழுக்கமென்றோ அன்றி ஒழுக்கமற்றதென்றோ கூறவும் முடியாது. பசியை அதிகாரத்திற்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாக எவ்விதஞ் செயமுடியாதோ அதே போன்றே காதலையுஞ் செய்ய முடியாது. இச்சட்டதிட்டங்களுக்கெல்லாம் அது உட்பட்டதல்லவென்று நமது உள்ளுணர்ச்சியே தெளிவாக எடுத்துக்காட்டுகிறது'' என்றுகூறியுள்ளார். காதலின் பெருமையை வியந்து அறிஞர்எல்சின் எனபார் ''ஒரு ஸ்திரீயினுடைய காதலினால் சுத்தப்படுத்தப்படாமலும் அவளுடைய தைரியத்தினால் பலமளிக்கப்படாமலும் அவளுடைய பகுத்தறிவினால் வழிகாட்டப்படாமலுமிருந்த மனிதன் எவனும் சரியான வாழ்க்கையில் வாழ்ந்ததில்லை'' என்று கூறியுள்ளார். இன்னும், டெனிசன், செகப்பிரியர் போன்ற ஐரோப்பிய மேதாவிகள் பலரும் காதலைவியந்து கூறினர். பாடினர். தம் நாட்டில் காதல் செழித்தோங்கவழியுங்கோலினர். இது கண்ட சைவத் தலைவர்களென்போர் நமது சமயம் காதலைப் போற்றுகிறது என்று கூற நினைத்தனர். இன்றேல் உலகம் சைவத்தை, மக்களின் ஜீவதாரமான உரிமையை மறுக்கும் ஒரு பேய் விசுவாசம் என்று கருதிவிடும் என்ற எண்ணினர். தேவாரம், திருக்கோவையார் முதலிய நூற்களில் தம் கொள்கைகளுக்கு ஆதாரவுத்தேடி நுணுகிநுணுகி ஆராய்ந்து சில செய்யுட்களைக்கண்டு ஆனந்தித்து கருத்துக்களைப்புரட்டி கவின்புறநூற்கள் எழுதினர். பத்திரிகைகளிலும், பிரசங்கங்களிலும் தம் புதிய கொள்கைகளை வற்புறுத்தினர். எடுத்துக்காட்டாக திரு வேதாசலம் அவர்கள்.

''சாதிவேற்றுமைஎன்னும்கொடிய தூக்குக்கயிறானதுகாதலன்பின்கழுத்தை இறுக்கிவிட்டது. காதலன்பிற்சிறந்து மறுவற்ற மதிபோல் விளங்கத்தக்கவரான நம் பெண்மணிகளின் கற்பொழுக்கத்தை நிலைகுலைத்து அதனை பழிபாவங்களால் மூடிவிட்டது. எந்தப்பெண்மகளாவது தான் காதலித்த இளைஞனை மணங்கூட இடம் பெறுகின்றனளா? எள்ளளவுமில்லையே ஏன்? ஒரு சாதிக்குள்ளே இருபது வீடுகளேயுள்ளன, ஒரு இனத்திலே அவள் ஒருவனை மணக்க வேண்டும். அவள் கயல்மீனையொத்த கண்ணழகியாயிருந்தாலென்ன! கண் குருடானவனைத்தவிர வேறு மணமகன் தன் இனத்தில் கிடைத்திலனாயின் அவள் அவனையேதான் மணந்து தீரல் வேண்டும். அவள் முத்துக் கோத்தாலொத்த பல்லழகியாயிருந்தாலென்ன? தன் பாழும்இனத்தில் ஒரு பொக்கைவாய்க்கிழவனைத்தவிர வேறுமணமகன் கிடைத்திலனாயின் அவள் அவனையேதான் மணந்துதீர வேண்டும். அவள் பல கலைகற்று கல்வியறிவிலும், இசைபாடுவதிலும் நுண்ணறிவிலும் சிவநேயஅடியார் நேயங்களிலும் சிறந்த கட்டழகியாயிருந்தாலென்ன? இறுமாப்பே குடிகொண்ட தன் சிறுமாக்குடியில் கல்வியிருந்த மூலையேகண்டறியாதவனும் பாட்டுப்பாட வாயைத்திறந்தால் ஓட்டமாய்வரவண்ணானை வருவிப்பானும்—அறிவை ஓட்டிவிட்ட வெறும் மூளையுடையானும் குடித்து வெறுப்பானுமாகிய ஒருவனைத்தவிர வேறுமணமகன் கிடைத்திலனாயின் அவள் சாதியைவிட்டு வேறுசாதியிற் கலக்கலாகாமையின் அக்கல்லாச் சுயனையே கணவனாய்க்கொள்ள வேண்டும். ஆ! பொருளற்ற இச்சாதி வேற்றுமைக்கொடுமையால் நம் அருமைப்பெண்மணிகள் படுந்துயர் மலையினும் பெரிதோ, அன்றிக்கடலினும் பெரிதோ, அன்றிஞாலத்திலும் பெரிதோ, இவ்வளவுதான் என்று கூறல் எம் ஒரு நாவால் இயலாது.

விலங்குகளும், பறவைகளுங்கூடத் தாம் தாம் விரும்பிய இணையையே கூடி இனிது வாழா நிற்க ஆறறிவுடைய மக்கட் பிறவியிற் பிறந்து ஆறறிவையும், அழகையும், நற்குணத்தையும் கண்டு பாராட்டிக் காதலன்பு கொள்ளத்தக்க ஆண் பெண் மக்கள் மட்டும் இடையே புகுந்தசாதி வேற்றுமையென்னும் கொலைஞனால் வெட்டியழிக்கப்பட்டு காதலன்பு என்னும் உயிர் ஓடிப்போனபின் இழிந்த காமப்பிணை வாழ்க்கையில் காலங்கழிக்கும்படி கட்டாயப்படுத்தப் பட்டால் இதனினும் வேறு கொடுங்கொலை உளதோ! கூறுமின்கள் அறிஞர்களே! உலகியலொழுக்கத்திற்கு அடிப்படையாய் நிற்கும் காதலன்பைக்கிழறுத்து விட்டால் அதன் மேல் நிற்கும் அவ்வுலகியல் வாழ்க்கை கீழ்விழுந்து நுழுங்காதொழியுமோ!'' என்றும்,

''இளமைப்பருவத்தில் ஆண்பெண் என்னும் இரு பாலார்க்கும் தோன்றுவதாகிய இன்ப உணர்ச்சியானது அழகு, அறிவு, நல்லியற்கையினால் உந்தப்பட்டு எழும் அன்பின்வயமாகி ஒருவரையொருவர் இன்றியமையாராய் ஒருங்குபொருந்தும் ஆண்பெண் மக்களுக்கு இவ்விழுமியகாதலின்பத்தையூட்டி அவரது வாழ்க்கையை தூய்மை செய்து அதனைப்பெரிதும் பயன்படச்செய்வதாகும்'' என்றும் கூறியுள்ளார் இதைஆதரித்துத் திரு வி. கல்யாணசுந்தரமுதலியார் அவர்களும்திருகா.சுப்பிரமணியபிள்ளையவர்களும், வேறு பல சைவத்தலைவர்களும் திறம்பட மொழிந்துள்ளார். இதனால் அறிவுடையார் எவரும் சைவம், காதல் மணத்தை ஆதரிக்கிறது என்று கூறத்துணியார். உண்மையில் சைவம் காதல் மணத்தை ஆதரிக்குமாயின் தற்காலச் சைவர்களிற் சிலராவது காதல் மணத்தை அனுஷ்டானத்தில் செய்து காட்டவேண்டும். ‘நல்லமரம் நல்ல கனி கொடுக்கும், கெட்டமரம் கெட்டகனி கொடுக்கும்' என்னும் பழமொழிப்படி உண்மையில் சைவம் காதல் மணத்தை ஆதரிக்குமாயின் இன்று சைவர்களிடம் அக்காதல்மணம் அனுபவத்தில் காணலாம். இன்றைய சைவர்கள் காதல் மணத்தை ஆதரிக்காவிடினும் அதற்கு எதிரிடையாக இல்லாமல் இருந்தாலாவது சைவம் காதல் மணத்தைப் போற்றுகிறது என்று கூறலாம். ஆனால், சைவத்தலைவர்களே! தம்மக்கள் ஒரு காதலனை விரும்பித்தேர்ந்து மணந்துகொள்ள இசைந்து நிற்கையில் அதைத்தடுத்து சுமார் 30 வயதுவரையும் தம்மகள் தான் காதலித்த புருடனை மணக்க இடங்கொடாது அவள் தம் காதலை நினைந்து நினைந்து நைந்து வருந்தும்படிசெய்கின்றார்கள் என்றால் மற்றவர்களைப்பற்றி கூறவும் வேண்டுமோ? இத்தகை அன்பர்களைத்தான் நமது தேசியக்கவி திரு. பாரதியார்,

‘நாடகத்தில் காவியத்தில்
காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி
நன்றாமென்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே
கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால்
உறுமுகின்றார்;
பாடைகட்டி யதைக்கொல்ல
வழிசெய்கின்றார்
பாரினிலே காதலெனும்
பயிரைமாய்க்க;
மூடரெல்லாம் பெருமையினால்
விதிகள்செய்து
முறைதவறி யிடரெய்திக்
கெடுக்கின்றாரே'

என்று கூறியிருக்கின்றார் போலும். இன்று உலகம் ஒரு மதத்தின் கொள்கையை அறிய அம்மத நூற்களில் கூறியிருப்பவைகள் என்னவென்பதை அறிய விரும்பவில்லை. மத நூற்களிற் சொல்லப்பட்டிருப்பவைகளை புலவர்களின் திறமைக்குத்தக எப்படி வேண்டுமானாலும் பொருளைப் புரட்டிக் கூறலாம் என்பதை நன்கறிந்திருக்கிறது. எனவே ஒரு மதத்திலுள்ள மக்களின் செயலைக்கொண்டே அம்மதத்தின் தன்மையை முடிவுகட்டுகின்றது. ஆகையால் சைவம் காதல் மணத்தை ஆதரிக்கிறதா? இல்லையா? வென்பதை அறிய அம்மதத்திலுள்ள மக்களின் நடவடிக்கைகளைக் கண்ணுறுவது நியாயமன்றோ? எனவே சைவம் மக்களின்மேல் ஜீவகாருண்யங் காட்டுஞ் சமயம் என்பதை உலகிற்கு நிரூபிக்க சைவர்கள் விரும்பினால் வீணாக,

சுடர்த்தோகாய்! தெருவில்
நாம் ஆடும்
மணற்சிற்றில்காலில் சிதையா
அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து
கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி
மேலோர்நாள்

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

பக்கீர்மஸ்தானின் அற்புத சித்தியும், பாரத மக்களின் பாமரத்தன்மையும்.

(திரு. கே. எஸ். டி. முத்துசாமி.)

தென்னிந்தியாவில் ராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்த திருவாடானைத் தாலூக்காவின் அண்மையிலுள்ளதாய நம்புதாளை எனப் பெரியக் கடற்கரையை யடுத்த ஒரு குடிசைக்கிராமத்தில் விளங்குபவருமான சுமார் 30 வயதுடைய முஸ்லீம் வாலிபப் பக்கீர் மஸ்தானவர்களின் அற்புத சித்திகளின் மகிமையினை யான் பத்திரிக்கைகளின் வாயிலாகவும், நேரில் சென்று வந்த நம் நாட்டு மக்கள் பலராலும் கேள்வியுற்றதுடனில்லாது கீழ் குறித்த சில காரணங்களை முற்கொண்டு அன்னவர் பால் சென்று வந்த எமது அநுபவத்தில்கண்டுணர்ந்த உண்மையினைப் பத்திரிகை வாயிலாக வெளியிட விரும்புகிறேன்.

வைதீகச்சைவ சமயிகள் எனக் கூறிக் கொள்வதில் செருக்குள்ள நமச்சிவாயப் பழங்களான பனிரெண்டாம் செட்டியார்கள் எனப்படும் ஓர் சிறு சமூகத்தைச் சேர்ந்தவன். நெடுநாளாக நோய் வாய்ப்பட்டு மணி மந்திரம் வைத்தியம் என்ற மூன்று சிகிச்சா முறைகளாலும் போதிய குணம் கிட்டாததால் ஏற்கனவே பழக்கப் பட்டுள்ளபடி திக்கற்றவருக்கு தெய்வமே துணை என்ற சோம்பர்க் கூட்டத்தார் சுருதிப்படி மூர்த்தி தலத் தீர்த்தங்கள் முறையே ஆடியும், ஆலயம் பல பல தொழுது நானழுததும் அவலமாய்ப் போனது கண்டு எனது ஏமாற்றத்தின் இழி நிலையினை ஆராய்ந் துணர்வான் விழைந்த காலை புதிய நண்பரொருவரின் நெருங்கிய பழக்கத்தால் சுயமரியாதைக் கொள்கைகளின் செம்மை நெறியினையையும், இயக்கக் கொள்கையினை மக்களிடை விளக்கு முகத்தான் வெளிவந்திலங்கும் விவாதத்திறமை நிறைந்த "குடி அரசு"ப் பத்திரிகையினையும் ஊன்றிக் கவனிக்கலானேன். அதன் பயனாய் எனது ஏமாற்றத்திற் குரிய காரணம் இனிது விளங்கியதுடன், பழமையின் நாட்டம் தெற்றென விளங்கப் பெற்றவனாய் எந்த ஒரு விஷயத்தினையையும் ஆராய்ச்சி அனுபவத்திற்குப் பொருந்துவன கண்டாலன்றி பழக்க வழக்கங் காரணமாய் மூட நம்பிக்கைகளும் என்பால் இடம் பெற லொழிந்தது.

எனது வரலாறு இவ்வாறாக, அறிவிற்கோ, அனுபவத்திற்கோ முற்றிலும் மாறானதும் பகற் கொள்ளைக் குழுவினரின் திருக்கூத்து என்பதிலும் ஐயமற உணர்ந்தேனெனினும் அறிவுஇயக்கத்தைத் தூற்றித் திரியும் சிலவைதீகர்களின் அறியாமையை அகற்ற மேற் கூறியவாறான திருப்பாலைக்குடி சாமியார் எனப்படும் நம்புதாளைப் பக்கீர் மஸ்தானிடம் சென்ற 18-8-31 ல் யானும் எனது துணைவியும் உறவினர் நண்பர் முதலாயவர்களுட்பட இருபதின்மர் நம்புதாளைச் சேர்ந்தோம்! மஸ்தானின் வரலாற்றினை விசாரித்துணர்ந்தபடியே சின்ன வண்ணான் குளம் எனப்படும் சேற்று நீர் குளத்தில் நீராடி ஆங்கு விற்கும் தகர டின்களை விலைக்கு வாங்கி பிறிதொரு குளத்தில் தீர்த்த மெடுத்து மஸ்தானின் இருப்பிடமாய கடற்கரை குடிசைப்புறம் சென்று அன்னவர் வரவை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தோம். அவ்வமயம் ஆங்கு மஸ்தானைக் காணவந்தவர்கள் ஆண் பெண் அடங்கலும் சுமார் 300 பேருக்குக் குறையாதிருக்கலாம், அது காலை மஸ்தான் கூட்டத்தைச் சார்ந்த முஸ்லீம் வாலிபர் ஒருவரால் ஒரு உபந்நியாசம் பழமையைத் தழுவிய முறையில் பக்கீர் மஸ்தான் பிறப்பு வளர்ப்பு வரலாற்றினை அரைமணி நேரமும், மக்களுக்குற்ற சகல ரோக நிவாரணியும் இஷ்டார்த்த சித்திகள் அளிக்கவல்லதென அவர் ஊதிக்கொடுக்கும் தீர்த்த விஷேட்டத்தைக் குறித்தும் அதனை உபயோகிக்கும் முறையினைப் பற்றியும் அரைமணி நேரமும், பின்னர் அம்மஸ்தானின் காரணமகிமைக் களஞ்சியம் என்ற புத்தகங்களையும், படங்களையும் பற்றிக்கூறு முகத்தான் ஒரு மணிநேரமும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் படுகின்றது. வந்தோர் மஸ்தான், தீர்த்தமோதிக்கொடுத்து 20,30, 40 நாட்களென அதனை உபயோகிக்கும் கால அளவினை உடன் வரும் சிஷ்யர்களால் கூறப்படுகின்றது. பின்னர் திரும்பிப்பாராது வந்தவழியே சென்றிடவேண்டுமென்ற கட்டளை பிறக்கின்றது. இம்முறை பொதுவாக ரோகிகட்கும், குறிப்பாக ஆண்களுக்குமே. பிள்ளைவரம்வேண்டும் பெண்களுக்கு எலுமிச்சம் பழம் ஓதிக்கொடுத்தலென்றமுறையொன்றுண்டு. அப்பழரசத்துடன் தீர்த்தமும் சேர்த்து ஏழு இரவு உபயோகிக்க புத்திரஉற்பத்தியாமென போதிக்கப்படுகின்றது. மேற்கூறிய முறைகளின்படி சிறிதும் வழுவாது யானும் என்னுடன் சென்றுவந்த ஆண், பெண் அனைவரும் குறிப்பிட்ட கால அளவு படி உபயோகித்ததில் கண்ட பலன் கானல் நீர் முயலின் கோடே. நோயாளர் நோய் நீங்கினார்களில்லை. மகளிர்கள் மக்கள் பேறடையு மார்க்கமுமில்லை. வஞ்சனையும், வயிற்றுப் பிழைப்பு நாடகமும், பகற்கொள்ளையுமே பக்கீர் மஸ்தானின் அற்புத சித்தியாமென்பதும் அறியாமையும், மூடநம்பிக்கையும் வைதீக மதக்கல்வியுமே நம்மிந்திய மக்களின் பாமரத்தன்மைக்குக் காரணம் என்பதிலும் சிறிதும் ஐயமில்லை.

இது இவ்வாறாக காரைக்குடியில் ஓர் வணிகர் தமக்குற்ற குஷ்டநோய் நீங்கப்பெற்றுள்ளார் எனப் பத்திரிகையில் வெளியான செய்தியினையும், மற்றும் தீர்த்தத்தின் மாண்பினைப்பற்றிய கூற்றினையும் நேரில் சென்று அறிந்தவர்பால் கடாவியும் விசாரித்தறிந்ததில் எல்லாம் புரட்டும், ஏமாற்றமும் அன்றி உண்மையன்று என்பது தெளிவாகின்றது. காந்தி மகாத்மா என்ற வளவிலே கண்மூடித்தனமாய் அவர் கூறுவதை அப்படியே பின் பற்றும் மக்கள் போன்றும், மஸ்தான் சாய்பை மகானெனப் போற்றித் திரிவதில் ஏதும் ஆச்சரியப்படக் காரணம் இன்றெனினும் எமது அனுபவத்திலறிந்தவற்றைப் பொது மக்கள்பால் தெரியப்படுத்துவதை எனது நீங்காக்கடமையாமென நன்குணர்ந்தேனாதலால் இனியேனும் இத்துணை மயக்குரைகளில் காதலுற்றுழலாதிருக்குமாறு எச்சரிக்கை செய்து இஃதை முடிக்கின்றேன்.

நெட்டால்.

இத்தர்பன் மாநகரத்தின் சுற்றுப்புறங்களில் வசிக்கும் நமது இந்திய மக்களினது நன்மையின்பொருட்டு ஓர் பிரசவ வைத்தியசாலையும், ஏழைகளின் பொருட்டு ஓர் இலவச மருந்து சாலை இல்லாக்குறையை நீக்க உத்தேசித்து, பெருந்தொகுதியான இந்திய மக்களடங்கிய மேவிலுக்கடுத்த, சான்சன் ஈல் என்னுமிடத்தில் மேற்குறித்துள்ளக்கட்டிட மடங்கிய இரண்டுதுண்டு நிலம், பொதுமக்களினது சுகாதார நன்மையைக்கருதி மேற்குறித்துள்ள ஸ்தாபனங்களுக்கென நெட்டால் பௌத்த சங்கத்தினர்களது ஆதரவில் 460 பவுனுக்கு வாங்கியுள்ளோம். ஆகையால், இதனைக்கண்ணுறும் ஒவ்வொரு கனதனவான்களும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவிபுரிந்து இப்பெருங்காரியத்தைச் சம்பூரணமாக்குவிப்பீர்களெனத் தங்களினது பெரும்பேற்றைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆ. கா. பெரியசாமியார்.
மு. இராமசாமி.
அ. நாதமுனியார்.
சி. சி. சுவாமி.
அ. துரைசாமியார்.
தபால் பெட்டி 1710,
தர்பன், நெட்டால்.

சட்டத்தின் யோக்யதை.

ஓர் குடியானவனுக்கும் பாதிரிக்கும் சண்டை,

பாதிரி வயிறு நிறைய குடியானவன் பட்டினி கிடப்பதா?

லண்டன் கோர்ட்டில் நிலச்சுவான்தாரான பாதிரியார் ஒருவர் தன் குடியானவன் சரியாகவேலை செய்யவில்லை என்றும், அவன் கொடுக்கவேண்டிய கட்டணத்தைச் செலுத்தவில்லை என்றும், குற்றம் சாட்டினார்.

நீதிபதி குடியானவனை சரியாக ஏன் வேலைசெல்யவில்லை என்றதற்கு அவன் கூறியதாவது:—

காலை ஐந்து மணிமுதல் இரவு எட்டு மணிவரை நான் வேலை செய்வதென்பது வெட்கக்கேடான காரியமாக இருக்கிறது. பாதிரி வயிறு புடைக்கத்தின்பதற்கு நான் பட்டினிகிடந்தா சாகவேண்டுமா?

நீதிபதி அவனை சட்டப்படி நடக்கவேண்டுமென்றார். அதற்கவன் ஆத்திரத்துடன் கூறியதாவது:—

சட்டமா! அதனை நான் அயோக்கியர்களைப் பாதுகாக்கும் கவசமென்பேன். இந்த பாதிரி வருட மொன்றுக்கு 800 பவுன் பெருகின்றான். இவன் வெட்டி முறிப்பதென்ன? இதைக்காட்டிலும் மோசடி என்ன இருக்கிறதென்றான்.

"இந்தியா"

ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபாலிட்டிக்கு புதிய சட்டப்படி நடக்க வேண்டிய தேர்தலுக்கு இம்மாதம் 4ந் தேதி ஸ்லிப்பு வாங்க தேதி போட்டிருந்தபடி 4ந் தேதி 24 ஸ்தானங்களுக்கு சுமார் 50 அங்கத்தினர்கள் வரை போட்டி போட ஸ்லிப்பு கொடுத்திருந்தார்கள்.

இவற்றுள் திருவாளர்கள் ஆர். கண்ணம்மாள், (ஈ. வெ. ராமசாமி சகோதரி) கே. எ. ஷேக்தாவுத் சாயபு இப்போதைய சேர்மென், எம். கே. மகமது சுல்தான் சாயபு நெல்மிஷன், பி. சின்னுசாமி கவுண்டர் நெல்மிஷன், மாரிமுத்து பண்டாரம் தாழ்த்தப்பட்ட வகுப்பு ஆகிய ஐவர்களுக்கு போட்டி ஸ்லிப்பே இல்லாமல் வெற்றி பெற்றூர்கள்,

மற்றும் ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் இப்போதைய கவுன்சிலர், எம். சிக்கய்ய நாயக்கர் இப்போதைய கவுன்சிலர், ஈ. வி. நஞ்சப்ப செட்டியார், இப்போதைய வைஸ்சேர்மென், ஈ.ஓ.சி. முத்துசாமி கவுண்டர் இப்போதைய கவுன்சிலர், கே. கே. குதரத்துல்லா சாயபு இப்போதைய கவுன்சிலர், கே. எம். சீனிவாச பிள்ளை இப்போதையகவுன்சிலர், ஐ. ப. மகமட் சுல்தான் சாயபு சாராப்புக்கடை கே. அப்துல் ரஸாக் சாயபு உப்புமண்டி, காதர்சா குமாரர் சி. ரெங்கராஜுலு செட்டியார் இப்போதைய கவுன்சிலர், எஸ். வெங்கடாசல முதலியார் ஜவுளி வியாபாரம், கேசவலால் சேட் மண்டி வியாபாரம் ஆகியவர்கள் தங்களுக்கு போட்டியாக ஸ்லிப் போட்டிருந்த கனவான்கள் அவர்கள் ஸ்லிப்பை (போட்டியை) வித்டிரா செய்து கொண்டதால் இவர்களும் போட்டியில்லாமல் வெற்றி பெற்றவர்களானூர்கள்.

மற்றும் எட்டுஸ்தானங்களுக்கு போட்டி பலமாக இருப்பதாகத் தெரிகின்றது. கருங்கல்பாளையத்தில் இரண்டு வார்டுகளுக்கு ஐந்து பேர்கள் போட்டி போடுகின்றூர்கள். அதாவது ஒரு வார்டுக்கு திருவாளர்கள் கே.பி.ஷண்முகம் பிள்ளையும் [மாஜி கௌன்சிலர்] டி. சீனிவாச முதலியாரும் [மாஜி சேர்மென்] ஒரு வார்டுக்கு, மாரிமுத்து பிள்ளையும் [இப்போதைய கவுன்சிலர்] குழந்தை பிள்ளையும் மிராசுதார் ராஜுலுப் பிள்ளையும் (மாஜி முனிசிபல் உத்தியோகஸ்தர் ஸ்ரீ மிராசுதார்)

ஒக்கிலியத்தெரு வார்டில் அப்பையக்கவுண்டரும் (பேங்கர்) பாண்டிக் கவுண்டர்என்னும்சௌடப்பக் கவுண்டரும் (பேங்கர்) பார்ப்பனத்தெரு வார்டுக்கு வக்கீல் யூ. எஸ். சுப்பிரமணிய அய்யரும், வக்கீல் சி. பி. ராகவேந்திரராவும், வளையக்காரத் தெரு வார்டுக்கு இ. எல். கோவிந்தசாமி நாயுடுவும் (கண்ட்ராக்டர்) கருங்கல்பாளையம் மிராசுதார் தேவநாயகமும், ஒப்பணக்காரத்தெரு வார்டுக்கு இப்போதைய கவுன்சிலர் எம். எஸ். முத்துகருப்பஞ் செட்டியாரும் மாஜி கவுன்சிலர் வி, ஐ, டேவிட்டும், ஸ்டேஷன் பாலவார்டுக்கு இப்போதைய கவுன்சிலர் பட்டக்காரார் எம். எல். சி. அவர்களும், மாஜிகவுன்சிலர் ஆர். எஸ். விசுவாசமும், ரெவரெண்ட் ஞானமுத்து, ஈ. ஒய். சுல்தான் சாயபு (கண்ட்ராக்டர்) ஆகியவர்களும் போட்டி போடுகின்றூர்கள். என்றாலும் இரண்டொரு வார்டுகள் தவிர மற்றவைகளின் போட்டி அவ்வளவு மும்முரமாக இருக்காதென்றே கருதுகின்றோம்.

தேர்தல் தேதி குறிப்பிட்டவுடன் ஈரோட்டில்ஏற்பட்ட தடபுடல்களும் கட்சிகளும் நெருக்கடிகளும் வெகு பலமாக இருந்து வந்தது. இதற்குக் காரணம் இப்போது இருக்கும் சேர்மென் ஜனுப் ஷேக்தாவுத் அவர்கள் மறுபடியும் தான் சேர்மெனுப் வருவதில்லை என்று சொல்லிவிட்டதால் பல கவுன்சிலர்கள் தான் தான் சேர்மெனுப் வரவேண்டுமென்று கக்ஷிசேர்க்க ஆரம்பித்துவிட்டார்கள். இதில்பார்ப்பன பிரமுகர்களும் இரண்டொருவர் கலந்து தங்களுக்குப் பிடித்த கனவான்களை சேர்மனுக்க தந்திரம் செய்து கக்ஷி சேர்த்தார்கள். பல அபேக்ஷகர்களையும் நிறுத்தினூர்கள்.

கடைசியாக திரு. இராமசாமி, திருவாளர் பட்டக்காரர் முதலியவர்கள் ஜனுப் ஷேக்தாவுத்சாயபு அவர்களை மறுபடியும் சேர்மனுக இருக்தாகவேண்டும் என்று நிர்பந்தப்படுத்தி சம்மதிக்கச்செய்த பின்பு தேர்தல் உணர்ச்சி வேறு விதமாய் மாறிற்று என்றாலும், போட்டிகள் மாத்திரம் வெகு பலமாக ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால்சேர்மன் ஷேக்தாவுது சாயபு அவர்கள் இப்போட்டிகளுக்குள் நுழைந்துதன்னிடம் அன்புள்ளவர், வெறுப்புள்ளவர் என்கின்ற வித்தியாசமில்லாமல் எல்லாரிடமும் சென்று அலைந்து திரிந்து நாள் 1-க்கு 24 மணி நேரம் வீதம் வேலை செய்து மொக்க...

தில் 16 ஸ்தானங்களுக்குப் போட்டியில்லாமல் செய்துவிட்டார். இவ்விஷயத்தில் சேர்மென் அவர்களின் பிரயாசையும், வெற்றியும் மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

புது சட்டப்படி கூட்டப்படும் இந்த நிர்வாகமும் ஜனுப் ஷேக்தாவுது அவர்கள் தலைமையில் ஒழுங்காகவும், வெற்றிகரமாகவும் நடைபெறுமென்பதில் ஆக்ஷேபணை இல்லை. வெற்றி பெற்ற கவுன்சிலர்கள் சேர்மனுடன் ஒத்துழைத்து ஈரோடு முனிசிபாலிடிக்கு இப்போது ஏற்பட்டுவரும் நல்ல பெயரை விர்த்தி செய்வார்களாக.

திருப்பதி தேவஸ்தான மசோதா பரிசீலனைக் கமிட்டி.

திருமலை, திருப்பதி தேவஸ்தான மசோதா பரிசீலனைக் கமிட்டி தீர்மானித்திருப்பதாவது:--

திருமலை, திருப்பதி தேவஸ்தானம் மசோதாவால் பாதிக்கப்படுவோர் (விசாரணைக்கர்த்தாக்கள், பெத்தஜீயங்கார், சென்னை இந்து மத பரிபாலன போர்டார் முதலியோர்) மசோதாவில் செய்ய வேண்டிய திருத்தத்தைப் பற்றி கடித மூலம் 1931-ம் வருடம் நவம்பர் 25 தேதிக்குள் தமக்கு அனுப்பிவைக்கும்படியாக சென்னை சட்டசபைக் காரியதரிசி அவர்களைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்பதாக இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

பொதுக்கூட்டம்.

"தீபாவளி—பார்ப்பன சூழ்ச்சி"

6-11-31 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பிராட்வே, ஸ்ரீராமுலு பார்க் [லோன்ஸ்கொயரில்] திராவிடன் ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் "தீபாவளி என்பது பார்ப்பன சூழ்ச்சி" என்பதாகதிருவாளர்கள் பண்டிதர் திருஞானசம்பந்தம், எஸ். குருசாமி பி, ஏ., அ. பொன்னம்பலம், எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். ஆகியவர்கள் சொற்பொழி வாற்றினூர்களென ஒரு நிருபர் எழுதுகிறூர்.

புதிய பத்திரிகை சட்டம்.

சென்னை போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் புதிய பத்திரிகை அவசரச்சட்டம் வெளியிடப்படும். இச்சட்டம் சென்ற மாதம் 17ந் தேதி இந்தியா கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. இ...

...ண்டும் பத்திராசிரியர்கள் ...ன்னையில் சர்க்கார் பிரதமக்காரி... தரிசியிடமும், வெளியிலுள்ளோ... ஜில்லா மாஜிஸ்திரேட்டிடமும் கேட்டுத்தெரிந்து கொள்ள...

தோழர் அழகர்சாமி அவர்கள் தேகநிலை.

கடந்த இரண்டு நாட்களா... ஆகாரமுட்கொள்ளும் படியா... நிலைமை யேற்பட்டிருக்கிறது... டாக்டர்கள் N. M. லிங்கம், P. S. N. மூர்த்தி நாயுடு இவர்கள் அ... ரது உடல்நிலையைப் பற்றிக் ... னித்து வருகிறூர்கள். சுற்று... பிரயாணம் செய்யவோ, பொது... கூட்டங்களில் பேசவோ இ...னும் ஒருமாத காலமாகுமெ... டாக்டர்கள் அபிப்பிராயப்ப...றூர்கள். திரு R. S. முத்துசா... செட்டியார், அருணாசலம் செ...டியார் இவர்களுடைய பராம...ப்பு போற்றத்தக்கதாகும். தோ...ழர் K. A. சித்தையன் அவர்கள் உதவி பெரிதும் பாராட்டத்தக்கதாகும். இன்னும் சில தினங்களுக்குள் தோழர் அழகர்சாமி அவர்கள் பட்டுக்கோட்டைக்குப் புறப்படுவாரெனத் தெரிகிறது என ஒரு நிருபர் எழுதுகிறூர்.

திறப்புவிழா.

மேலப்பாளையம் கணேசபுரம் கல்வி அபிவிர்த்தி வாசகசாலைத் திறப்பு விழா 23-10-31 தேதி வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு ஆதிதிராவிட இளைஞர்களின் ஆதரவில் திரு. தளவையா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. கல்வியின் அவசியத்தைப்பற்றியும் வாசகசாலையின் அவசியத்தைப்பற்றியும், இன்னும் பல விஷயங்களைப்பற்றியும் சில அன்பர்கள் பேசியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறூர்.

மதிப்புரை.

விடுதலை.

இது திருச்சியிலிருந்து வாரந்தோறும் திங்கட்கிழமையில் வெளிவருவது. இதன் ஆசிரியர் எம். சாமிநாதன் என்கின்ற மகமது அலி அவர்கள். இதன் கொள்கை அரசியலில் முஸ்லீம் கட்சியை ஆதரித்தும், காந்தி காங்கிரஸ் கொள்கையை எதிர்த்தும் போராடுவதென்றும், மூடநம்பிக்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் போக்குவதற்கு உழைப்பதென்றும், தீண்டாமையையும் சாதி பேதத்தையும் ஒழித்து சமதர்மத்திற்குப்பாடுபடுவதென்றும் தெரிகிறது. இதன் விலை தனிப்பிரதி காலணு. உள்ளூருக்கு வருஷ சந்தா ரூ. 1

குடி அரசு

ஈரோடு 1931 நவம்பர் 8உ

வகுப்புவாதிகள் அயோக்கியர்களா?

—:0:—

இந்தியர்களின் அடிமைத் தன்மைக்கும் இழி நிலைக்கும் மதமும், ஜாதியும், வகுப்பும அவை சம்மந்தமான மூடநம்பிக்கை எண்ணங்களும், வெறிகளும், சடங்குகளும், இவற்றிற்காக ஒருவரை ஒருவர் அவநம்பிக்கை கொண்டு அடக்கி ஆள நினைப்பதுமே முக்கியமான காரணங்களாகும் என்பதாக நாம் பல தடவை சொல்லி வந்திருக்கின்றோம். பலமாக அனேக உதாரணங்களுடன் எழுதியும் வந்திருக்கின்றோம்.

மதங்களின் பேரால் பல முக்கிய மதங்களும், அநேக கிளை மதங்களும் உட்பிரிவு, மதங்களும் ஏற்பட்டு, மக்களை பெரும் பெரும் பிரிவுகளாகப் பிரித்துவிட்டதென்றாலும் வருணாச்சிரமத்தையும், ஜாதிப்பிரிவுகளையும், பலவகுப்புப் பிரிவுகளையும் கொண்டதான இந்துமதமானது எல்லா மதங்களையும் விட மக்கள் சமூகத்திற்குப் பெரிய இடையூறாய் இருந்து கொண்டுமக்களின் ஒற்றுமையையும், தன்னம்பிக்கையையும் அடியோடு பாழாக்கி வருவதுடன் இதன் காரணமாய் மக்கள் வலி இழந்து, சுயமரியாதை இழந்து, சுதந்திரமற்று நடைப்பிணங்களாகவும், பகுத்தறிவற்ற மிருகத் தன்மையிலும் கேவலமாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதற்கு உதாரணமாக, சென்னைமாகாணத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு பார்த்தாலே போதும். இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஜனங்கள் சுமார் மூன்றே முக்கால் கோடி மக்கள் இருக்கின்றார்கள்; என்றாலும் அவர்கள் 385 ஜாதிகளாகவும் மற்றும் பல உள் பிரிவு ஜாதிகளாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றார்கள் (இந்த ஜாதி பெயர்களும் ஒவ்வொரு ஜாதியாரின் எண்ணிக்கையையும் காலம் சென்ற திரு. எல். டி. சாமிக்கண்ணு பிள்ளை அவர்களால் பிரசுரித்த மெட்ராஸ் இயர்புக் என்னும் புஸ்தகத்தில் காணலாம்) நாளேற நாகரீகத்தின் காரணமாகவும், செல்வநிலையின் காரணமாகவும் இன்னும் அதிகமான ஜாதிப்பிரிவுகளும், உட் பிரிவுகளும் ஏற்படும்படியான நிலையிலேயே தேசம் போய்க் கொண்டிருக்கின்றதே தவிர அவைகள் குறைந்து ஒன்றுபடத்தக்க முயற்சியோ அறிகுறியோ காண்பதற்கில்லை.

இந்தியாவின் 8-ல் ஒரு பாகம் கொண்ட சென்னை மாகாணத்தில் மாத்திரம் 385 ஜாதிப்பிரிவுகள் இருக்கின்றதென்றால் இனி மற்ற 7 பாக ஜனத்தொகையில் எத்தனை ஜாதிப்பிரிவுகள், எத்தனை உட்பிரிவுகள் இருக்கக்கூடும் என்பதை வாசகர்கள் சற்று சிந்தித்துப்பார்த்தால் தானாக விளங்கிவிடும்.

இந்த ஜாதிப்பிரிவுகள் மாத்திரமல்லாமல் "உயிரினும் தேசத்தினும் முக்கியமாய் கருத வேண்டிய"தான தாய் பாஷைப் பிரிவுகள் எவ்வளவு? இவ்வளவு ஜாதியும், தாய் பாஷையும் தங்களுக்குள் பிரிபட்டு இருக்கின்றோம் என்று மாத்திரம் நினைத்துக் கொண்டிருக்காமல் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற உள் எண்ணமும் வெளி நடவடிக்கைகளும் வெறுப்பும் துவேஷமும் எவ்வளவு?

இவற்றையெல்லாம் கவனிக்காமலும், இதை நேர்படுத்த முயற்சிக்காமலும் யாரோ சில சோம்பேரிகளும் சுயநலக்காரரும் "தேசீயம் தேசீயம்" என்று சொல்லி மக்கள் கண்களில் மிளகாய்ப் பொடியைப் போட நினைத்தால் நாடு எப்படி க்ஷேமம் அடையும்? கொஞ்ச நாளைக்கு மாத்திரம்தான் இந்த தேசீய வயிற்றுப்பிழைப்பு வியாபாரம் நடத்த முடியுமே ஒழிய இது என்றும் நிலைத்திருக்க முடியுமா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

"வகுப்பு வாதம் கூடாது" என்று சொல்லுவதன் மூலம் ஏதோ சில பயங்காளிகளையும், வேறு வழியில் பிழைக்க வகையற்ற தேசீய வாதிகளையும், உத்தியோகம் பதவிப் பிரியர்களையும் மிரட்டலாமே ஒழிய, வகுப்புப் பிரிவுகளாலும், உயர்வு தாழ்வு வித்தியாசங்களாலும் உள்ள கஷ்டத்தையும் கேட்டையும் ஒழிக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

"வகுப்பு வாதம் மத வாதம் ஜாதி வாதம் பேசி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பவர்களால் தேசத்தின் விடுதலை கெட்டுப் போகின்றது" என்று திப்பிலி, தேசாவரம், சதகுப்பைகளெல்லாம் பேசவும் எழுதவும் தொடங்கிவிட்டதைக் கண்டு நாம் சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை.

அந்தப்படி எழுதும் பேசும் யோக்கியர்களில் 100க்கு அரைப்பேராவது தங்கள் மதத்தையும், உள் மதத்தையும், ஜாதியையும், உள் ஜாதியையும், வகுப்பையும், உள் வகுப்பையும் விட்டு விட்டவர்கள் உண்டா என்று பந்தயம் கட்டி கேட்கின்றோம்.

ஆகவே தேசீயம் என்பதும், தேசீயப் பிழைப்பு என்பதும் மக்களை எவ்வளவு அயோக்கியர்களாகவும் இழிதகைமை உள்ளவர்களாகவும் செய்து விடுகின்றது என்பது கவனித்துப்பார்ப்பவர்களுக்கு விளங்காமல்போகாது.

எப்பொழுது ஒருவனுக்கு, அவனுக்கு என்று ஒரு தனி மதம், தனி ஜாதி, தனி வகுப்பு என்பதாகபிரிக்கப்பட்ட பின்பு அவன் தனது மதம், தனது ஜாதி, தனது வகுப்புக்கு என்று ஒரு உரிமை கேட்பதில் என்ன தப்பிதமோ, அயோக்கியத்தனமோ இருக்கமுடியும்?

வகுப்புவாதம், மத வாதம், ஜாதி வாதம் கூடாது என்கின்ற யோக்கியர்கள் ஒருவராவது மதத்தையும், ஜாதியையும், வகுப்பையும் அழிக்கச்சம்மதிக்கின்றார்களா? அதுமாத்திரமல்லாமல் பார்ப்பனர் முதல் பறையர்வரை மாயாவாதம் முதல்சைவர்வரை அவரவர்களின் ஜாதி மத வகுப்புக்கு உயிரை விட்டாவது காப்பாற்ற வேண்டும் என்கின்றார்களேயொழிய, ஒருவராவது ஜாதி மதவகுப்புக்களைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்று சொல்லுகின்றவர்களை கண்டு பிடிக்க முடியுமா? மதத்தையும், ஜாதியையும், வகுப்பையும் ஒரு புறத்தில் காப்பாற்றிக்கொண்டு மற்றொரு புறத்தில் ஜாதி மதவகுப்புப்பிரதிநிதித்துவம் கேட்பதை அயோக்கியத்தனம், இழிதன்மை என்று சொன்னால் அப்படிச்சொல்லுவது ஆயிரம்மடங்கு அயோக்கியத்தனமும், இரண்டாயிரம் மடங்கு இழிதன்மையும், வஞ்சகத்தன்மையும், துரோகத்தன்மையும் ஆகாதா என்பதோடு இது தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கும், வாழ்வுக்கும் என்னவேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற கீழ்மக்கள் தன்மையா அல்லவா என்று கேட்கின்றோம்.

தேசம், ஜீவராசிகளுக்குபொதுவானதாகும், தேச ஆட்சியும் மக்களுக்குப் பொதுவானதாகும். எந்த மனிதனுக்கும் ஆட்சியில் அவனது இஷ்டத்தை தெரிவிக்கவும், ஆட்சியில் பங்குபெறவும், உரிமை உண்டு என்பதை எந்த மூடனும் மறுக்கமுடியாததாகும். ஏதோ சில அயோக்கிய வஞ்சகர்களது செல்வாக்குக்காலத்தில் அவர்களது வலையில் விழுந்த முட்டாள் மன்னர்களான, ஒழுக்கீனமுள்ள அரசர்கள் காலத்தில்ஏற்பட்ட அக்கிரமங்களாலும், கொடுங் கோன்மைகளாலும் ஜாதிமத வகுப்பு ஆணவங்கள் ஏற்பட்டு ஒரு ஜாதி மத வகுப்பை மற்றொரு ஜாதி மத வகுப்பு அடக்கி ஆளும்படியாகவும், ஒரு ஜாதி மத வகுப்பு உழைப்பில்மற்றொரு ஜாதி மதவகுப்பு சோம்பேரியாய் இருந்து கொண்டு உண்டு வாழும் படியாயும் செய்யப்பட்டு விட்டதினாலேயேஎல்லா காலங்களிலும் எல்லா அரசாட்சிகளும் அப்படிப்பட்ட வஞ்சகர்களுக்குஉதவியாகவே இருக்கவேண்டுமா என்றும் யாரோ சிலருக்கு பிழைப்பதற்கு வேறு வழி இல்லாததினாலேயே அந்த ஈனர்களுக்கு கூலியாய் இருக்கும் இழிதகைமையை மற்றவர்களும் அடையவேண்டுமா என்று கேட்கின்றோம்.

ஏதாவது ஒரு மனிதன் "என்னுடைய மதம் சிறுபான்மையானது என்றும், என்னுடைய ஜாதி வலியிழந்த ஜாதியென்றும், என்னுடைய வகுப்பு தாழ்த்தப்பட்டு இழிவு படுத்தப்பட்டதென்றும் சொல்லி, அதன் காரணமாக ஆட்சியில்எனக்குள்ள பங்கு இன்னது என்பதை தெளிவாய்ச் சொல், என்னை நீ அடக்கிஆள முடியாதபடிசெய்துவிடு" என்று சொல்வதில் என்ன தப்பு இருக்கின்றது என்று கேட்கின்றோம். இதற்கு பதில் சொல்லாமல் அப்படிக்கேட்பது "குலாம்தன்மை" என்றும் தேசத்துரோகத்தனம் என்றும்சொல்லுவதானால் அப்படிச்சொல்லுகின்றவர்களை இப்படிச்சொல்லுவது "வயிற்றுப்பிழைப்புக்கு எச்சிலை பொறுக்கும் இழிதன்மை" என்று ஏன் சொல்லக் கூடாது. தன் பங்கை தனக்குக் கொடு என்று கேட்டவுடன் கொடுக்க மறுத்த குடும்பங்கள் எல்லாம் அனேகமாய்நாசமுற்றே இருக்கின்றன. ஆகவே எந்த மதக்காருடைய பங்கையானாலும், எந்த ஜாதி வகுப்புக்காருடையபங்கையானாலும் மறுத்து ஏமாற்றப்பார்த்தால் கண்டிப்பாக அந்த நாடுகேடுறுவது திண்ணம். எப்படிக் கேடுற்றாலும்சில பொரு

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ப்பற்ற கூலிகளின் ஜீவனம் நடந்தேறலாம் என்பதில் நமக்கு சந்தேகமில்லை. ஆனால் நாடு கெடும் என்பதை உண்மையும் பொறுப்பும் உள்ள மக்களுக்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சுமார் ஏழு கோடி தாழ்த்தப்பட்ட மக்களும், சுமார் எட்டு கோடி முஸ்லீம்களும் தங்களுக்கு இந்துக்களிடம் நம்பிக்கை இல்லை என்று சொன்னால் "எங்களை நம்பித்தானாக வேண்டும்." என்று சொல்ல எந்த இந்துவுக்கு உரிமை உண்டு என்று கேட்கின்றோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தக்க சமாதானம் சொல்லி சரிப்படுத்த முயற்சிக்காமல் 'தாழ்த்தப்பட்டவர்களுக்கு காந்தியிடமும், காங்கிரசினிடமும் நம்பிக்கை இருக்கின்றது. அம்பட்காரிடம் நம்பிக்கை இல்லை' என்று சில பாவங்களுக்கு பணம் கொடுத்து சீமைக்குத் தந்தி அடித்து பத்திரிகைகளில் விளம்பரப்படுத்திவிடுவது யோக்கியமான செய்கையாகுமா? என்று கேட்கின்றோம்.

உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் என்பவர்களில் நூற்றுக்கு கால்பேராவது காந்தியையும் காங்கிரசையும் நம்புகின்றார்களா என்று பந்தயம்கட்டிக் கேட்கின்றோம்.

சீமையில் திரு காந்தியவர்கள் "தாழ்த்தப்பட்டவர்களுக்கு காங்கிரசும் நானும்தான் பிரதிநிதி" என்று சொன்னபோது திரு அம்பட்கார் சொன்ன பதிலுக்கு திரு காந்தி என்னபதில் சொன்னார்? அம்பட்கார் அவர்கள் நல்ல வெளிப்படையான பாஷையில் 'காங்கிரசுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை, காங்கிரசில் தாழ்த்தப்பட்ட மக்கள் கிடையாது. அப்படியிருக்க திரும்பத் திரும்ப திரு காந்தியவர்கள் காங்கிரசும் தானும் தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பிரதிநிதிகள் என்று சொல்லுவது பொருப்பற்றவர்கள் சொரணையில்லாமல் பேசும் பேச்சாகும்" என்று எடுத்துச்சொன்னார். அப்படி இருக்கும்போது மறுபடியும் மறுபடியும் காங்கிரசுதான் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பிரதிநிதி என்று சொல்லுகின்றவர்களுக்கு சிறிதாவது மானமோ, சுயமரியாதையோ இருக்குமானால் திரு. அம்பட்காருக்கு பதில் சொல்லிவிட்டு மேல்கொண்டு சமாதானம் சொல்லவேண்டும். அதாவது இன்ன இன்ன தாழ்த்தப்பட்டமக்கள் இத்தனை பேர்கள் காங்கிரசில் இருக்கின்றார்கள். அவர்களது நிலைமை இன்னது' என்று தெரிவித்துவிட்டு அம்பட்காரையும் அவரது அபிப்பிராயத்தையும் கண்டிப்பது ஒழுங்காகும். அப்படிக்கில்லாமல் 'அம்பட்கார் ஒரு குலாம்' 'எம். சி. ராஜா ஒரு குலாம்' 'என். சிவராஜ்ஒருகுலாம்' 'மதுரைப்பிள்ளை ஒருகுலாம்' 'அவர்களைஆதரிக்கின்ற மற்றவர்களும் குலாம் இழிமக்கள்' என்று பேசிவிட்டால் எழுதிவிட்டால் சமாதானமாகிவிடுமா என்று கேட்கின்றோம். இந்தப்படி பேசுகின்ற எழுதுகின்றவர்களுடைய உண்மை குலாம் தன்மை நமக்குத்தெரியாதா என்பதை அவாவர்களே யோசித்துப் பார்க்க வேண்டுமாய் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தன் பங்கைக் கேட்பவனை குலாம் என்றும், அடிமை என்றும், அதிகாரவர்க்கத்தினர் கூலி என்றும், எச்சில் பொருக்கிகள் என்றும் சொல்லத் துணிவதின் கருத்தெல்லாம் பேனாவும், காகிதமும் தன்வசம் இருக்கின்றன என்கின்ற தலைகொழுப்பில்லாமல் மற்றபடி அறிவும் நாணயமும் இருந்து செய்த காரியம் என்று சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

அன்றியும் வட்ட மேஜை மகாநாட்டு முஸ்லிம் பிரதிநிதிகளை துரோகிகள் என்றும், வஞ்சகர்கள் என்றும், முஸ்லீம்களின் தொல்லை, என்றும் முஸ்லீம்களின் முட்டுக்கட்டை யென்றும், முஸ்லீம்களின் வஞ்சகம்என்றும், முஸ்லீம்களின் சூட்சி என்றும், தலையங்கம் கொடுத்து எழுதுவதே "தேசியப் பத்திரிகை" களுக்கு ஒரு யோக்கியதையாக விளங்குகின்றது. இது "தட்டிப் பேச ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்று சொல்வதுபோல் நடக்கும் காரியமேயல்லாமல் வேறு என்ன என்று சொல்ல முடியும்.

தாழ்த்தப் பட்ட மக்கள் கையிலும், முஸ்லீம்கள் கையிலும் சரியான பத்திரிகைகள் இருந்து அச்சமூகத்தாருக்கும் தங்கள் உரிமைக்குப் பாடுபடுவதில் இன்னும் சரியான அக்கரை இருந்து, அப்பத்திரிக்கைகளை ஆதரித்து பிரபலப்படுத்தி இருந்தால் இந்த சமூகங்களின் தலையில் தேசியத்தின் பேரால் சுலபத்தில் கல்லைப் போட்டுவிட முடியுமா என்று கேட்கின்றோம். மௌலானா ஷௌகத் அலியைப் பற்றி சில பத்திரிகைகள் வெகு இழிவாய் எழுதத்தொடங்கிவிட்டன. மௌலானா ஷௌகத் அலியின் நாணயத்தை விட எந்த விதத்தில் திருவாளர்கள் காந்தியும், மாளவியாவும், ரங்கசாமி அய்யங்காரும், ராஜகோபாலாச்சாரியாரும் சத்தியமூர்த்தியும் உயர்ந்தவர்கள் என்று கேட்கின்றோம். மௌலானா ஷௌக்கத்தலி அவர்கள் மகமதிய சமூகமாகிய 8 கோடி மக்களுக்கும் சமமான ஆதிக்கம் வேண்டுமென உழைக்கிறார் என்றே வைத்துக் கொள்ளுவோம்.

ஆனால், மேல்கண்ட திரு. காந்திமுதலியவர்களின் உழைப்பு எத்தனை கோடி மக்களின் ஆதிக்கத்திற்கு என்பதை யோசித்துப் பாருங்கள் இந்தியஜனத்தொகையில் 100க்கு மூன்று பேராய் உள்ள பார்ப்பன வகுப்புக்குமாத்திரமல்லாமல், வேறு வகுப்புக்கு ஆதிக்கமில்லாவிட்டாலும் சமத்துவமாவது கிடைக்கும்படிஉழைக்கின்றார்களா? என்று கேட்கின்றோம். இமாதிரி சுயவகுப்புப் புலிகளானஆசாமிகளைத்தேச பக்தர்கள் என்றும் உண்மையான முஸ்லீம் பிரதிநிதிகளை வகுப்புவாதிகள் சூட்சிக் காரர்கள், குலாம்கள் என்றெல்லாம் சொல்லுவதென்றால் இது எவ்வளவு மோசடியான தந்திரமென்பது யோசித்துப்பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

நிற்க, ஒரு சமூகத்தாரிடமோ ஒரு மதக்காரரிடமோ மற்றொரு சமூகத்தார் உண்மையில் பயப்பட்டு பந்தோபஸ்து விரும்பினால் அவர்களுக்கு சமாதானம் சொல்லி அவர்கள் பயம் தீரும்படியான மார்க்கம் செய்வதை விட்டு விட்டு இந்தப்படி யெல்லாம் கேவலப் படுத்திஅவர்களது விருப்பங்களை அலட்சியப் படுத்தி அடக்கி ஆள நினைப்பது ஒரு நாளும் முடியாது என்பதற்காகவும், விஷமப்பிரசாரம் செய்து இழிவுபடுத்தப்பார்ப்பது இனி செல்லாது என்பதற்காகவுமே இதை எழுதுகின்றோம். அன்னியன் கையில் ஆதிக்கமும் பாதுகாப்பும் இருக்கும்போதே இவ்வளவு அக்கிரமங்களும், கொடுமைகளும், வஞ்சகங்களும் மனந்துணிந்து வேண்டுமென்றே செய்கின்ற மக்கள் இனி தங்கள் கைக்கு ஆதிக்கம் வந்தால் என்ன செய்யமாட்டார்கள் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டியது நடுநிலைமையாளர் கடமையாகும்.

காங்கிரஸ் புரட்டுக்குத் தோல்வி.

சென்னை நகரசபைக்கு, செனட்டிலிருந்து ஒரு பிரதிநிதியைத் தெரிந்தெடுப்பதற்குத் தேர்தல் நடைபெற்றது. அதற்குத் திரு புர்ரா சத்தியநாராயணாவும், இங்கிலாந்திற்கு வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதியாகச் சென்றிருக்கும், திவான்பகதூர் ஏ. ராமசாமி முதலியாரும் போட்டியிட்டனர். இவர்களில் திரு. ராமசாமி முதலியாருக்கு 109 ஓட்டுகளும், திரு சத்தியநாராயணாவுக்கு 46 ஓட்டுகளும் கிடைத்தன. திரு ராமசாமி முதலியாரே செனட்டின்பிரதிநிதியாக நகரசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தியாவுக்கு, தானேபிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும், காங்கிரசைச்சேர்ந்த திரு சத்தியநாராணாவுக்குச் செனட்டு அங்கத்தினர்களின் ஆதரவில்லாமையைக் கொண்டு படித்தவர்களிடத்தில் காங்கிரசுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம். "காங்கிரசுக்குவிரோதமான ஜஸ்டிஸ்கட்சி"யைச்சேர்ந்த திரு ராமசாமி முதலியார் அவர்கள் ஊரில் இல்லாதிருந்தும் வெற்றிபெற்றதைப் பாராட்டுகின்றோம்.

சென்னையில் சுயமரியாதை

சென்னை நகரத்தில், பல இடங்களில் அநேகமாக நாள் தவறாமல்சுமார் ஒருமாதமாகப்பொதுக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுயமரியாதை இயக்கத் தோழர்கள். திரு. பொன்னம்பலனார், குருசாமி, பண்டிதர் திருஞானசம்பந்தர், எஸ். ராமநாதன், டி. வி. சுப்பிரமணியம் முதலியவர்கள் சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, காங்கிரஸ் புரட்டு, முதலியவைகளை எடுத்துக்காட்டி சமதர்மப் பிரசங்கங்கள் செய்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான பொதுஜனங்கள் உற்சாகத்துடன் கூட்டங்களுக்குப் போய் உண்மையுணர்கின்றனர். இவ்வாறு நடைபெறும் பொதுக்கூட்டங்களைப்பற்றிய நிகழ்ச்சிகளைத் தேசிய பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. இதற்கு மாறாகக் கூட்டங்களில் கலகஞ் செய்வதற்காக காலிகளைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கின்றன. தேசியப் புரட்டு வெளியாகி அதனால் பொதுஜனங்கள் விழிப்படையும்போது தேசியப் பத்திரிகைகளும், தேசியவாதிகளும் வேறு இதைத்தவிர என்னதான் செய்யக்கூடும்?

ஈ. வெ. இராமசாமி அவர்களின் உடல் நிலை.

திரு. ஈ. வெ. இராமசாமியவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டதின் பயனால் உடல் நிலை இப்பொழுது கொஞ்சம் சௌக்கியமடைந்து வருகிறது. முன்போல் இல்லாமல் இப்பொழுது சிறிது தூங்குகின்றார்; ஆயினும் மயக்கம் மாத்திரம் இன்னும் இருக்கிறது. இன்னும் 2, 3 மாதங்களுக்குஇவ்வாறே ஓய்வு எடுத்துக்கொண்டு குளிர்ச்சியான இடத்தில் வசித்துவந்தால் முற்றிலும் உடல்நலம் பெற்று முன்போலவே வேலை செய்யும் சக்தியை அடையலாம் என்று டாக்டர் சொல்லுகிறார்.

வருந்துகிறோம்.

ஈரோடு பிரபலஸ்தரும், நமது இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் சார்பாக நடைபெற்ற பெண்கள் மகாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைவி திரு. லெட்சுமி அம்மாளின்கணவருமாகிய திரு. வெங்கட்டராமலு நாயுடு அவர்கள் 18-10-31ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலஞ்சென்றார் என்ற செய்தி அறிந்து வருந்துவதுடன் நமது அனுதாபத்தை திருமதி இலட்சுமி அம்மாளுக்கும் அவரது குமாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வருந்துகிறோம்.

நமது நண்பரும், பிரபலஸ்தருமான சம்புளியம்பட்டி ராவ்சாகிப் கே. எம். சின்ன ரெங்கைய கவுண்டர் அவர்களின் மனைவியார் திருமதி பழனியம்மாள் அவர்கள் 2-11-31ல் காலஞ்சென்றாரென்ற செய்தி அறிந்து வருந்துகிறோம். நமது வருத்தத்தை ராவ்சாகிப் சின்ன ரெங்கையக் கவுண்டர் அவர்களுக்கும், அவரது குடும்பத்திற்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சென்னையில் சுயமரியாதை மகாநாடு.

8-11-31-ல் வரவேற்புக் கழக அமைப்பின் பூர்வாங்கக் கூட்டம் தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்கள் தலைமையில் ஜார்ஜ்டவுன் மலையப்பெருமாள் தெரு நெம்பர் 3 மாளிகை மாடியில் மாலை 5 மணிக்கு நடைபெறும். மாயவரம் சி. நடராஜன், கே. ராமையா, டி. சின்னையா இவர்களும், சேலமிருந்து எஸ், வி. லிங்கம், கே. கிருஷ்ணசாமி; சித்தையன் இவர்களும், ஜோலார்பேட்டை பார்த்தசாரதி முதலியவர்கள் 8-ந் தேதி காலை சென்னை வந்து சேர்வார்கள்.

போதுக் காரியதரிசி.

விருதுநகர் முனிஸிபாலிட்டி

சுயமரியாதைக்காரர்களுக்கு வெற்றி.

விருதுநகர் முனிஸிபாலிட்டி பொதுத்தொகுதிஸ்தானங்கள் இருபதுக்கும் ஒதுக்கப்பட்ட ஸ்தானம் நாலுக்கும் நாமினேஷன்கள் 29-10-31 ல்வாங்கப்பட்டன. இருபத்துநான்கு ஸ்தானங்களுக்கும், மொத்தம் அறுபத்திஐந்துபேர்கள்போட்டிபோட்டனர். ஆனால்30பேர்கள் வாபீஸ் வாங்கிக் கொண்டனர்.

இறுதியாக கீழ்க்கண்ட 12 அங்கத்தினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்:— திருவாளர்கள் பெ. சி. சிதம்பர நாடார்; வே. வ. இராமசாமி நாடார்; கூ. மு. அ. சி. வெயிலுமுத்துசாமிநாடார்; மு ச. பெ. செ. பெரியசாமிநாடார்; பி. வி எஸ். கே. பழனியப்பநாடார்; பா.பெ.வை. திருவண்ணாமலை; டாக்டர். நாச்சியப்பராமசாமி எல்.எம்.பி, மொ. மாணிக்கம் (ஆதித்திராவிடர் தொகுதி), திருமதி வின்சண்ட் (பெண்கள் தொகுதி), கொ. சி. சங்கரலிங்கநாடார், வெ. ஆ. வ. பழனியப்பநாடார், ச. அழகர்சாமிநாயக்கர், இவர்களில் முதல் மூவர்கள் சென்ற மூன்றுவது சுயமரியாதை மகாநாட்டில் முறையே பொக்கிஷதாரராகவும், பொதுக்காரியதரிசிகளாகவும் இருந்து தொண்டாற்றினவர்கள். ஏனையோர்களில் கடைசியில் குறிப்பிட்டவர்தவிர மற்றவர்கள் எல்லோரும் சுயமரியாதைமகாநாட்டில் உபசரணைக்கமிட்டி அங்கத்தினர்களாகவும், பிற கமிட்டி மெம்பர்களாகவும் இருந்து வேலைபார்த்தார்கள். பொதுவாக இந்தத்தேர்தலில் எல்லா ஸ்தானங்களுக்கும் சுயமரியாதைக்காரர்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பாக்கி 12 ஸ்தானங்களுக்கும் 24 பேர்கள் போட்டி போடுகிறார்கள். அவர்களுக்கும் நவம்பர் 11 தேதி எலக்ஷன் நடைபெறும். அவர்களிலும் அநேகமாக எல்லோர்களும் சுயமரியாதைக்காரர்களே தெரிந்தெடுக்கப்படுவார்களென ஒருநிருபர் எழுதுகிறார்.

அகில இந்திய தாழ்த்தப் பட்டவர் மகாநாடு.

திரு. எம். ஸி. ராஜாவின் தலைமைப் பிரசங்கம்.

'நமது கஷ்டங்களை திரு. காந்தி உணரவில்லை'

பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த குர்கயானில் அக்டோபர் 31 ந்தேதி கூடிய அகில இந்திய தாழ்த்தப் பட்டவர்கள் மகாநாட்டில் தலைமை வகித்து ராவ்பகதூர் எம். சி. ராஜா எம் எல். ஏ. அவர்கள் நிகழ்த்திய உரையின் சாரம் வருமாறு:—

வட்ட மேஜை மகாநாடு.

இன்றைய தினம் மிக முக்கியமான விஷயமாக விருப்பது வட்ட மேஜை மகாநாடு தான். அது வெற்றி காமாக முடிய வேண்டுமென்று நாம் விரும்புகிறோம், மகாநாட்டுக்குள்ள 80 பிரதிநிதிகளில் 2 ஸ்தானங்கள் தான் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்துக்களின் ஜனத் தொகை மொத்தம் 16 கோடியே 30 லட்சமாகும்; அதில் 5 கோடிப் பேர் தாழ்த்தப் பட்டவர்கள். என்ன விதாச்சாரப்படி 2 பேர் நியமிக்கப் பட்டார்களென்று தெரியவில்லை. கவர்ன்மெண்டார் தங்களுடைய கொள்கையை மாற்றிக் கொண்டால் தான் நமக்கு நம்பிக்கையுண்டாகும். நமது பிரதிநிதித்துவ விஷயத்தில் கவர்ன்மெண்டார் உடனே கவனஞ் செலுத்துவார்கள் என நம்புகிறேன். அரசியல் அதிகாரத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால் அது நம்மைக் கொடுமைப் படுத்துகிறவர்கட்கு அதிக சக்தியைக் கொடுக்கத் தக்கதாக இருக்கக் கூடாது.

போலி அநுதாபம்.

உயர்ந்த வகுப்பினர் வாயளவில் நம்மீது அனுதாபங் காட்டுவார்கள், தீண்டாதார்களெல்லாம் நமது சகோதரர்களல்லவா வென்று பேசுவார்கள், ஆனால் நம்மை மிருகங்களை விடக்கேவலமாக நடத்துகிறார்கள். கிணறு, ரஸ்தா, பள்ளிக்கூடம், சத்திரம், கோவில் முதலியவைகளில் நமக்கு இன்னும் சமத்துவம் கிடைக்க வில்லை. வேதங்களை வாசிக்கவும் இடமில்லை. ஆயினும் நம்மை இந்துக்கள் என்கிறார்கள். தீண்டாதவர்கட்காகவே காங்கிரஸ் உழைத்து வாகிறதென்றும், லண்டனில் திரு. காந்தி சொன்னது உண்மையானால் கதர் விஷயத்தில் காட்டியுள்ள சிரத்தையில் 100க்கு 1 விதமாவது தீண்டாமை விலக்கு விஷயத்தில் திரு. காந்தியாவது அவரது சீடர்களாவது காட்டியிருக்கின்றார்களா? கதருக்காக எண்ணற்ற ஊழியர்களிருப்பது போல் தீண்டாமை விலக்குக்காக இல்லவே இல்லை. வெளியாரை மயக்குவதற்காக வேலை நடந்ததேயன்றி சமூக, ஆசாரச் சீர்திருத்தத்தில் உண்மையாக வேலை செய்யக் காணோம். வகுப்புக்கர்வம், ஜாதியாசாரம், மதசம்பிரதாயம் முதலிய கொடுமைகட்கு இது வரை ஆட்பட்டிருந்தது போதும். அரசியல் சட்ட மூலமாக மற்றொரு கொடுமை வேண்டாம். நமது சமூகக் குறைகளையொழிக்க திரு. காந்தி ஏன் உழைக்கக் கூடாது? டண்டிக்குப் போனதுபோல் ஆலயங்களில் அவர் ஏன் சத்தியாக்கிரகம் நடத்தக்கூடாது? சுயராஜ்யம் வந்த பின் நமது வேற்றுமைகளைச்சரிப்படுத்திக் கொள்வோம் என்பது மாம்பழ வியாபாரியின் பேச்சாகும். வியாபாரிக்குக் கொடுத்த பணம் ஒரு காலும் திரும்பாது. சுயராஜ்யம் கிடைத்து விட்டால் அது பின்னால் வாபீஸ் வாங்கிக் கொள்ளப் படமாட்டாது. ஏழை மக்கள் பின்னால் உதட்டைக் கடிக்காமல் முன்னதாகவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அகில இந்திய பிரச்னை

முஸ்லிம்கள் சீக்கியர்களுடைய குறைகளை விடத் தாழ்த்தப் பட்டவர்களுடைய குறைகள் மிக உண்மையானவை. இந்து முஸ்லிம் பிரச்சினை பஞ்சாப், வங்காள மாகாணங்களையே பொறுத்திருக்கிறது. ஆனால் தாழ்த்தப் பட்டவர்களது பிரச்னை இந்தியா முழுவதும் இருந்து வருகிறது. எந்தச் சமூகத்துக்காவது பாதுகாப்பு தேவைப் பட்டால் அது நம்முடைய சமூகந்தான். நமது கஷ்டத்தை திரு. காந்தி உணரவில்லை. நமக்குத் தற்காலிகமாகவாவது தனித்தொகுதி அவசியம். நமது கஷ்டம் நம்மவர்க்குத் தான் தெரியும். மாகாண மந்திரி சபைகளிலும், வைஸ்ராயின் நிர்வாக சபையிலும் நமக்குப் பிரதிநிதித்துவம் அவசியம். நமக்கு சமப்பிரஜா உரிமைகளும் சட்ட பூர்வமாகப் பாது காக்கப் பட வேண்டும்.

நிறைவேறிய தீர்மானங்கள்

அகில இந்திய [illegible]

டவர் மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:— சக்ரவர்த்திக்கு விசுவாசத்தை இம்மகாநாடு தெரிவித்துக்கொள்கிறது. வட்ட மேஜை மகாநாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்பந்தமாக டாக்டர் அம்பேத்கார் தெரிவித்த கோரிக்கைகளை இம்மகாநாட்டார் ஆதரிக்கின்றனர். தாழ்த்தப் பட்டவகுப்பினருக்கு தனித்தொகுதி அளிக்கப்படாத எந்த அரசியல் திட்டத்தையும் இம்மகாநாடு ஒப்புக்கொள்ளாது. ஜாதி ஹிந்துக்கள் மீது தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு நம்பிக்கை ஏற்படில் ஒதுக்கப் பட்ட ஸ்தானங்களுடன் கூட்டுத் தொகுதி முறையை ஒப்புக்கொள்வதைப் பற்றி மகாநாட்டார் ஆலோசனை செய்யப் பின் வாங்க மாட்டார்கள்.

—

காந்தி மீதும், காங்கிரஸ் மீதும் நம்பிக்கையில்லை.

—

தூத்துக்குடி.

அக்டோபர் 17உ செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணிக்கு தூத்துக்குடி விக்டோரியா எக்ஸ்டன்ஷன் ரோட் திரு. ஜி. எ. எஸ். ஷண்முக நாடார் அவர்கள் ஹாலில் ஆதிதிராவிட யூனியன் தலைவர் திரு டி. எஸ். ரோக்கப் அவர்களின் அவைத்தலைமையில் ஆதிதிராவிடர் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தலைவர் முகவுரையில் காங்கிரசையும், திரு. காந்தியையும் வன்மையாகக் கண்டித்துப் பேசியமர்ந்த பின் அவர்களைப் பின்பற்றியே திரு. எம். பலவேசம், காரியதரிசி திரு டி. எம். லாசர்ஸ், திரு. மலையாசு, திரு. எ. ஆர். ஆரோக்கியசாமி இவர்கள் பேசினார்கள்.

தீர்மானங்கள்.

1. தூத்துக்குடி ஆதிதிராவிடர்களுக்கு, திரு. காந்தி பேரிலும், காங்கிரஸ் பேரிலும் நம்பிக்கையில்லை

2. டாக்டர் அம்பெத்கார், ராவ் பகதூர் ஆர். சீனிவாசம் எங்கள் ஆதிதிராவிடர்களின் பிரதிநிதிகளென்று தூத்துக்குடி ஆதிதிராவிட யூனியன் ஆதிதிராவிடர்கள் யாபேர்களும் ஆதரிக்கிறோம்.

அவர்கள் கேட்கின்றபடி விசேஷ தனிப்பிரதிநிதித்துவம், பாதுகாவல் வேண்டுமென்பதை முழு மனதுடன் ஆதரிக்கின்றோம்.

3. காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரே எங்கள் சுதந்தரங்களை வட்டமேஜை மகாநாட்டில் பாதுகாக்க வேண்டும், சர். தேஜ் பகதூர்சாப்ரு, டாக்டர் மூஞ்சே, சர். ஏ. பாத்ரோ, திவான்பகதூர் எ. டி பன்னீர்செல்வம், சர். ஹென்ரி கிட்டினி, திவான்பகதூர் எ. ராமசாமி முதலியார், முதலியோருக்கு இக்கூட்டத்திலுள்ள ஆதிதிராவிடர்கள் மனப்பூர்வமாக வந்தனமளிக்கிறார்கள்.

4. டில்லியிலும், கான்பூரிலும் தனிப்பிரதிநிதித்துவம் தேவையில்லையென அனுப்பிய தந்தியையும், தீர்மானத்தையும் வெகு அழுத்தமாகக் கண்டிக்கிறோம்.

—

அயிலூர்

—

31-10-31 மாலை 5 மணிக்கு முசிரி தாலூகா, அயிலூர் ஆதிதிராவிட வாலிபர் சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் திரு. ஆர். ராஜகோபாலன் அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது பல அன்பர்கள் ஆதிதிராவிடர்கள் முன்னேற்றத்தைப் பற்றி உருக்கமாகப் பேசினார்கள். பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

தீர்மானங்கள்:—

1. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திரு. காந்தியின் மீதும், காங்கிரஸ் மீதும் நம்பிக்கையில்லை என்பதை இக்கூட்டம் அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. டாக்டர் அம்பெட்கார் எங்கள் உண்மையான பிரதிநிதி. அவர் மீது எங்கட்கு பூரண நம்பிக்கை உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

3. மந்திரிசபை, சட்டசபை, இதர ஸ்தாபனங்கள்யாவற்றிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும், தனித்தேர்தல் முறையும் சட்டத்தின் மூலமாய் ஏற்படுத்திக்கொடுக்க இக்கூட்டம் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

—

திருவாரூர்.

இந்நகருக்கு ஒரு மைல் தூரத்திலிருக்கும் கேக்கரை ரஸ்தாவில் சென்ற 30-10-31ந் தேதி ஒரு ஆதிதிராவிடர்கள் பொதுக்கூட்டம் காலை 7-மணிக்கு நடைபெற்றது. அக்கூட்டத்திற்குதோழர் மதுரம் தலைமை வகித்தார். தோழர்களான பரஞ்சோதி, வி. ஜி. ஆர். ராஜு, ஜெயராமன், என். லெக்ஷ்பா முதலியவர்கள். "ஆதிதிராவிடர்கள் முன்னேற்றம்" "வரப்போகும் நகரசபைத் தேர்தல்" முதலியவைகளைப்பற்றிப் பேசினார்கள். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

தீர்மானங்கள்.

1. நமது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடைவிடா துழைக்கும் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது.

2. நமது முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான கல்வியைப் போதிக்க நமது பள்ளிக்கூடத்திற்கு கூடியவரையில் உதவி செய்துவரும் சேர்மென் பா. வா. சி. கோபாலசாமி முதலியாரவர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது.

3. நமது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழைக்கும் டாக்டர் அம்பேட்கார், ராவ்பகதூர் சீனிவாசன் இவர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது.

4. தாழ்த்தப்பட்ட மக்களாகிய நமக்கு தனி உரிமை கொடேன் எனச் சொல்லும் தோழர் காந்தியையும் காங்கிரசையும் வன்மையாய்க்கண்டிப்பதுடன் அவைகள் மீது நம்பிக்கையில்லை என்றும் தீர்மானிக்கிறது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

—

சுயமரியாதைத் திருமணம்.

கும்பகோணம் திரு மு. வெள்ளைச்சாமி நாடார் குமாரர் திரு. கணபதி அவர்களுக்கும் திரு க. கு. குமாரசாமி நாடார் குமாரத்தி திருமதி வள்ளியம்மைக்கும் மதுரை கீழமாசி வீதி மணமகள் இல்லத்தில் பட்டிவீரன் பட்டி உயர் திரு W. P. A. சௌந்திரபாண்டியன் அவர்களால் 13-11-31 தேதி நடத்திவைக்கப்படும்.

கோயமுத்தூர் ஜில்லா வேடர் குல இரண்டாவது மகாநாடு.

1931-ம் வருஷம் நவம்பர்-மீ 15-தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-மணிக்கு கோவை ஜில்லா வேடர் குல இரண்டாவது மகாநாடு பவானி தாலூகா கவுந்தப்பாடி கஸ்பா லோகல் பண்டு சத்திரத்திற் கருகாமையில் அமைந்திருக்கும் கொட்டகையில் அப்பிச்சிமார்மடம் மடாதிபதியும், இங்களூர் பட்டக்காரரும் ஆகிய உயர் திருவாளர் எம். எ. ஆண்டமுத்துக் கவுண்டர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும் அது சமயம் பல பெரியோர்கள் உபந்யாசம் செய்வார்களென காரியதரிசி எழுதுகிறார்.

—

அனுதாபம்.

மரணம்:—இவ்வூர் பிரபலஸ்தரும் ஈரோடு சுயமரியாதை மகாநாட்டின் சார்பாக நடைபெற்ற பெண்கள் மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவி திருமதி இலட்சுமி அம்மாள் அவர்களின் கணவரும், வி. வேணுகோபால் பி. எ. பி. எல். வக்கீல் அவர்களின் தந்தையருமான திரு. S. வெங்கட்டராமுலு நாயுடு அவர்கள் தமது ஐந்து குமாரர்களையும் தமது மனைவியாரையும் விடுத்து 18-10-31 தேதி காலஞ்சென்றார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

—

அனுதாபம்.

கம்புளியம்பட்டி ராவ் சாகிப் கே. எம். சின்னரெங்கையக் கவுண்டர் மனைவியார் திருமதி பழனியம்மாள் 2-11-31 தேதி மரணமடைந்தாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

—

...ந்தனால்! மத ... யன்றோ? மக்கள் முற்போக்கிற்கு, இந்திய நாட்டின் விடுதலைக்கு, மதங்கள் ஒழிந்தேயாக வேண்டும், ஜாதி துவேஷம் அழிந்தே தீரவேண்டும். இதில் சந்தேகம்சற்றுமில்லை. நமக்குசுதந்திரம் கிடைக்கும் வழியை சுட்டிக்காட்டிய கவி ரவீந்திரர் அவர்களின் செய்தி தேசீய வாதிகளின் செவியிலேறுமா? ஏறாவிட்டாலும் உண்மை கண்ட கவி ரவீந்திரருக்கு நமது பாராட்டு உரியதாகுக.

—

பண்டிகைகள் ஒழிந்தால் பகுத்தறிவு வளரும்.

—

சண்டமாருதம்.

வட்டமேஜை மகாநாட்டின் தந்திகளின்
உண்மை தெரியவேண்டுமானால் சண்டமாருதத்தை
வாங்கிப் பாருங்கள்.
தேசீயப்பத்திரிகைகள் பல பாரபக்ஷமாகவே
மொழிபெயர்க்கின்றன.
சண்டமாருதம் ரயில்வேஸ்டேஷன்களிலுள்ள எக்கின்பாதம்
புத்தகக்கடைகளில் கிடைக்கும்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அன்னையும் யானும்
 இருந்தோமா, இல்லிரே!
உண்ணு நீர் வேட்டேன்
 எனவந்தார்க்கு அன்னை
அடர்பொற் சிரகத்தால்
 வாக்கிச் சுடரிழாய்
உண்ணு நீர் ஊட்டிவா
 வென்றாள், எனயானும்
தன்னையறியாது சென்றேன்
 மற்றென்னை
வளை முன்கைபற்றி நலியத்,
 தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன்
 செய்ததுகாண் என்றேனா,
அன்னையலறிப் படர்தரத்
 தன்னையான்
உண்ணு நீர் விக்கினான்
 என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பு அழித்து
 நீவ மற்றென்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்
 போல்நோக்கி நகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் 'மகன்'

என்ற கலித்தொகை என்னும் அரிய பழந்தமிழ் நூலிலுள்ள செய்யுளைக் கூறி கையை நீட்டி நீட்டிப்பிரசங்கிப் பதையும் இன்னும் 'இறையனார் அகப்பொருள்' போன்ற நூலின் செய்யுளை இசையுடன் தலையை அசைத்து அசைத்துப் பாடுவதையும் விடுத்து மகளிரின் உரிமையில் பிரதானமாய் விளங்கும் காதல் மணம் பெருக தக்கனபுரிதல் வேண்டும். இன்றேல் அவ்வழியில் தொண்டாற்றும் சுயமரியாதைத் தொண்டர்களுடன் சேர்ந்து பணிபுரிதல் வேண்டும் அஃதின்றேல் தம் சமயத்தில் சாதியில் காதல் மணம் புரியும் சுயமரியாதைத் தொண்டர்களுக்கு இடையூறு புரியாமலும் இழித்துரையாமலும் இருத்தல் வேண்டும். இஃதல்லாமல் இன்னும் உள்ளொன்று வைத்துக்கொண்டு புறமொன்று பேசி காதல் மணத்தை ...வருடன் கல்விக்கொண்டிருந்தால் முன்னோர்களும் அவர் தம் சமயம், கடவுள், வேதம், புராணம் முதலியன ... [illegible]

என்று பாரதியார் பாடிய செய்யுளை சைவர்கள் மாத்திரமல்ல தங்களைக் கார்தீயம் என்னும் ஜீவகாருண்ய மதத்தார் (அஹிம்சா வீரர்) என்று கூறும் தேசிய வீரர்களும் காதலைக் கண்டிக்கும் வைதீக பித்தம் பிடித்த திங்கள் வெளியீடுகளின் ஆசிரியர்களும் ஆராய்ந்து பார்க்கட்டும்.

விவாஹரத்து:—ஒரு பெண் தன் கணவனன்றி வேறு ஆண்மகனுடன் சோரம் போனாலும், அவள் பிள்ளை பெறாத மலடியாய்ப் போய்விட்டாலும், குஷ்டம் போன்ற கொடிய நோய் வாய்ப்பட்டாலும், அதிகமாய் பிள்ளைகள் பெற்று மெலிவுற்று அழகு குறைந்து ஆண்மகனின் இச்சையைப் பூர்த்திசெய்யத்தக்க சக்தியற்றிருந்தாலும், அல்லது தாம் விரும்பியவாறே அழகு, படிப்பு, நகை முதலியன குறைவாக இருந்தாலும் அல்லது தமது கட்டளை தவறாக இருந்தாலும், மனைவி கீழ்ப்படிந்து நடக்காவிட்டால் அவளை விவாஹரத்து செய்துவிட்டு வேறொரு பெண்ணை மணந்து கொள்ளவும் முதல் மனைவியிருக்கும்போதே ஒன்றல்ல-இரண்டல்ல-தசரதன் போன்று அறுபதினாயிரம் பெண்களை மணந்துகொள்ளவும் அதுவும் போதாவிடில் லட்சக்கணக்கான பெண்களை வைப்பாட்டியாக வைத்துக்கொள்ளவும் நமது ஜீவகாருண்ய மதங்கள் அனுமதி கொடுக்கின்றன. ஆனால் ஒரு அழகிய நற்குணவதியான பெண்மகளுக்கு வாய்த்த கணவன் எத்தனை குரூபியாயிருப்பினும், பல்விழுந்த கிழவனாயினும், தொழுநோய் பற்றிய தோலனாயினும், ஆண்தன்மையிழந்த அலியாயினும், குணங்கெட்ட குடிகாரனேயாயினும், விபசாரமே தனது தொழிலாய்க்கொண்டலையும் வீணனேயாயினும், தம்மனைவியைக் கூட்டிக்கொடுத்துப் பொருள் சம்பாதிக்கும் தகைமையனாயினும் இன்னுமெத்தனை தகாத செயலை உடையவனேயாயினும் அவனைவிட்டு விவாஹரத்துச் செய்து சுகமே தமக்கியைந்த நல்ல துணைவனுடன் வாழ நமது ஜீவகாருண்ய மதம் இன்றைநாள் வரை இடங்கொடுக்க வில்லை. கணவன் ...த்தகைய துன்பத்துக்குட்படுத்தி...ம் அவனுடன் மனைவியிருந்து வாழ்...து தொலைக்கவேண்டியதாகவே யிருக்கிறது. "தெய்வம் தொழா அள் ...ழுநற் றொழுதெழுவாள், பெய் ...னப் பெய்யுமழை" என்று கூறும் ...மது மதம், "கற்பெனப்படுவதே ...சாற்றிறம்பாமை" என்று சொல்லும் நம் சமயம், தம் மனைவியை ஒரு ...வ பக்தர் விரும்பிக்கேட்க உடனே ...ம் இல்லாளை அச்சிவ பக்தனிடம் ...ட்டிவிட்டு அப்பக்தனுக்குத் தம் ...ற்றத்தாரால் இன்னல் விளையாது ...த்து வந்த கொடுஞ்செயலைப் போற்றி அஃதே புண்ணியமான செயல்; மோக்ஷத்தை அளிக்கவல்ல அருஞ்செயல்; அவரே எம் சமயத்தை ...ய்விக்கவந்த நாயன்மார் என்று ...றும் சமயம் எவ்வாறு மகளிர் உரிமைக்காக முன்வந்து ஆண் மக்களைப் போன்று பெண்மக்களுக்கும் விவாஹரத்துச் செய்துகொள்ளவோ அல்லது ஆடவனைப் போன்று ஒரு கணவனிருக்க மற்றொருவனை விவாகஞ்செய்ய அனுமதி நல்கும் துரோபதை ஐந்து கணவரை மணந்ததைப் போற்றி அவளைக் கற்புடையாள் என்று போற்றும் ஒரு மதம் தற்காலப்பெண்களுக்கு மாத்திரம் வேறு சட்டம் செய்வானேன்? என்பதை நமது மக்கள் யோசிப்பதில்லை.

ஆண்தான் விரும்பியவாறெல்லாம் சட்டம் அமைத்துக்கொண்டு அநீதியான வழிகளிலெல்லாம் திரிந்து கொண்டு பெண் நியாயமான உரிமைகளையும் அனுபவிக்கவிடாது தடுக்கும் சட்டங்கள் அமைக்கப்பட்ட இந்துசமயங்களை ஓர் அறிஞர் 'பெண்கொலை மதம்'' என்று கூறியது மிகப்பொருத்தமானதே. கணவர்களால் அநீதியான முறையில் அடித்து விரட்டப்பட்ட பெண்களிற் பலர் வேறு புருடர்களை மணந்து சுகமாய் வாழ வழியின்றி விபசாரஞ் செய்து தம் பசிப்பிணியைப்போக்கி வருகின்றது நண்பர்கள் பலருமறிந்தே இருப்பீர்கள். புருடர்கள் விலக்கப்பட்டோ அல்லது புருடனை விலக்கிய பெண்களையோ வேறு புருடனை மணந்து கொள்வது கூடாது; சட்டப்படி அவ்வாறு வேறு விவாகஞ் செய்து அவர்களைத்தண்டிக்க அதிகாரமுள்ள நமது மதம் விபசாரஞ்செய்துகொள்ள சட்டப்படி அனுமதிக்கிறது. இதைவிட அம்மதத்திற்கு வேறு என்ன கேவலம் வேண்டும். இவ்வாறு ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் வழங்கும் ஒரு மதத்தை எங்ஙனம் ஜீவகாருண்யமதம் என்று கூறுவது? என்றுதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே சட்டத்தை உண்டுபண்ண வேண்டியது என்று நம் மக்களின் மனப்பான்மை மாறுமோ அன்றுதான் நமது நாட்டின் அதிர்ஷ்ட நாளாகும். இத்தகைய மனப்பான்மையையுடையோர் பலர் பெருக இன்னும் பன்னாள் செல்லவேண்டும் என்றே கருதவேண்டியதிருக்கிறது. பெண்மணி தெய்வம். பெண்ணைப்போற்றுக. பெண்ணை வணங்குக என்று கூறிய சைவத்தோழர் திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் அவர்களும் கூட தம் பெண்ணின் பெருமை என்னும் நூலில் "பெண்மகளின் கவலையீனத்தாலோ வேறு எக்காரணத்தாலோ பொருந்தா நாயகன் வாய்க்கப்பெறுவனேல் என்செய்வது? பெண்மகள் அவனுடன் வாழ்வதா அல்லது வாழாது அவனை விடுத்துப் பிரிவதா? பிரிதல் வேண்டுமென்று சொல்ல இந்தியாவில் பிறந்த எனக்கு நாவெழவில்லை. எங்ஙனமாவது முயன்று அப்பொருந்தாத்தன்மையைப் போக்கவே பெண்கள் முயலல்வேண்டும். பெண்மை என்பது தாய்மை என்றும் தாய்மை என்பது தொண்டு என்றும் மேலே சொல்லப்பட்டன. அத்தொண்டைப்பொருந்தா நாயகனை ஒழுங்கு படுத்துவதில் பெண்கள் நிகழ்த்தலாமன்றோ? தொண்டில் விருப்புடைய பெண்ணிற்கு அஃதொரு வாய்ப்புமாகும். தனக்கு வாய்ந்த நாயகனைப் பண்படுத்தப் புகுந்தொண்டினும் வேறு தொண்டு எற்றுக்கு? அத்தொண்டு வழியில் வாழ்வு செலுத்தும் பெண்மணி வாழ்க. அவள் பால் கடவுள் என்றும் நிலவுக'' என்று கூறியுள்ளார். என்னே இவரின் புலமைத்திறம்! பசப்பு வார்த்தையின் பகட்டு! ஜீவகாருண்ய மதம் என்று தற்பெருமை பேசும் சைவ சமயத்திலேயுள்ள தலைவர்களின் பெண் உரிமை விஷயத்தில் தாராள புத்தியையுடைய நமது தோழர் திரு. வி. க. அவர்களேயாகும். இவருடையநிலையே இத்தகையதானால் மற்றையோரைப்பற்றி வினவவும் வேண்டுமோ. பெண்ணிற்கு இஷ்டப்பட்ட கணவரைத் தெரிந்தெடுக்க உரிமையில்லை; கல்வியில்லை; ஆண்மகன் எடுத்ததற்கெல்லாம் மனைவியை அடிக்கவும் அவளை நீக்கவும், வேறு மணம் செய்யவும் உரிமை சட்டபூர்வமாய்ப்பெற்றுவருகிறான். சட்டதைரியத்தாலே ஆண்கள் அநீதமான முறையில் நடந்து பெண்களை இம்சித்து வருகிறார்கள். அத்தகைய ஆண்மகனை எவ்வித வழியிலும் கட்டுப்படுத்தமுடியாத இச்சீவகாருண்யசீலர் பொருந்தா நாயகனாயிருப்பினும் அவனுடன் கட்டியழுது தொலைப்பதே புண்ணியமென்று கூற முற்பட்டுவிட்டார். அதுவே ஒரு இந்தியனின் மனப்பான்மை என்று கள்ளங்கபடின்றி கூறியும் விட்டார். இவைகளை எல்லாம் ஆராய்ந்தே நமது பெண்மணிகளிற் சிலர் நாம் ஆண்மக்களின் துணையின்றி நாமாகவே நம் உரிமைக்காகப் போராடி நமது உரிமைக்கு எதிராக இருப்பவைகளனைத்தையும் ஒழித்துவிடவேண்டுமென்று கூறுகின்றனர் போலும். ஆண்மக்களிற் பெரும்பாலார் சுயநலமனப்பான்மையைவிட்டுவிட்டதாய்த் தெரியவில்லை. எனவே தோழர் இந்திராணிபாலசுப்பிரமணியம் தோழர்கள் குஞ்சிதம் பீ. ஏ. எல். டி., நீலாவதி, விசாலட்சி, மரகதவல்லி முதலியோர்கள் முன்வந்து ஆண் மக்களின் மனப்பான்மையையும், ஜீவகாருண்யமதமென்று பெண்களைக்கொலைபுரியும் மதங்களின் நிஷ்டூரங்களையும் இன்று பிரசங்கங்கள் மூலமாயும் "குடிஅரசு" போன்ற பத்திரிகைகள் மூலமாயும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கி வருகின்றார்கள். இப்பொழுது எச்சமயம் ஜீவகாருண்யமதம் எனச் சொல்ல முன்வருகிறது பார்ப்போம் என்று பெண்டிர் சேலஞ்ச் (பந்தயம்) பண்ணுகின்றார்கள். அவர்கள் முன் எச்சமயம் வந்து நிற்கும்.

(தொடரும்)

செவியிலேறுமா?

[திருமதி S. நீலாவதி]

சுமார் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சுயமரியாதை இயக்கம், நம் நாட்டில் நிரம்பியிருக்கும் பல கொடுமைகளை அழித்து அறிவு பெறுமாறு மக்களிடையே பலத்த பிரசாரம் செய்துவருகின்றது. இதைக்கண்டு அறிவிலிகளான சிலர் ஆவேசங்கொண்டு அடாது பேசித்திரிகின்றனர். இன்று நடக்கும் சுயராஜியப் போரில் சுயமரியாதை இயக்கம் சேரவில்லையென்பது, என்றும் ஏழேழு தலைமுறைக்கும் நீக்க முடியாப் பெருங்குறையாக சிலரால், எண்ணப்பட்டும், சொல்லப்பட்டும் வருகின்றது. நமது நாடு இருக்கும் நிலையில் நமக்கு சுயராஜியம் வந்து சண்டைக்காயப் பயிராக்கவா? என்பது சுயமரியாதை இயக்கத்தின் சொல்லு. "அந்நிய ஆட்சி கொடிது, அதிலும், அந்நியன் நமது நாட்டை ஆள நாம் பார்த்துக்கொண்டிருப்பது அவமானம் எனவே அந்நிய ஆட்சியினின்று, நமது நாட்டை மீட்டுவித்து அதன்பின் நம்மிடமுள்ள கொடுமைகளை ஒழித்து விடுவோம்" என்பது தேசிய வாதிகளின் வாக்கு! நமது நாட்டில் நிரம்பியிருக்கும் அநியாயமான அறிவிற்கும் பொருந்தாததான பல கொடுமைகளையும், அதனால் மக்கள் படும் அல்லல்களையும் எண்ணெழுதி முடிக்க என்றால் இயலாது. மூடநம்பிக்கையும், குருட்டு எண்ணங்களும் சேர்ந்து நமது மக்களின் முதுகெலும்பை முறித்தே விட்டது. எனவே "முறிந்து பலமிழந்து பாழாய்ப் போனவரையிலும் போதும், இனியேனும் பலம் பெற்று கடைத்தேறுங்கள்" என்று நாம் சொல்லுவது வைதீகர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும், அவர்களுக்கு அனுகூலமாக சுயராஜியம் கேட்கும் சூரர்களுக்கும், வயிறு பற்றியெரிகின்றது. சுயமரியாதைக்காரர்களின் கழுத்தைக்கடித்து இரத்தத்தைக்குடித்து விடலாமா வென்னும் தன்மையில் ஆத்திரம் பொங்குகின்றது. அதன் தலைவரைக்கொன்று பகத்சிங்காக அநேகர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அறிவிற் சிறந்த பெரியார்கள் யாவரும் சுயமரியாதைக்காரர்கள் சொல்வனவற்றையே, உலகோர்க்கெடுத்துரைத்து வருகின்றனர். அவற்றுள் சமீபத்தில் நடந்த ஒன்று:—

"நாட்டில் பகுத்தறிவின்மையும், மூட நம்பிக்கையும், அநியாய புத்தியும், ஜாதித்துவேஷமும், மத வெறியுந்தான் நமக்குப் பெரும் விரோதிகளாக விருக்கின்றன. கடல் கடந்து இங்கு வந்து அதிகாரம் செலுத்தும் அன்னியரின் குரோதத்தைவிட மேற்சொன்ன விரோதிகளின் குரோதம் அதிகமாக விருக்கிறது. இத்தக்கொடுமைகளை ஒழித்தாலொழிய நமக்குச் சுதந்தரம் கிடைக்கப்போவதில்லை" என்று உலகப் பெரியாரும், அறிவிற்சிறந்தவரும் உலக கவியும், உலகம் போற்றும் பரிசு பெற்றவருமான கவி ரவீந்திரர் அவர்கள் காந்திஜியின் பிறந்த நாட்கொண்டாட்டத்தின்போது காந்திஜீ அவர்களுக்கு செய்தியனுப்பியுள்ளார். "அந்நிய அரசாங்கத்தின் தீமை ஒரு பெரிதல்ல; மேற்குறிப்பிட்ட கொடுமைகள் தான் பெருந்தீங்காகும் எனவே இதை அழிக்கவேண்டியதுதான் முதல் வேலை" என்று நமது கவி ரவீந்திரர் அவர்கள் அழுத்தந்திருத்தமாக அறைந்தது தேசிய வாதிகளின் செவியிலேறுமா? என்பது தான் சந்தேகம், அந்நியர் கடல் கடந்து இவண் போந்து அதிகாரம் செய்வதால், நமது குடி முழுகிப் போய்விடாது, நம்மிடமுள்ள பாழான கொடுமைகளால் தான் நாம் கீழ் நிலையடைவோம் என்னும் கவிகளின் பொன்னுரையைக் கேட்டு புத்தி பெறுவார் எவரெனவே யோசிக்கவேண்டியிருக்கிறது. மேலும், நமது விரோதிகளைக் கவிகள் சுட்டிக்காட்டி யிருப்பது, நாம் என்றும் மறக்காமல் மனத்திலிருத்த வேண்டியது முக்கியமானதாகும். "மூட நம்பிக்கை, அநியாய புத்தி, ஜாதித்துவேஷம், மத வெறி" இவைகள் நமது விரோதிகளே யென்பதில் தடையேது முண்டோ? நமது பக்கத்திலுள்ள விரோதிகளைக் கொழுக்க விட்டு விட்டு ஆறாயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் விரோதிகளைப் பற்றிப் பேசுவதில் யாதும் பயனில்லையென்பதைக் கவி ரவீந்திரரின் அமுத மொழிகள் தெளிவாக விளக்கிக் காட்டி விட்டன.

சுயமரியாதை இயக்கம் அந்நாள் தொட்டு இந்நாள் வரை சொல்லி வருவதும் அதுவே யாகும். மூட நம்பிக்கையால் நம் மக்கள் படும் இன்னல்கள் எண்ணெழுதி முடியுந்தரத்ததோ? இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பிள்ளைகலி தீர்க்கவும், பிணியை நீக்கவும், மசூதான் சாயபுவை நாடிமதியிழந்து நிற்பது மூட நம்பிக்கையல்லாது வேறென்னவென்று கேட்கின்றேன்? பிள்ளை உண்டாவதற்கும், மசூதான் சாயபுவிடம் மண்டி போடுவதற்கும் என்ன சம்மந்தமென்பதை யோசித்துப் பார்க்க நமது மக்களுக்கு நேரமில்லாது, மூளையில்லாது அல்லவோ போய் விட்டது, பணத்தையும் பாழாக்கி, அறிவையும் குட்டிச்சுவராக்கி, மனிதத் தன்மையையும், இழக்கச் செய்யும் கொடுமைகளைத் தான் அடியோடு ஒழிக்க வேண்டுமென உரைக்கின்றோம். இதைத் தவிர வேறொன்றும் வெட்டி முறிக்கச் சொல்லவில்லை. இதற்குத்தான் வைதிகப் புலிகள் நம்மேல் பாய்ந்து விழுகின்றார்கள். நிற்க சண்டாள ஜாதித் துவேஷத்தால் இன்று நம் நாடு இருக்கும் நிலைமையை எவ்வாறு எடுத்துரைப்பது? மக்கள் கூட்டத்தில் பிறந்தும், மலத்தினும் பன்றியை விடக் கேவலமாக மதிக்கப்படுவது, இன்றும் மதிக்கப்பட்டு வருவது எவ்வளவு அநியாயம்? அந்நிய நாட்டாரிடம் சுதந்திரம் கேட்க, ஆசைப்படுகின்றோமே, அதற்காக, "சுதந்திரப் போர்" தொடுக்கின்றோமே, அது போல் நம் நாட்டில் பிறந்து, நம்மிடை உலாவி, நம்முடனிருக்கும் சகோதரர்கள், தங்கள் அடிமைத் தனத்தை உதறித் தள்ளி, மனிதத் தன்மையோடு வாழ, நம்மிடம் சுதந்திரம் கேட்க என் ஆசைப் படமாட்டார்கள்? அப்படிக் கேட்கப் படுவதில் என்ன தவறு? அதை நாம ஆதரிப்பதில் வருந்திக்கென்ன? என்பதை சுயராஜியம் கேட்கும் அன்பர்கள் சிந்தித்துப் பார்க்காதது ஏனோ தெரியவில்லை! நிற்க, மேல் நாட்டிலுள்ள அறிஞர்களுக்கு நமது இயக்கம் தெரிய வழியில்லாதிருப்பது பெருங்குறையாகும், ஏனெனில், நமதியக்கப் பத்திரிகைகள் யாவும் தமிழிலேயே நடை பெறுவதால், ஆங்கிலம் படித்தவர்கள் நமது பத்திரிகைகளைப் படித்து நமது கொள்கைகளை அறிய வசதியில்லை. சந்தடி சாக்கில் இச்சங்கதியைப் புகுத்தியது பற்றி வாசகர்கள் மன்னிப்பார்களாக! இது பற்றி அடுத்த கட்டுரையில் விபரமாக வரைகிறேன். நிற்க, கவி ரவீந்திரர் அவர்கள் சுட்டிக் காட்டியதில் "மதவெறி"யானது அதி முக்கியமானதாகும். மதவெறியால், நமது நாட்டில் கொள்ளைகளும், கொலைகளும், விபசாரமும் கூட நடைபெற்று வருகின்றன. எனவே மக்கள் முற்போக்கை மறித்துக் காட்டுமிராண்டித் தனத்தில் கொண்டு போய் விடும் மத வெறியை நமது விரோதிகளில் ஒன்றாகக் குறிப்பிட்டதிலும் நாம் மதங்களை, மதவெறியை ஒழிக்க வேண்டுமென்று கூறி வருவதிலும் குற்றமென்ன விருக்க முடியும்? கவி ரவீந்திரர் அவர்கள் சாதாரண மனிதரல்ல; உலகத்தின் ஒப்பற்ற அறிஞர். அவர்களை அம்மாதிரி கூறும்படி, சுயமரியாதைக் காரர்கள் தூண்டி விடவில்லை. நாம் உண்மைச் சுதந்திரம் பெற வேண்டுமானால் கவிகளின் கருத்தை ஆதரித்தே தீர வேண்டும். வருணாச்சிரம தர்மத்தை ஆதரித்து வரும் திரு. காந்தியவர்களுக்கு கவிகளின் அறிவுரைகள் கருத்தில் பதிந்திருக்குமென நாம் எவ்வாறு உறுதி கூறுவது? தேசிய வாதிகள் கவி ரவீந்திரின்கர்ஜனையை செவியில் போட்டுக் கொள்ளப் போவதேயில்லை. சுயமரியாதை இயக்கம் சுமார் ஏழு வருட காலமாய் இடித்திடித்துரைத்து வருகின்றனவே யார் உண்மை நிலையுணர்ந்து பகுத்தறிவு பெற முன் வருகிறார்கள்? இன்று பெண்ணுலகம் சாரதா சட்டத்தாலுண்டாகும் நன்மைகளை அடைய முடியாது தவிப்பது ஏதனால்? மத வெறியே யன்றோ? மக்கள் முற்போக்கிற்கு, இந்திய நாட்டின் விடுதலைக்கு, மதங்கள் ஒழிந்தேயாக வேண்டும், ஜாதி துவேஷம் அழிந்தே தீரவேண்டும். இதில் சந்தேகம்சற்றுமில்லை. நமக்குசுதந்திரம் கிடைக்கும் வழியை சுட்டிக் காட்டிய கவி ரவீந்திரர் அவர்களின் செய்தி தேசிய வாதிகளின் செவியிலேறுமா? ஏறாவிட்டாலும் உண்மை கண்ட கவி ரவீந்திரருக்கு நமது பாராட்டு உரியதாகுக.

பண்டிகைகள் ஒழிந்தால் பகுத்தறிவு வளரும்.

காந்தியின் தந்திரம்.

முஸ்லீம்களோடு ரகசிய ஒப்பந்தப்பேச்சு

வட்டமேஜை மகாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் பிரதிநிதிகளாக விருக்கும் டாக்டர் பி. ஆர். அம்பத்கார், திரு ஆர். சீனிவாசன் ஆகிய இருவரும் திரு. காந்தியைப் பற்றி 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகைக்கு, அடியில் வருமாறு எழுதியிருக்கின்றனர்:-

இந்திய வட்டமேஜை மகாநாட்டின் மைனாரிட்டிகளுடைய உட் கமிட்டியினரின் தனிக்கமிட்டிக்கூட்டம் எதிர்பார்த்தபடியே தோல்வியடைந்துவிட்டது. சமரசப்பேச்சு முறிந்து போனதற்கு சில மைனாரிட்டிகள் மீது திரு காந்திகொண்டுள்ள துவேஷமும், நியாயமற்ற முறையில் அவர்கட்குள்ளே பேதங்காட்டவேண்டுமென அவர் வற்புறுத்துவதும் முக்கியகாரணங்களாகும்.

இரு பாதுகாப்புகள்.

மைனாரிட்டி என்ற முறையில் தாழ்த்தப்பட்டவர் சார்பாக நாங்கள் இரு பாதுகாப்புகளைக்கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

(1) உயிர், சுதந்திரம், சொத்து ஆகியவற்றின் பாது காப்புக்கான உத்தரவாதத்துடன் தீண்டாமை, தீண்டாமையிலிருந்து தோன்றும் ஏனைய குறைபாடுகள் ஆகியவற்றினின்றும் விடுதலையையும் அளிக்கும் மூலாதார உரிமைகள்.

(2) நிர்வாக சபையோ அன்றி சட்ட சபைகளோ எங்கள் நலத்துக்கும் உரிமைகட்கும் மோசம் உண்டு பண்ணுதிருக்குமாறு பாது காத்துக் கொள்வதற்காக சட்ட சபைகளில் தனிப்பிரதிநிதித்துவம் அளித்தல்.

காந்தி பதில்.

முஸல்மான்கட்கும், சீக்கியர்கட்கும் திருகாந்தி இவ்விரண்டுபாதுகாப்புகளையும் பூரணமாகக்கொடுக்க இணங்குகிறார். ஆனால் தாழ்த்தப்பட்டவர்கட்கு, தனிப்பிரதிநிதித்துவ நன்மையை அளிக்க மறுக்கிறார். தனிப்பிரதிநிதித்துவ விஷயத்தில் தாழ்த்தப்பட்டவர், சீக்கியர், முஸ்லீம் ஆகியவர்கட்கிடையே அவர் பேதம் பாராட்ட என்ன நியாயமிருக்கிறதென்பதை எங்களால் உணரமுடியவில்லை. அவர் தாழ்த்தப்பட்டவர்கட்கு நபர் வாக்குரிமை யளிப்பதாகக் கூறி இடை மூடப்பார்க்கிறார். ஆனால் இத்தகைய பேதங்காட்டும் கொள்கையிலடங்கியுள்ள அற்பத்தனத்தை இது குறைத்துவிட முடியாது. ஏனெனில் நபர் வாக்குரிமை தாழ்த்தப்பட்டாருக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. அது உலகம் ஒட்டுக்குமே கொடுக்கப்படுகின்றது. ஆகவே அது தாழ்த்தப்பட்டார் நிலையை எவ்விதத்திலும் மாற்றிவிடாது.

பாரபட்சம்.

இனி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு நபர் ஓட்டுரிமைமட்டும் போதுமானால் முஸ்லீம்களுக்கும், சீக்கியர்கட்கும் ஏன் அதுமட்டும் போதாது? சீக்கியரும முஸ்லீம்களும் பொருளாதாரத்தில் மிகுந்த பலமுடையவர்களாகவும், சமூகத்தில் நல்ல கட்டுப்பாடுடையவர்களாயும் வாழ்க்கை உரிமைகளைத் தாராளமாக அனுபவிப்பவர்களாயமிருக்கின்றார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களோ இம்மூன்று துறைகளிலும் மிகமோசமான நிலையிலிருப்பதோடு ஏனையோரால் மிகக் கொடுமையாகவும் நடத்தப்பட்டுத் துன்புறுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள்;

வேறு எதையும் கவனியாது நிர்தாட்சண்யமானதுடன் விசாரணை செய்து தீர்ப்புச்சொல்வதாயிருந்தால் வேறு எந்த சமூகத்திற்கும் முன்னதாக தாழ்த்தப்பட்டவர்களுடைய கோரிக்கைகளையே முதலாவது ஒப்புக்கொள்வார் என்பதில் எங்கட்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. (இஞ்சிற்றும் சந்தேகமிடையாது.)

ஹிந்தி ஆதிக்கம்.

திருகாந்தி இதை ஒப்புக்கொள்ளாவிட்டால் அதன் நியாயத்தை அவர் உணரவில்லையென்பதல்ல. முஸ்லீம்களையும் சீக்கியர்களையும்போன்று தாழ்த்தப்பட்டவர்கள் டில்லிக்கு எதிர்த்துச்செல்ல மாட்டார்களென்ற முழு நம்பிக்கையை அவர் கொண்டிருப்பதும், அவரது தேசாபிமானத்தை ஜாதி இந்துக்கள் மீது அவர்கொண்டுள்ள அக்கரை பறிமுதல் செய்து விட்டதுமே இதற்குரிய காரணங்களாகும். அரசியலாதிக்கத்தில் முஸ்லீம்களும், சீக்கியர்களும் தங்கள் தங்கள் பாகத்தைப் பெற்றதுபோக மீதியிருப்பதை எந்தவிதத்திலும் ஜாதி இந்துக்களுக்காகப் பாதுகாக்கவேண்டுமென அவர் விரும்புகிறார்.

தாழ்த்தப்பட்டவர்மீது தாம் கொண்டுள்ள கருத்தை தாம் இந்தியாவிலிருக்கும்போதே வெளியிட்டிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களின் தனிப் பிரதிநிதித்துவ கோரிக்கைகட்கு விரோதமாக அவர் இருக்கிறாரென்று தாழ்த்தப்பட்டவர்கள் ஒரு தடவைகூட சந்தேகிக்க இடங்கொடுக்கவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுடைய இந்தக்கோரிக்கையைத் திரு காந்தி அறியவில்லையென்று சொல்லமுடியாது. அவர் இந்தியாவிலிருக்கும் போது தமது கருத்தைச்சொல்லியிருந்தால் திரு. காந்திக்கு அதிகப் பெருமை கிடைத்திருக்கும். ஒருவேளை, இவ்விஷயத்தில் முழு மௌனஞ்சாதித்து திரு காந்தியும் காங்கிரசும் தங்கள் கோரிக்கைகளுக்கிணங்குகிறார்களென்ற நம்பிக்கையை தாழ்த்தப்பட்டவர்கள் கொள்ளும்படி செய்தது அவரது தந்திரமாக இருக்கலாம்.

தாழ்த்தப்பட்டவர்மீது விரோதம்.

தாழ்த்தப்பட்டவர்மீது திரு.காந்தி கொண்டுள்ள கருத்தின் நியாயமற்ற தன்மையை விளக்கத்தக்க மற்றொரு அதிசயமான சம்பவத்தையும் பொது ஜனங்கள் கவனத்துக்குக்கொண்டு வர விரும்புகிறோம்.

ஒவ்வொரு நாளும் தான் தோல்வியுற்றதாக அவர் அங்கத்தினர்களிடம் சொல்லுவது வழக்கமாக இருந்தது. ஆனால் தாம் தோல்வியுற்றதின் காரணங்களை அவர் ஒருபொழுதும் வெளிப்படுத்தவில்லை, முஸ்லிம்கள் தங்கள் 14 கோரிக்கைகளையும் காந்தி காங்கிரஸ் திட்டத்தையும் விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டிருந்ததே தோல்வியின் காரணமென அவர்கள் கருதும்படி செய்தார்.

முஸ்லிம்களுடன் ரகசிய ஒப்பந்தம்.

முஸ்லிம்கட்குக் கொடுக்கப்படும் விசேட உரிமைகட்காக நாங்கள் சிறிதும் வருத்தப்படவில்லை. ஏனெனில் அவை முற்றும் நியாயமானவைதான் என நம்புகின்றோம்.

ஆனால், முஸ்லிம்களோடு ஒரு சமரஸ முடிவுக்குவர காங்கிரஸ் கட்டளையையும் திட்டத்தையும் மாற்றவோ திருந்தவோ அல்லது உடைத்துவிடவும்கூட திரு. காந்தி தயாராயிருக்கும் பொழுது, தாழ்த்தப்பட்டார், சிறிய மைனாரிட்டிகள் ஆகியோர் முகத்தில் அவற்றை வீசுகிறார் என்பதுதான் எங்கட்கு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

இந்த சம்பவங்கள் எங்கட்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியபோதிலும், எங்களுடைய கோபத்தைக் காட்டுவதற்காக இந்தப் பத்திரிகையில் இடம் கேட்கவில்லை. ஆனால் தனிப்பிரதிநிதித்துவம் பெற தாழ்த்தப்பட்டவர்களுடைய கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படுவதற்கு நாங்கள் செய்யும் முயற்சிகளை தோற்கடிக்க திரு.காந்தி என்னென்ன முறைகளைக் கையாளுகின்றார் என்பதைப் பொது ஜனங்கட்கு அறிவிக்கவே இங்கு இடம் கேட்கின்றோம். நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் பிரதிநிதிகளாயிருப்பதால் எங்கள் விஷயத்தில் குறும்புத்தனம் செய்யப்படுவதைத் தடுக்க தக்க காலத்தில் நாங்கள் முயற்சிக்காவிட்டால் நாங்கள் எங்கள் கடமையினின்றும் தவறியவர்களாவோம்.

தனிக்கமிட்டியில் காங்கிரஸ் கட்டளைப்படி ஒவ்வொரு முறையும் திரு காந்தி எங்கள் கோரிக்கையைத் தொடர்ச்சியாக எதிர்த்தார். தமக்கு மேலாகவுங்கூட தமது எதிர்ப்பைச்செலுத்த திரு. காந்தி முயற்சிப்பார் என நாங்கள் ஒருபோதும் சந்தேகிக்கவில்லை.

முஸ்லிம்கள் மறுப்பு.

நமது முஸ்லிம் நண்பர்களுடன் அவர் நடத்திய ஒப்பந்தப் பேச்சுகளில் முஸ்லிம்களுடைய 14 நிபந்தனைகளுக்கிணங்க வேண்டுமானால், வேறுபல நிபந்தனைகளுடன், தாழ்த்தப்பட்டவருடையவும், சிறிய மைனாரிட்டிகளுடையவும் கோரிக்கையை முஸ்லிம்கள் எதிர்க்கவேண்டுமென திரு. காந்தி கேட்டதாக எங்கட்கு ஆதாரத்துடன் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தங்களுடைய சொந்த நலத்தையும் விட்டு இத்தகைய ஆபாசமான ஒப்பந்தத்துக்கு இசைய முஸ்லிம் நண்பர்கள் மறுத்துவிட்டதற்கு நாங்கள் நன்றிசெலுத்துகின்றோம்.

தாழ்த்தப்பட்டவர்களுடைய நண்பராக நடந்துகொள்ளாமலிருப்பது மட்டுமின்றி ஒரு நாணயமான எதிரியாகக்கூட திரு.காந்தி நடந்துகொள்ளவில்லை. வெளியில் "மற்ற எல்லாரும் இசைந்துகொண்டால் நானும் இணங்குகிறேன்" என்று சொல்லுவதும், மற்றவர்கள் இசையாமலிருக்கும்படி அவர்களை 'விலைக்குவாங்க' ரகசியமாக வேலை செய்வதும், தாழ்த்தப்பட்டவர்களின் மூர்க்கமான எதிரியிடம் எதிர்பார்க்கத்தக்க குணமேயன்றி ஒரு 'மகாத்மா'வின் குணத்திற்கு ஒத்ததல்ல வென்பதே எங்களது அபிப்பிராயம்.

திரு.காந்தியின் எதிர்ப்பினால் நாங்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. ஏனெனில் எங்கள் கோரிக்கையின் நியாயத்தில் எங்களுக்கு நம்பிக்கை யிருக்கிறது. ஸர் மிட்ஜ் பகதூர் ஸாப்ரூ, ஸர் ஏ. பி. பாத்ரோ, மேன்மைதங்கிய ஆகாகான் ஆகிய பிரதிநிதிகளுடைய நேர்மையிலும், எங்கட்கு நம்பிக்கையிருக்கிறது. சுமார் 6 கோடிப்பேரிருக்கும் எங்களை தீண்டப்படாதவர் என நிந்தித்து ஒதுக்கி வைத்தும் ஒரு சமூகத்தின் கையில் நாங்கள் அணுகுவது இழிவென்றும், நாங்களிருப்பது தீட்டு என்றும் கருதும் ஒரு சமூகத்தின் கையில், தனிப்பிரதிநிதித்துவப் பாதுகாப்பின்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டு ஒப்படைக்காது என்பதிலும், நாங்கள் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறோம். (சண்டமாருதம்.)

சுயமரியாதைத் திதி.

கோணப்பாதை கிராமத்திலிருக்கும் திரு. முத்துப்பண்டிதர் தகப்பனார் திரு. தேவராய பண்டிதர் திதி 10-10-31-ல் அன்று மூடப்பழக்க வழக்கங்களை அறவே ஒழித்து ஏழைகளுக்கும் நண்பர்களுக்கும் அறுசுவை உணவளித்து அன்னாளை நன்னாளாகக்கொண்டாடினாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

திரு. கே. ஏ. பண்டிதர்

மலேயாவில் நான்கு ஐந்து ஆண்டுகளாய் நமது சுயமரியாதைப் பிரசாரம் செய்துவந்த திரு. கே. ஏ. பண்டிதர் சென்ற இரண்டுமாதங்கட்குமுன் தமது தாய்நாடு வந்தவர் 4-10-31ந் தேதி கப்பலில் மலேயா சென்றாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சரியாய் வந்திக்கத்தக்க கோட்டாறு மேற்றிராசனத் தலைவர் அவர்களிடம் ஓர் வேண்டுகோள்.

(ரூபதைக் கிறிஸ்தவன்.)

ச. வ. ஆண்டவர் அவர்களே!

தாங்கள் மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பட்ட நாளில், அபிஷேகம் செய்த ஆதிமேற்றிராணியார் அவர்களிடம் முழங்காலிலிருந்து வாசித்துக்கொடுத்த சத்தியத்தில் "மூன்று வருஷத்துக்கு ஒருதரம் நேரில் போய்ப்பாப்பானவரைத் தரிசித்து மேற்றிராணியார் உத்தியோகத்துக் கடுத்த நிலைகளிலும், எனது சபைக்குரிய காரியங்களையும், குருப்பிரசாதிகள் கிறிஸ்தவர்களிடம் விளங்கும் ஒழுக்கத்தைப்பற்றியும், என்னுடைய பாதுகாவலில் வைக்கப்பட்டிருக்கும் ஆத்துமங்களின் நன்மை தின்மைகளைப் பற்றியும், நமது ஆண்டவராகிய பாப்பானவருக்கும் அவருக்குப்பின்னுல் அவரிடத்திற்கு வருபவர்கட்கும் நான் கணக்குக் கொடுப்பேன்" என்று காணப்படுவதால், பரிசுத்த பாப்பரசரைத் தரிசிக்கச்செல்லுங்காலத்தில், தாங்கள் கொடுத்த சத்தியத்தின்படி, தங்கள் கீழிலுள்ள குருப்பிரசாதிகள் பலர் தங்கள் பாதுகாவலில் வைக்கப்பட்ட ஏழைக் கிறிஸ்தவர்களை கல்வியிலும், செல்வத்திலும் முன்னேற விடாமல் மதக்கட்டளையால் அடிமைப்படுகுழியில் ஆழ்த்திப் பலவிதமான துன்பங்கள் செய்துவருவதையும், அப்பாமர மக்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருப்பணங்களையெல்லாம் அவ்வேழை மக்களின் நன்மையின் பொருட்டு செலவிடாமல் தம் மனம் போனபடி வீணான ஆடம்பரங்களிலும், பயனற்ற காரியங்களிலும் செலவிட்டு அவர்களை வறுமையாளராக்கி வருவதையும், ஏழைகள் கஷ்டப்பட்டு சம்பாதித்துக்கட்டிய கோவில்களும், தேடிய சொத்துக்களும் குருமார்களாகிய எங்களுக்குத்தான் சொந்தமேயல்லாமல் உங்களுக்கு அவகாசமில்லை என்றும், எங்களுக்குத் தேடித்தருவது உங்களது கடமையும் மதக்கட்டளையுமாகும் என்றும், அங்ஙனம் யாராவது மறுத்துக்கூறவோ, செய்யவோ ஆரம்பித்தால் அவர்கள் சாபத்துக்குள்ளாவார்கள் என்றும், நரகத்திற்குப்போவார்கள் என்றும், எடுத்துக்கூறிப் பயமுறுத்தி பாமரமக்களை ஏமாற்றிக் காலங்கழித்துவருவதையும், உண்ண உணவும், உடுக்க ஆடையும், இருக்க வீடும் சரியாயில்லாமல் மதுவரிக் கொடுமையாலும், மூடப்பழக்க வழக்கங்களாலும் வறுமையடைந்து வாடும் ஏழைக்கத்தோலிக்கர்களை முன்னேற்றுங்களென்று கூறும் அறிவுடைய மக்களை பலவிதமான வழிகளில் துன்பப்படுத்த பல குருமார்கள், தம்மாலான சூழ்ச்சிகள் செய்து வருவதையும் சில குருமார்கள், உயர்ந்த கல்வியறிவைப் பெறுதவர்களாகவும் சிலர் கிறிஸ்தவர்களிடம் தம்பதவிக்குமாறாக ஒழுகி வருகிறவர்களாகவும் இருந்துவருவதையும், அப்படிப்பட்ட குருமார்களால் ஏழைக் கத்தோலிக்கர்கள் அடையும் துன்பங்களையும், மறவாமல் நம் பரிசுத்த பாப்பரசரிடம் எடுத்துக்கூறி விவரமான கணக்குக் கொடுக்கவும், துறவிகளான மதகுருக்கள் எம் ஏழைக்கிறிஸ்தவர்களுக்கு இலவசமாக மதச்சடங்கு முதலியவற்றைச் செய்து கொடுக்கவும் ஜனங்களின் பொது சொத்துக்களையும், பொதுக் கோவில்களையும் அவர்களிடமே விட்டுக்கொடுக்கவும், ஜனங்களை அன்பாலும் அறிவாலும் ஆளவேண்டுமே தவிர அதிகாரத்தால் ஆளக்கூடாதெனக் கண்டிப்பாய் கட்டளை கொடுக்கவும், குற்றம் செய்யும் குருமார்களை உடனடி மாற்றித் தக்க தண்டனை கொடுக்கவும், மற்றமதங்களைச் சேர்ந்த சமுதாயத்தார்களைவிட மிகவும் தாழ்ந்த நிழமையிலிருக்கும் ஏழைக் கத்தோலிக்கர்களை முன்னேற்ற ஓர் சரியான மார்க்கம் கண்டுபிடித்துக்கொடுக்கவும் திருச்சபைத் தலைவரிடம் தாங்கள் மன்றாடிக் கேட்டு உத்தரவுபெற்று வரும்படி எம் ரூபதைத் தலைவரான ஆண்டவரைமிகவும்வணங்கிவேண்டுகிறோம்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டுவந்தது தெய்வங்களையும்குணங்கள் நிறைந்த குருமார்களையும், அம்பிட்டுக்கொன்று அகற்றிய வீரம்தநம்பி நின்று நத்தனிக்கும் ரஷியாவாகிய இந்நாட்டிய, விவாகவிடுதலை வழங்கிவருவது நம் போன்றவருக்கு ஒருக்காலும் இறும்பூது பயக்கும் இயல்பினது ஆகாது! அஃதா, அன்று. எண்ணிய எண்ணியாங்கு எவரும் மணம் இயற்றுதற்கும், அம்மணம் தம்மனம் விரும்பிற்று. இன்றேல் மறு நிமிடமே அக்கட்டினை இக்கட்டின்றி அறுத்தெரியவும் ரஷிய தேசமக்களுக்குச் சுதந்திரம் உண்டு. இங்ஙிமிடைய ஓர் மணம் இயற்றிப் பதிவுசெய்து, அம்மணம் நிகழ்த்திய மகிழ்வும் மனத்தினின்று மாறுகிருக்கும் மறுநிமிடமே அம்மணத்தை ரத்துசெய்துகொள்வதும் வெகு சகஜம் என அந்நாட்டினை அறிந்தோர் அறைகின்றனர். இத்தகைய நிலை அந்நாட்டின் மக்கள் பொதுவாகப் பெற்றுள்ள சுதந்திரத்திற்கும், சுயேட்சைக்கும், அந்நாட்டின் பெண்டிர் சிறப்பாகப் பெற்றுள்ள சிறுக்கும் ஒவ்வியதாயிருப்பினும், பிற நாட்டினர் இதைக்கண்டு மனம் பதைத்து நடுங்குகின்றனர். இவ்வாறு மனம்போன போக்கெல்லாம் மனம் போகவேண்டும் என்று நாம்டேயாகும். ஒருக்காலும் கூற முன் வரவில்லை. மற்றும் ரஷியா தேசத்திலிருக்கும் இத்தீவிரமான விவாகவிடுதலை முறையை நம் தேசத்தில் புகுத்தவேண்டுமெனவும் நாம் புகலவுமில்லை. ரஷியாவிலிருக்கும் விவாகரத்து முறை நன்மை பயக்கும் என்று சிலர் எவ்வளவு கருதினலும், நம்மைப்பொருத்த மட்டில் நாம் அதைப்பற்றி அதிக மகிழ்ச்சியுடன் பாராட்டவோ, அதை நாமும் பின்பற்றவேண்டுமென்று கூறவோ முடியாது. ஏனெனில் 'அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சு' என்ற தமிழ்ப்பழமொழிக்கு நேரான லத்தீன் பழமொழியில் (*Summun jus summa injuria*) நமக்கு நம்பிக்கையுண்டு. சமூகக் கட்டுப்பாட்டை நிலை நிறுத்துவதில் நாம் மதவாதிக்குச் சற்றும் பின்தாங்கியவரல்லோம். ஆனல் நாம் இதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டிய பேரும் ரகசியம் ஒன்று உள்ளது என்பதை மட்டும் நாம் நம் நாட்டுமக்களுக்கு அறிவுறுத்த அவாவுகின்றோம். சீர்திருத்தம் என்பது ஓர் பெரும் வெள்ளத்தைப் போன்றதாகும். தென்னிசைப் புலவர் [*Lord Tennyson*] பாடிய 'அருவி' என்னும் பாட்டில் "மக்கள் வரலாம் மக்கள் ஏகலாம் எக்காலும் நான் ஏகாநிற்பன்" [*Men may come and men may go, But I go on for ever*] என்று அவ்வருவி வெள்ளம் கூறுவதைப்போல் பாடும் இயல்புடையது 'சீர்திருத்தம்' என்பது அவ்வாறு மனிதன் விரும்பினும் விரும்பாவிடினும் இன்றியமையாததும், அடக்கமுடியாதும் வரும் பாற்றதாம் புதியது. அவ்வாறு 'பழையன கழிந்து புதியன புகுதலும் வழுவல கால வகையினனே' என்றும் கூறியுள்ளார் பவணந்தி முனிவர். ஆக, இவ்வாறு நம் முயற்சியில்லாமலும் வரக்கூடிய இச்சீர்திருத்தத்தை ஒரு தேசத்து மக்கள் எவ்வளவுதூரம் தம் அறிவையும், அனுபவத்தையும் துணைக்கொண்டு சீர்படுத்தி உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றார்களோ அவ்வளவுக்கு அவர்கள், அவ்வாறு செய்யமுடியாது.

மடமைக் குன்றிலிருந்து மதக்கள் பருகி கானாவிருந்து வீண் வருத்தம் அடையும் மற்றொரு தேசமக்களைக் காட்டிலும் மேம்பட்டவர் ஆவர். விவாகரத்து என்னும் சீர்திருத்தம் கிறிஸ்துவ தேசங்களைப் பொருத்த மட்டில் ஏறக்குறைய முதன் முதலில் கையாளப்பட்ட தேசங்களில் இங்கிலாந்து ஒன்று. அவ்வாறு அச்சீர்திருத்தத்தின் நன்மையையுமே யன்றி இன்றியமையாமையையும் நன்குணர்ந்து அதையணிவகுத்து சமூகத்தில் ஏற்றுக்கொண்ட இங்கிலாந்து முதலிய தேசங்களில் விவாகரத்து முறை, ரஷியாவைப்போலில்லாமலும் அளவுக்கு மீறுமலும், இன்றும் இருந்து வருகின்றது. இதற்குக்காரணம் தக்காலத்தில் தக்க வகையில் இம்முறையைக் கையாண்டதேயாகும். ஆனல் கிறிஸ்துவ மதம் பரவிய நாள்தொட்டு 1917வது ஆண்டுவரை இயல்பாகவே வரும் சீர்திருத்தங்களை புகுத்தாமல் ஒவ்வொன்றையும் எதிர்த்தும் விலக்கியும் வந்த ரஷியா தேசத்தில். புரட்சிக்குப்பின் திடீரென இவ்விவாகரத்தைப் புகுத்தவே அது நெடுநாள் கட்டுண்டிருந்த அந்நாட்டு மக்கள் மனத்தை வெகுவேகமாய் இழுத்து சீர் குலைக்க ஏதுவாயிற்று. விவாகரத்துச் சீர்திருத்தமாகிய இப்பெரும் வெள்ளத்தை இது நாள்வரை அடைத்து வைத்திருந்த பேரும் அணையாகிய 'மதம்' திடீரென்று நீக்கப்பட்டவுடனே அவ்வெள்ளம் எண்ணரும் வேகத்துடன் குபீரென்று பாய்ந்து நாட்டைக் கெடுத்துவிட்டது. இத்தகைய காட்சி மிகவும் இயல்பே; இது ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடியதும் அன்று. இதேபோன்ற நெடுநாள் தாமதிக்கப்பட்டு நேற்றுப் புகுத்திய இவ்விவாகரத்துமுறை ஸ்பெயின் தேசத்திலும் ரஷியாவைப்போலவே அதி தீவிரமாகக் கையாளப்படநேருமாயின் நாம் அதைக்கண்டு ஆச்சரியப்படோம். ஆக நாம் இது காறும் கூறிவந்த காரணக் கூற்றையும் சரித்திர சாக்ஷியங்களையும் கேட்டும்கூட விவாகரத்தின் இன்றியமையாமையை இன்னும் உணராத நம் தேச நேயர்கள், அவர்தம் கண்கூடாகக் காணும் இத்தகைய விபரீதக் காக்ஷிகளைக் கண்டேனும் நம் நாட்டை அத்தகைய நிலைமைக்குக் கொண்டு செல்லாதபடி இங்கிலாந்து முதலிய நாடுகளைப் போல் தக்க காலத்தில் மெதுவாக இச்சீர்திருத்தத்தைச்செய்ய முற்படுவார்கள் என நாம் முற்றிலும் நம்புகின்றோம். காலத்தைக்கண்டு செய்யாராயின் எக்கருமமும் அது நம் கோலத்தைக் குலைக்கும் தன்மையதாம் என்னும் உயரிய உண்மையை உணர்வோமாக.

சுயமரியாதைத் தலைவர்கள்.

நமது இயக்கத் தந்தையாகிய பெரியார் உயர் திரு. ஈ. வெ. ரா. இயக்கத் தலைவர் உயர்திரு. W. P. A. சௌந்திர பாண்டியன் இவர்களின் போட்டோ பேட்ஜ்கள் (Photo Lockets) 1" இஞ்சி $1\frac{1}{4}$" இஞ்சி ரவுண்டு சைஸ்களிலும் உயர் திரு. ராமசாமிப் பெரியார், அவர்களின் டேபிள் போட்டோ (Photo Medallion oval size with Easel) 5"×$3\frac{5}{8}$" சைஸில் ஒவ்வொரு சுயமரியாதை இயக்க அன்பர்களின் டேபிள்களின் பேரிலும் அமர்ந்து உற்சாகத்தை ஊட்டும் முறையில் தயாராகி வந்து விட்டது. விலை விபரங்களுக்கு எழுதவும்.

அ. ப. அர்த்தனாரீஸ்பிரதர், ஜலகண்டபுரம். (சேலம் ஜில்லா.)

தீபாவளி ஓர் தீராப் பொறி.

"கலையுரைத்த கற்பனையே
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம்
மண்மூடிப்போக" என்றார் அறிஞர் வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்.

இத்தகைய போலிப் புராணக் கலைகளின்பயனாய் நிலைபெற்ற கண்மூடி வழக்கங்கள் பலவற்றுள் பண்டிகை என்னுந் தலைப்பிற் சாறுபனவும் ஒன்று. நந்தாய் நாட்டில் இற்றை நாள் எம்மதத்தினராலும், எவ்வகுப்பினராலும், ஏழை பணக்காரரென்ற பேதமின்றிக் கொண்டாடப்படும் பண்டிகைகளுள் அண்மையில் வரும் தீபாவளிப் பண்டிகையுமொன்று. மற்றெல்லாப் பண்டிகைகளையும் விட இஃது சற்றதிகமான பொருளைச் சூறையாடி விரைய மாக்குவதால் இதன் உற்பத்தி வரலாற்றையும், இதைக் கொண்டாடுவதால் ஜனசமூகம் அடையும் பயனையும் பற்றி ஒரு சிறிதாராய்வோம்.

இரணியாக்ஷதன் பூமியைப் பாயாகச்சுருட்டிச் சமுத்திரத்திலொளித்த காலையில், உலகத்துயிர்களைக் காப்பாற்றவான்வேண்டி விஷ்ணு வராகவதாரம் (பன்றியுரு) எடுத்து அவ்வரக்கனைக்கொன்று பூமியை முன்னைய நிலையிலிருத்தினர். அதுகாலை பூமிதேவி "வராகவதார" விஷ்ணுவின் மேலிச்சைகொள்ள, அவர் அவ்வாறே அவளைச்சேர்ந்து நரகாசுரன் என்னுங் குழந்தையை யனுக்கிரகித்தார். அந் நரகாசுரன் மன்னுயிர்களுக்கும் தேவர்களுக்கும் இடுக்கண்பல விளைத்துத் துன்புறுத்தி வந்தமையால் விஷ்ணு கிருஷ்ணாவதாரத்தில் [பூமிதேவியின் அமிசமாகிய] சத்தியபாமையொடு சென்று அவனைக் கொன்றார். உயிர்விடுந்தருவாயில் அவ்வரக்கன் தானிறந்தநாளை யுலகமக்கள் கொண்டாடும் வரம்வேண்ட அங்ஙனமேயீந்தார். அதைக் கொண்டாடுவது தான் இற்றைய தீபாவளி என்பது.

சகோதரர்களே! இவ்வாலாறுஒருசிறிதேனும் பகுத்தறிவுக்கொவ்வுமாறுளதா? என்று பாருங்கள். பூமி உருண்டையா? தட்டையா? அதைப் பாயாகச் சுருட்டுதல் எங்ஙனம்? எங்கிருந்துகொண்டு சுருட்டினன்? பாயாகச் சுருட்டிக் கடலிலொளித்தனனென்னில் கடல் பூமிக்குப்புறம்பாயிருக்கவேண்டுமே? பூமி இன்றிக் கடல் எதனுதரவிலிருக்கின்றது? என்பனபோன்ற வினாக்களெழும்பொழுது வராகவதாரக்கதை ஒரு போலிக் கட்டுக்கதையென் றேற்படுகின்றது. ஆகவே அதை யாதாரமாகக்கொண்ட நரகாசுரவதத்துக்கும் ஹானி ஏற்படுவதிலும், அஃதோர் 'புராணப் புரட்டு' எனப் பெறப்படுவதிலும் ஓர் சிறிதும் ஆச்சரியமின்று.

இனி பூமி வராகத்தை (பன்றியை) விரும்பிச் சேர்ந்து கருவுயிர்த்ததென்றால் பூமி என்ன பெண்ணா? வராகத்தைச் சேர்தலியலுமா? என்னும் கங்கைகளுக்குச் சமாதானமென்ன? விஷ்ணுவுக்கும் பூமிக்கும் பிறந்த குழந்தை தேவர்களுக்கும் இடுக்கண் விளைத்ததென்றால் எல்லாந்தெரிந்த, திரிகாலமுமுணர்ந்த, சர்வக்ஞனாகிய கடவுளுக்கு முன்னமேயே தெரியாதா? தெரியாதென்னில் கடவுள் சர்வக்ஞர் எனக்கூறுதல் பொய்யாமே? இல்லை; தெரிந்திருந்தாரென்னில் தன்னிஷ்டர்களும் பக்தர்களுமாகிய தேவர்களுக்குக் கேடுசூழும் மகனை ஏனருளினார்? என யாரயினும் இக்கதை ஓரபத்தக்களஞ்சியம் என்பது தெற்றென விளங்கும்.

இனி அவ்வரக்கனைச் சம்ஹரித்த வரலாற்றையும் ஆய்குதும். [பூமியின் அமிசமாகப் பிறந்தமுறையில்] தாயாகிய சத்தியபாமையும் தந்தையாகிய விஷ்ணுவும் சேர்ந்து மகனைக் கொன்றனராம்! இதைவிடப் பெரிய கொடுமையையும், காட்டுமிராண்டித்தனத்தையும் யாண்டும் எவ்வுலகத்தும் காண்டலரிதே! இந்நாளை யுவகமே கொண்டாட சர்வவியாபி யான கடவுள் திருவருள் சுரந்திருக்க இவ்விந்திய நாட்டைத் தவிர்த்த ஏனைய நாடுகளில் இவ்விழா நடைபெறாமைக்குக் காரணமென்பன வாராயப் புகுங்கால், உடல் வருந்தி யுழையாது பிறருழைப்பிற் பிடுங்கித் தின்று நுசிகண்ட தந்நலங் கொண்ட வஞ்சகக் கூட்டத்தார் தம் சோம்பற் சுக வாழ்வை யினிது நடாத்தக் கண்டதோர் வழி யென்பது அகங்கை நெல்லிக் கனியென விளங்காமற் போகாது.

தோழர்களே! பண்டிகைகள் எல்லாம் நமது முன்னோர்களால் உழைத்த வுடலுக்கு ஓய்வும் மனச் சந்துஷ்டியு மீதற் கென்றே யேற்படுத்தப் பட்டிருக்கலாம். ஆனால் அந்நல்லெண்ணத்தின் பயனாகிய பண்டிகைகளின் இற்றைய நிலையோ முற்றிலும் மாறுபட்டிருக்கின்றது. உதாரணமாக இத்தீபாவளியின் மிக முக்கிய பாகங்களாகிய 1. நீராடுதல், 2. கோடியுடுத்தல். 3. வெடி வெடித்தல் 4. சிற்றுண்டி கொளல் என்பவை களையாராய்வோம்.

1 நீராடுதல். எண்ணெ ஸ்நானம் மனிதனுக்கு அவசியமானதே; வேடிக்கையின்று எனினும் மதத்தின் பேரால் சடங்கின் பேரால் ஏற்பட்ட பழக்கத்திற்காக முதல்நாள் எண்ணெ ஸ்நானம் செய்தலனும் மறுநாளாகிய தீபாவளியன்றும் செய்ய வேண்டுமென்னும் அவசியமின்று. வழக்கத்திருப்பினும் முறையுமன்று.

2. கோடியுடுத்தல். ஆடை மனிதனுக்கவசியமே. ஆனால் அதுவும் பழக்கத்தின் பேரால் தேவைக்கு மேற்பட்ட ஆடைகளை விருப்பமனும் கூட அன்று கடன் பட்டேனும் கோடி கட்ட வேண்டுமென்னல் அறியாமையே.

3. வெடி வெடித்தல். இது தான் இப்பண்டிகையின் மிக, மிக மோசமான பாகமாகும். கோடிக் கணக்கான குழந்தைகள் குடிக்கப் பாலின்றி, ஐம்புலனுணர்வு குன்றிக் குலைந்து வாட, காலை முதல் மாலை வரை நெற்றி நீர் நிலத்தில் கொட்டியுழைக்கும் ஏழைமக்கள் குடிக்கக் கஞ்சியும், இருக்க இடமும், உடுக்க உடையும் படுக்கப் பாயுமின்றிக் கலங்கித் தவிக்க அவர்கள் பாலிரக்காது வெடிகளைச் சுட்டு கோடிக்கணக்கான திரவியங்களை இந்தியனுரிந்தக் கரியும் மாற்றனுக்குப் பொன்னுமாக்குதல் எத்தகைய மடமை என்பதை யூன்றிப் பாருங்கள். இம்மட்டோ! வெடி சுடுவதால் எத்தனையாயிர மக்கள் கண்ணிழந்தும் காலிழந்தும் அங்க வூனர்களாகின்றனர்? இவைகளை யெல்லா மறிந்தும் நாம் கண்ணிருந்தும் இல்லார் போன்றிருத்தல் மடமை. ஆதலான் இளைஞர்களே! பட்டாஸ்களைப் பகிஷ்கரியுங்கள். அது தான் ஆண்மை; அதுவுடமை. ஆறறிவு பெற்றவனின் கடமையெனத் தேருங்கள்.

4 சிற்றுணவருந்தல். பெரும்பாலும் பண்டிகைகளில் எண்ணைப் பண்டங்களே செய்யப் படுவதால் அவை சுகாதாரத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. பலவித நோய்களுக்கும்மனிதனை அடிமைப் படுத்துகின்றது. தீபாவளி கழிந்த 2, 3 நாட்களுக்கு மருத்துவ சாலைகளைக் கவனித்தவரின் இதனுண்மை விளங்கும் ஆகவே இவ்வழியிலும் இப்பண்டிகை தீமைவிளைக்கச் சிறிதும் பின் வாங்கவில்லை. ஆகவே சகோதரர்களே! நாம் மேலே ஆராய்ந்தவாறு பகுத்தறிவைப் பங்கப் படுத்தி மூடப் பழக்க வழக்கத்துக்கும் குருட்டு நம்பிக்கைக்கும் அடிமையாக்கி, வறுமைப் படுகுழியிற் பஞ்சாப் மெயில் வேகத்திற் கொண்டு சென்றாழ்த்தி, நோய்கள் பலவற்றிற்கும் அச்சாரம் வாங்கித் துன்பத்திற் கடிகோலுவதாயுள்ள இப்பண்டிகையை எவ்வெதிர்ப்புக்கு மஞ்சாது தைரியமாய் பகிஷ்கரியுங்கள். வெகு காலமாய் பெரியோர்கள் கையாண்ட வழக்கமே! அதை விடலாமா? என்றால் வெகு காலமாயில்லா சுயராஜ்யம் நாம் கேட்கின்றோமே! பகுத்தறிவைக் கெடுத்துச் சமூகத்துக் கின்னல் விளைப்பது பெரியோர் சொன்னதாயினும் மதக் கட்டுப்பாடாயினும் கடவுளே திருவுளம் பற்றியதாயினும், போலிப் புராணம் புகழ்ந்துரை யாடினும் பொருட்படுத்தாது அறிவுக்கு மாறாய்ச் சிக்கு விடவ் கொடுத்து அதை யின்றே தவிடு பொடியாக்கிடுவோம். சமூக சேவை புரிவோம். அதுவே நந் தாய் நாடு கோருவது; அதுவே விடுதலை.

குறிப்பு:—இக்கட்டுரை கோவை சுயமரியாதை வாலிப சங்கத்தாரால் துண்டு பிரசுரமாக வழங்கியிருப்பதாகும்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

சீர்திருத்தங்கள் செய்து, அம்மதத்தை ஏண்டிக்ஸ் படுத்திய போதிலும் சரியே, அல்லது வேதங்களை நாம் எவ்வளவுதான் உண்மையென நம்பி, அவைகளை பின் பற்றி, அவைகளையே கட்டிக்கொண்டு அழுதபோதிலும் சரியே, அல்லது நமது கற்பனா சக்தியின் துணையினால் இந்தியாவானது ஆதி காலத்தில் எவ்வளவுதான் உன்னதமான நிலைமையிலிருந்ததாகக் கூறிக்கொண்டே வந்தபோதிலும் சரியே அவைகள்யாவும் இதாதே சத்துருக்கள் இந்தியாவைக்கண்டு மரியாதை செய்யும்படியானநிலைமையையோ அல்லது பயப்படும்படியானநிலைமையையோ ஒருக்காலும் உண்டாக்கவே உண்டாக்காதென்கின்றதான ஓர் தள்ளமுடியாத—தடுக்கமுடியாத முடிவுக்கே தான் வரக்கூடும்.

மக்கள் தங்களுடைய பழங்கதைகளையும், பழைமையான பெருமைகளையும் நினைத்துக் கொண்டும், அவைகளையே கூறிக்கொண்டும் தங்களுடைய வாணாட்களை வீணாட்களாக்காமல், தாங்கள் தற்காலமிருக்கக்கூடிய நிலைமையிலும், தங்களுடைய எதிர்கால வாழ்க்கையிலுமே கண்ணும் கருத்துள்ளவர்களாகவு மிருந்து கொண்டு வருவதற்கும், மரணமடைந்த பிறகு ஆத்மாக்களுக்கு விமோசனமேற்படுகின்றதா? அவ்விமோசன மேற்படவேண்டுமானால் என்னசெய்யவேண்டும் என்பவைகளில் கவலைபூண்டு, தங்களுடைய நேரங்களை செலவழிப்பதை விடுத்து, உயிருடனிருக்கும் இச்சமயத்தில் நாம் எத்தகைய உதவிகளை மற்றவர்களுககுப் புரிந்து, அவர்களுடைய கஷ்டங்களிலிருந்து அவர்களை மீட்கக் கூடும்? என்பதில் கவனம் செலுத்துவதற்கும்; தங்களைப்போல் உயிருள்ள மானிடர்களுக்கு உதவி செய்யாமல், இயற்கையை மீறி அல்லது கடந்து நின்றுகொண்டிருப்பதாகக் கூறப்படுபவைகளுக்கு பயபக்தியுடன் மக்கள் இப்பொழுது நடந்துகொண்டு வரும் தன்மையானது மாறுவதற்கும், மக்களுக்குள் பகுத்தறிவு விருத்தியடைவதற்குமான முறைகளிலேயேமக்களைப்பயிற்றுவிக்கவும் வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவானது தான் நியாயமாகவே அடையவேண்டிய ஓர் நிலைமையை நிரந்தரமாகவும், சாஸ்வதமாகவுமடைய முடியும். தற்காலம் இந்தியாவிலிருந்து வரும் மதங்களையும், ஜாதிகளையும் அடியோடழித்து, நிர்மூலமாக்குவதிலேயேதான் ஒவ்வொரு இந்திய தேசிய வீரனும் தன்னுடைய முழு கவனத்தையும் இப்பொழுது செலுத்திக் கொண்டு வரவேண்டும். ஏனெனில், நாலாவிதத்திலும் அவன் முன்னேறுவதை தடைப்படுத்தக்கூடிய முட்டுக்கட்டைகள் இங்கேதானிருந்துகொண்டு வருகின்றன.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல் ...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ...	0—4—0
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிச்சயிக்கும் சுயவர்கள், யார்? ...	0—2—0
* இயற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள் ...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* ஈ. வெ. இராமசாமியின் போட்டோ படம்	0—8—0
* மாதர் சுதந்திரம். ...	0--10--0
* ஆராய்ச்சி அணிகலம்	0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே! வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளிபாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்ற மேக வாய்வு என்று பெயர் பெற்ற கோடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமாசுவாய்வு, திணரல், கொகஇருமல், க்ஷசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயிற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, சூதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் [விரிக்கிர் பெருகும்] அனந்த மேக வாய்வு ரோகிகளும், 3 நேரம் நம், கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள்பாலியதேஜசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றுவருவது பிரத்தியக்ஷம்.

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருக்கச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் பணம் அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

25 அத்தியாயங்கள் 50 சித்திரப்படங்கள்
200 பக்கங்களடங்கியது.

ஸ்டீம் இன்ஜின்களிலும், ஹைட்ராலிக் முறைகளிலும், ஆயில் இன்ஜின்களிலும், மின்சார சக்தியிலும், காசோலின் மோட்டார்களிலும், 30 வருஷ அனுபவமுள்ள
ரா. கன்னியப்ப நாயக்கர் அவர்களால் இயற்றப்பட்ட

மோட்டார் கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபவப் பயிற்சி முறையும்

இப்புத்தகம் தற்கால நிலையையும், முறையையும், அனுசரித்து, மோட்டாரின் ஒவ்வொரு இயந்திர பாகங்கள், அவற்றில் ஏற்படும் தவறுகள் முதலியவற்றை எளிதில் அறிந்து, மோட்டார் சொந்தக்காரர்களும், டிரைவர்களும், பிறர் உதவியின்றி தாமாகவே பிரித்துப் பழுது பார்த்துச் சரிப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ உதவியானது. இது வரை ரகசியமாயிருந்து வந்த பல அரிய நுட்பங்களை 25 பாகங்களாக 50 படங்களுடன் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தைச் சர்க்கார் இஞ்சினீர்கள் 14 பேர்களும் அநேக நிபுணர்களும் பாராட்டி, சர்டிபிகேட்டு கொடுத்திருப்பதே இதன் மேன்மையையும் உபயோகத்தையும் விளக்கும்.

விலை ரூபா 2-0-0

கிடைக்குமிடம்:-

குடியரசு புத்தகசாலை, ஈரோடு.

குடி அரசு வெளிநாட்டு ஏஜெண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

The Selanger Stamp Co.,
Market Street.

S. S. Abdulkadir,
South Indian Bookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S.

The Central stores
1, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.
'முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சொ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற்கண்ட 6-9-31ந் தேதி குடி அரசில் வெளியான "சத்தி யாக்கிரகமா சண்டித்தனமா என்ற தலையங்கத்தை புத் கருபமாக வெளியிட்டிருக் றோம். இதை விநியோகிக்க வி ப்பமுள்ள சுயமரியாதை அன்ப கள் முன் பணமனுப்பிப் பெ றுக்கொள்ள வேண்டுகிறோம்.

100 புஸ்தகம் விலை 0-12-0

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)
சி. சுவாமி சிவப்பிரகாசம்,
"சன்மார்க்கன்" பழனி.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி … …	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் …	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி

சுயமரியாதை தலைவர்

போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு 0—8—0
டஜன 1-க்கு 6—0—0
$8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ காப்பி 1-க்கு
தபால் செலவுடன் ரூ. 1—4—0
வெளிநாட்டுக்கு ,, 1—8—0
உள். ஷை டஜன் 1-க்கு
தபால்செலவுடன் ரூ. 15—0—0
$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ காப்பி 1-க்கு
வெளிநாட்டுக்கு தபால்
செலவுடன் ரூ. 0—13—0

மற்ற தலைவர்களுடைய படங்களும் கிடைக்கும்.

ஒருகாப்பி வேண்டுவோர் 0-11-0 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 15 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

குறைந்த விகிதத்திற்கு போட்டோபிடித்துக்கொடுக்கப்படும்.

பாலு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,
4நெ கோர்ட் வீதி, ஈரோடு.

கைவல்யம் அல்லது கலைக்யானம்.

விலை அணா 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி அயோத்யாகாண்டம்.

விலை அணா 0—8—0.

கிடைக்குமிடம்—குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

"உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.